தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு எண்: 195.

# சீவக சிந்தாமணி

## அப்பிரமாணை



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல்நிலையம்

1982]

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 185.

# சீவக சிந்தாமணி அம்மானை

பதிப்பாசிரியர் :

புலவர். வீ. சொக்கலிங்கம்,

தமிழாசிரியர்.

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல்நிலையம்,**

தஞ்சாவூர்.

1982 ]

முதற் பதிப்பு : 1982.

*

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூலக நிருவாகக்குழு,
தஞ்சாவூர்.

*

பதிப்பகம் :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம்,
தஞ்சாவூர்.

# முகவுரை

சீவகசிந்தாமணி அம்மானை என்னும் இந்நூல், தஞ்சை மகாராஜா சரபோஜி மன்னரின் சரசுவதி மகால் நூல் நிலையத்திலுள்ள அரிய தமிழ் சுவடிகளைப் பதிப்பிக்கின்ற வரிசையில் 185வது பதிப்பாக வெளியிடப்படுகிறது.

இந்நூல், திருத்தக்கத் தேவர் எனும் சைன முனிவரால் பாடப்பெற்றதும், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றுனது மான சீவக சிந்தாமணி எனும் நூலை முதலாகக் கொண்டு எழுதப்பட்டது. சிற்றிலக்கியங்களுள் அம்மானை வகையைச் சார்ந்தது. ஆங்காங்கே விருத்தங்களிலும் பாடல்கள் காணப்படுகின்றன. எளிய நடையில் நல்ல சந்தத்துடன் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் முடிய 13 இலம்பகங்களைக் கொண்டது. ஒவ்வொரு இலம்பகமும், சீவகனது அரும் பெருஞ் செயற்திறன்களையும், அவனடைந்த வெற்றியினை யும், மணநிகழ்ச்சிகளையும் கூறுவதுடன் அதற்கேற்றவாறு நாமகள் இலம்பகம் போன்ற தலைப்புகளும் கொண்டதாக அமைந்திருக்கிறது.

இந்நூல் சரபோஜி மன்னரின் சரசுவதி மகால் நூலகத்தில் தமிழ்ப் பிரிவிலுள்ள சுவடி எண். 1882 என்ற சுவடியை ஆதாரமாகக்கொண்டு பதிப்பிக்கப்பட்டது என்றாலும் இச்சுவடியில் முதல் இரண்டு இலம்பகங்கள் இல்லாமல் குறையுடையதாக இருந்ததால், திருவனந்தபுரம் காரிய வட்டம் கேரள பல்கலைக் கழகத்திலிருந்து வர வழைக்கப்பட்ட (சுவடி எண். 10366) சுவடியையும்

ஆதாரமாகக் கொண்டு பதிப்பிக்கப்பெற்றது. சுவடி வழங்கிய கேரள பல்கலைக் கழகத்தை சேர்ந்த Oriental Research Institute&Manuscripts Library Director உயர்திரு கே. இராகவன் பிள்ளை, M.A.,Ph.D., அவர்கட்கும் ஏனையோருக்கும் எமது நன்றி.

இந்நூலை பதிப்பித்த, சரசுவதி மகால் நூலகத் தமிழ்ப் பண்டிதர் திரு. வீ. சொக்கலிங்கம் சுவடியிலுள்ள குறைகளை நீக்கி மிகச் சிறப்பாக இந்நூலை பதிப்பித்துள்ளார். அவர் கட்கு எங்கள் நன்றி.

இந்நூலை விரைவில் வெளியிடுவதற்குதவிய நூலகத்தா ரனைவருக்கும் அச்சகப்பிரிவினருக்கும் எங்கள் நன்றி.

இந்நூலையும் இதுபோன்ற பிற நூல்களையும் அச்சிடு வதற்கு அவ்வப்போது பொருளுதவி புரிந்துகொண்டு வரு கின்ற மத்திய அரசினர்க்கு எங்களது நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறோம்.

இந்நூல் பண்டிதர் முதல் பாமரர் வரை யாவரும் எளிதில் படித்து இன்புறும் வண்ணம், எளிய நடையில் சொற்சுவை பொருட்சுவையுடன் கேட்போர் மனதைக் கவரும் வண்ணம் பாடப்பட்டிருப்பதால், இந்நாட்டிலுள் ளோர் அனைவரும் இந்நூலைப் பெற்று இன்புறுவார்கள் என்பது திண்ணம்.

இங்ஙனம்,

**ச. மெய்கண்ட தேவன்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் & நிருவாகக்குழுத் தலைவர்
சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்,
*11—3—82.*

உ

தமிழ் வாழ்க!

# முன்னுரை

திருவாசகத்துள் மாணிக்கவாசகனுல் பாடிய 'திருவம்மானை' என்ற பகுதியில் சிறுமியர்கள் ஆடும் 'அம்மானை' காணப்படுகின்றது. 'அன்னை' அல்லது 'தாய்' என்று பொருள்படும் அம்மானை, அம்மனை, அம்மானுய், அம்மானே அம்மானுர், முதலான சொற்களைச் சிறுமியர் தம் ஆடலிலே பயன்படுத்திப் பாடியதாகக் காணக்கிடைக்கிறது.

## தோற்றமும் வளர்ச்சியும்

அம்மானையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எமது வெளியீடுகளான இராமய்யன் அம்மானை, வீரய்யன் அம்மானை, கஞ்சனம்மானை முதலானவைகளில் காணலாம்.

மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், எளிய நடையில் பெரிய வரலாறுகளும், கதைகளும் ஆற்ருெழுக்காக 'அம்மானை' என்ற பெயரால் எழுந்தன. இவ்வாறு எழுதப்பெற்ற நூல்கள் பலவற்றுள் சீவக சிந்தாமணி அம்மானை ஒன்ருகும்.

## சீவகசிந்தாமணி அம்மானை

ஐம்பெருங்காப்பியங்களுளொன்ருகிய 'சீவக சிந்தாமணி' என்பது 'திருத்தக்கதேவர்' எனும் சைன முனிவரால் பாடப்பெற்றது. அதனை எளிய நடையில், நல்ல சந்தத்துடன் 'சீவக சிந்தாமணி அம்மானை' என்ற பெயரால் இயற்றியுள்ள ஆசிரியர் பெயர் சரிவரக் கிடைக்கவில்லை.

## முதல்நூல்

இந்த அம்மானைக்கு முதல் நூல் 'சீவகசிந்தாமணி' எனலாம். சீவகன் வரலாறு கூறும் நூல்கள்: க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, சீவந்தர நாடகம், சீவந்தர சம்பு, மகா புராணம், ஸ்ரீபுராணம், சிந்தாமணி மாலை முதலானவைகளாகும்.

## க்ஷத்திர சூடாமணி

'சீவகசுவாமி' யினுடைய வரலாறு, இந்நூலில் விளக்க மாகப் பேசப்படுகிறது. கிரந்த எழுத்துக்களில் வடமொழி சுலோகங்களும், மணிப் பிரவாள நடையில் உரையும் காணக்கிடைக்கின்றது.

## ஸ்ரீபுராணம்

ஸ்ரீபுராணத்தில் 24ம் தீர்த்தங்கரராகிய வர்த்தமான மகாவீரருடைய புராணத்துள் சீவகனுடைய வரலாறு மணிப்பிரவாள நடையில் பேசப்படுகிறது. அவ்வரலாற்றி னைச் 'சீவகசிந்தாமணி' மகாமகோபத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாகடர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பில் காணலாம்.

## பார்சுவநாதர் அம்மானை

முன்பு வெளியிட்ட எமது வெளியீடு 'ஸ்ரீபார்சுவநாதர் அம்மானை' வெளிவந்துள்ளது. இவர் 23வது தீர்த்தங்கரர். இந்நூல் பற்றிய செய்திகளை அந்நூலின் முகவுரையில் காணலாம்.

## எமது சுவடி

எமது மகால் சுவடி எண். 1082-பி-ல் சீவகசிந்தாமணி அம்மானை (3வது இலம்பகம் முதல்) உள்ளது. இச்சீவக சிந்தாமணி அம்மானையில் முதலிரண்டு இலம்பகங்களின்றி எஞ்சிய 11 இலம்பகங்கள் முழுதும் உள்ளன. "தொடக்கம்

இல்லையே'' என வருந்தியிருந்தபோது, சென்னை பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளர் திருவாளர் வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் மூலம் திருவனந்தபுரம் பல்கலைக்கழகச் சுவடி நிலையத்தில் இருப்பதாக அறிந்து, மகிழ்ந்து திருவனந்தபுரம் சென்று அனுமதி பெற்று முதலிரண்டு இலம்பகங்களையும் படியெடுத்து வந்து இத்துடன் சேர்த்து முழுநூலாக உருவாக்க முடிந்தது.

எமது சுவடி அண்மைக்காலத்து சுவடி போலும். இரட்டைக்கொம்புகள் உள்ள எழுத்துக்களும், ஒற்றுகட்குப் புள்ளிகளும் உள்ளன. ஏடெழுதுவார் பிழையதிகம் உள்ளன. பல வரிகள் விடுபட்டுள்ளன. பலசொற்களும் விடுபட்டுள்ளன. சில, மாறுபட்டும் சிதைந்தும் உள்ளன. பேச்சுவழக்கு சொற்களாக உள்ளன. அவற்றை சரி செய்வது, சற்று கடினமாகவே இருந்தது. பெயர்களும் கதைகளும் மாறுபட்டுள்ளன. மகால் சுவடியில் தொடக்கம் இல்லை. சில பகுதிகள் இரட்டித்து எழுதப்பட்டுள்ளன. தமிழ் மாதங்கள் பன்னிரண்டும், அட்டதிக்கு பாலகர்களும் முத்தியிலம்பகத்து கூறப்பட்டுள்ளன.

இச்சுவடி மூலத்தினுடைய படியேயாகும். தவறுகள் உச்சரிப்பைக் கொண்டு சரிப்படுத்தப்பட்டுள்ளன, உதாரணம்—பைங்கையக் கையால்—பங்கயக்கையால் (95-ம் ஏடு கடைசி வரி) ஆசிரியரே எனில் இவ்வளவு பிழைகள் நேர்ந்திரா.

இச்சுவடி அச்சேறிய வேளையில் ஒருசுவடி இப்பெயரால் முழுமையாக இருப்பதாக சென்னை திருவாளர் சிவ ஆதிநாதன் அவர்கள் மூலம் தெரியவந்தது. அதில் :-

"பார்புகழுங் தச்சை பதிவா ழரகந்தர்
சீரடியை யர்ச்சிக்கும் தேவராஜன் தமிழால்
அம்மானை யார்பாடி ஆடுவோ மம்மானை!"

என்று இருப்பதால் இதனை இயற்றியவர் 'தேவராஜன்' என்பது புலனாகின்றது.

## திருவனந்தபுரத்துச் சுவடிகள்

திருவனந்தபுரம், காரியவட்டம், பல்கலைக்கழகச்சுவடி, நிலையத்தில் உள்ள சுவடி எண். 10,366 என்ற சுவடி இதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இது நம்சுவடிபோலல்லாமல் இடையிடையே விருத்தம் கலந்து காணப்பட்டது.

## சீவகன் கதை

'சீவகன் கதை' என்ற பெயரால், அம்மானைப் பாடலாக திருவனந்தபுரம் சுவடி எண். 8,248 (தமிழ் 177—3200) என்ற சுவடியும் காணப்பட்டது. ஓரங்கள், ஓடிந்தும் மடிந்தும் காணப்பட்டது. அதில் கணபதி காப்பு, ஞானந்திரி படித்த சண்முகனே என்றெல்லாம் காணப்பட்டதோடு விருத்தங்களும் காணப்பட்டன.

**சான்று :** "ஆறுதனை மிகச்சூடிக் கனலு மேந்தி அக்குவடமே யகறணிந்து அரவம் பூண்டு நீறுதனைப் பூசி நடமாடிநின்ற நித்தனுட கமலபத நெஞ்சில் வைத்து சீறிவரு மொன்னுரைச் செயமே கொண்ட சீவகன்றன் கதை வரவு செய்ய மின்னே கூறரிய மணிமகுடக் கனகக் கொங்கை குணமாலை யிலம்பத்தைக் கூறுவேனே !

## சீவக சிந்தாமணி விருத்தம்

திருவனந்தபுரம் சுவடி எண். 8,825, விருத்தப்பாக்களாலாயது, மகரக்குழைக்காதர் துணை போன்ற சைவச் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. 100 விருத்தங்களே இச்சுவடியில் உள்ளன. முற்றும் இல்லை.

இவை மூன்று சுவடிகளும் வெவ்வேறு ஆசிரியர்களால் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. அவர்கள் சைவர்கள் எனக் கூறவும் இடமுள்ளது. பெயர் முதலியன அறியக் கூடவில்லை.

### சீவக சிந்தாமணி மாலை

முன் குறிப்பிட்ட திருவாளர் வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் மூலம் சென்னையில் ஒரு சுவடி இருப்பதாக அறிந்தேன். அதில் 'சச்சந்தன் சரித்திரம்' முதலாக முழுதும் உளது.

சீவகசிந்தாமணி நூலை நோக்க பல மாறுபாடுகள் காணப்படுகின்றன. சுவடிக்குச் சுவடி நிகழ்ச்சிகள் மாறுபட்டுக் காணப்படுகின்றன.

### மண நூல்

இதில் எல்லா இலம்பகங்களிலும் திருமணங்களே பேசப்படுகின்றன. சீவகன் என்பான் நாமகள், மண்மகள் பூமகள் ஆகியவர்களை உருவகமாக மணந்ததாகவும், காந்தருவ தத்தையார் முதலாக எண்மரை மணந்ததாகவும், கோவிந்தையைச் சீவகன் தோழன் பதுமுகன் மணந்ததாகவும் பேசப்படுவதால் இவ்வாறு பனிரெண்டு இலம்பகங்களிலும் 'திருமணம்' கூறப்படுவதால் இதற்கு 'மண நூல்' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

### ஸ்ரீ வர்த்தமான மகாவீரருடைய காலம்

இவர் கி. மு. 599ல் பிறந்து 72 ஆண்டுகள் வாழ்ந்து கி. மு. 527ல் முத்திபெற்றதாகப் பேசப்படுகின்றது.

### சீவகன் காலம்

வர்த்தமான மகாவீரருடைய வரலாற்றில் சீவகன் பேசப்படுவதால் கிட்டத்தட்ட அவரது காலமே கொள்ளலாம்.

### நூலாசிரியர்

எமது சுவடியின் நூலாசிரியர் அறிதற்கியலாதவாறுளது. ஆனால் இதற்குமுன் பதிப்பித்த ஸ்ரீ பார்சுவநாதர்

அம்மானை' ஆசிரியர் திருமறுமார்பன் ஆகையால் நடைகளை நோக்க இதுவும் அவரே இயற்றியிருக்கலாம் எனக் கொள்ள இடமுளது. பிற செய்திகள் அறிதற்கில்லை.

### இச்சுவடி எழுதின காலம்

எமது சுவடியின் இறுதியில் குரோதி ஆண்டு, ஐப்பசித் திங்கள் நாள், பரணி விண்மீன் என்றுளது. இதற்குச் சரியான ஆங்கிலம் 25—10—1904 ஆகிறது.

இதனை படியெடுத்தவர் பொன்னூரிலிருக்கும் சந்திர நாத நயினர் குமாரன் சோமப் பிரப நயினர் என்பது தெளிவாக உள்ளது.

### சுவடி தந்தோர்க்கு நன்றி

வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம், பொன்னூர் ஆதிநாத நயினர் குமாரர்கள் சந்திரநாத நயினர் சம்பத்ராவ் நயினர் குமாரர் ஆதிராஜி நயினர் 2, ஆகிய இவர்கள் இருவருமாக எமக்கு அன்பளிப்பாக வழங்கிய சுவடிகளில் இதுவும் ஒன்று. இச்சுவடியின் இறுதியில் 'சோமப்பிரப நயினர் ஸ்வஹஸ்தலிகிதம்' என்றுளது. ஆகவே இவ்விருவருக்கும் எமது நன்றி.

### முதல் 2 இலம்பகங்கள் உதவியவர்கட்கு நன்றி

முற்பகுதி, திருவனந்தபுரம் காரியவட்டம், கேரள பல்கலைக் கழகத்தைச் சார்ந்த Oriental Research Institute & Manuscripts Library, Director திருமிகு. டாக்டர் கே. இராகவன் பிள்ளை, M. A., Ph. D., (Lond.) அவர்கள் படியெடுத்துக்கொள்ள அனுமதித்ததற்காக நன்றி. அதுகாலை உடன் உதவியாயிருந்த, திருவாளர் டாக்டர் எம். இளையபெருமாள், M. A., M. Lit., Ph. D., (Professor & Head of Tamil Department) அவர்கள் திருவாளர் கே. சுப்பிரமணியம், M.A., (Reader in Tamil) திருவாளர் பீ. கிருஷ்ணசாமி, M. A. (Research Scholar)

திருவாளர் வீ. கேசவராஜ், M. A., Ph. D., (Research Scholar) ஆகியோருக்கு எமது நன்றி.

**நன்றி**

இந்நூலை ஆய்ந்து வெளியிட அனுமதியளித்த எமது மகால் நிருவாக குழுவுக்கும் இந்நூல் சிறப்புடன் வெளிவர அவ்வப்போது உதவி செய்த சென்னை பல்கலைக்கழக முன்னாள் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்கட்கும் இதனை விரைவில் அச்சிட்டுத்தந்த எமது சரசுவதி மகால் நூல்நிலைய அச்சகத்தாருக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

இந்நூலை பதிப்பிக்க தொன்றாத் துணையாய் நின்ற இறைவன் மலரடிகளை வணங்கி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுகிறேன்.

இன்னணம்,

தஞ்சாவூர்,
*26—3—82.*

புலவர். **வீ. சொக்கலிங்கம்,**
**தமிழாசிரியன்,**
**சரசுவதி மகால் நூலகம்.**

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாக வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

*தஞ்சாவூர்,*
*26—3—82.*

**ச. மெய்கண்ட தேவன்,** I. A. S.,
*மாவட்ட ஆட்சியர் & தலைவர்,*
*நிர்வாகக் குழு, சரசுவதி மகால் நூலகம்.*

# சீவக சிந்தாமணி அம்மானை

## ஜீவேந்திரர் அம்மானார்

சுபமஸ்து

ஸ்ரீரஸ்து

உலகொரு மூன்று மேத்த
உயிர்பொரு ளாயி ருந்தான்
தலைமையாய் நின்ற மூர்த்தி
சதுர்முகக் கடவுள் பாதம்
தலையுற வணங்கி ஜீவேந்
திரனது சரிதம் பாட
கலைமக ளான வாணி
காப்பது கடன்கண் டீரே!

ஸ்ரீ ஜிநாய நம:

உ

# சீவக சிந்தாமணி அம்மானை

## முதலாவது

### நாமகளிலம்பகம்

திங்கள் மும்மாரி சிறந்தோங்குஞ் செங்கோலும்
மங்கைதிரு நாமாது மகிழ்ந்தோங்கு மண்டலமும்
பொங்குபுகழ் பாற்கடலில் பொலிந்தோங்கி யேசிறக்க
சிங்கமென வந்துதித்த சீவகசிந் தாமணியை
ஆராய்ந்து முன்னூலின் அம்மானை பாடுகிறேன்.
காராரு மேனிக் கணபதியே க(ாப்)பாயே!
தந்தைக்கு ஞானந் தரிப்பித்த சண்முகனே!
இந்தக் கதைக்கு எழுந்தருளி முன்னடவாய்!
கன்னியே செஞ்சொல் கரும்பே கதிரொளியின்
மின்னி னிடையாளே! வேதமாம் மெஞ்ஞானி
ஆக்கமுடன் பூலோக மண்டபகி ரண்டமெல்லாம்
காக்கப்பொன் மாளிழலி லிருந்த கருங்குயிலே!
மாலுக் கிளையாளே மண்டலங்க ளீன்றவளே!
நாலுக்குள் வேதம் நடுவாக நின்றவளே.
ஆலுக்கு ளால்வேர்போல் அங்கங்கு மானபிரான்
பாலுக்குள் நெய்போல் பரந்த பரஞானி
[1]முத்திக்குள் வித்தான மூலமுளை வேராய
அத்த னிடத்தில் அமர்ந்தவளே அஞ்சலென்றாய்!
மன்னழகு வெண்டா மரைக்குயிலே மெல்லியலே!
என்னிதயத் தாமரையி லெழுந்தருளி யெப்போதும்
உன்னருளை யீந்து வுதவுஞ் [2]சரசோதி
அவ்வாறு போல வடியே னுரைத்ததெல்லாம்
மன்னுக்கதைக் கம்மானை வாக்க(ருளிச்) செய்வாயே!

---

1 முத்திக்கு எனல் பொருந்தும். 2 சரசுவதி.

[3]சங்கையுற்ற சிவகுரோர் தன்கதைக்கும் அம்மானை[4]
செங்கமலத் தோனும் திருமாலும் வந்துதவாய்!
அந்தமுறு சிவகன்றன் அம்மானை பாடிவைத்தேன்.

செந்தமிழ்சேர் பூவுலகில் தென்மண்டல நாட்டில்
மண்டலத்தில் மான வீரவள நாடதனில்
தண்டாமறைமாது தானுறையுந் தாமரையூர்
அண்டர்சிவ தொண்டன் அருள்தவ குருதகுட்டி
வண்டமிழோர் பொற்பாதம் வண்மையுடன் போற்றவல்லை
சுத்த பரஞானி [5]சூட்சுமத்தில் மிக்கான
சத்திவித்தை புத்தியுள்ளோன் சகல கலைக்கதிபன்
குற்றமற்ற மெஞ்ஞானி [6]குழந்தையான் நடக்கவெளி
உற்றவரு னானந்தன் உயர்பாதமென் சென்னியிலே
வைத்து பெனைவளர்த்து மறுதரம் பிண்டமாக்கி
சித்த முடன்பொ திந்த சீவன்கா ணம்மானை!
சீராந் தமிழ்முறையுஞ் செய்த இலட்சணமும்
ஆராய வல்லோர்க் கடிமைகாண் அம்மானை!
சாச்சி முறையறியேன் சமர்த்தறியேன் தன்மையுடன்
பாலாற் சுவையின் பரமார்த்திகாண் அம்மானை!
[7]இச்சொல் பிழையிதென்று எண்ணாதே பாவலரே!
பச்சைப்பிள் ளைசொல்லைப் பகைப்பாரோ பாருலகில்
அவ்வாறு போல அடியே னுரைத்ததெல்லாம்
எவ்வாறு நல்லதென்று கொள்வீ ரியல்போரே!
இரசநவ கண்டத் திமையவர் பருப்பதத்தில்[8]
சரசுபே ராறுவருந் தன்போக்கி லங்கிருந்தே
மாங்கத மென்கின்ற வல்லவள நாடதனில்
எங்குமென்னு ரென்று மிராசமா வப்புரத்தில்
மும்மாரி பெய்ய முழுச்செல்வ முற்மோங்க
அம்மாதர் பெற்ற வரசுதனில் வந்துதித்தோன்
மெச்சந்தங் காட்டும் வேந்தர் தனில் மிக்கான
சச்சந்த மகராசன் தானிருந்தான் அம்மானை!

3 சங்கை-மதிப்பு. 4 தொடர் சரியில்லை. 5 சூட்சுமத்தில் என்றுளது. 6 தொடர் சரியில்லை. 7 இஞ்சொல் என்றுளது 8 நின்று என்ற சொல் மூலத்தில் மிகையாக உளது.

வேந்தன் சச்சந்தனார் மேதினி யாண்ட வந்நாள்
ஆய்ந்த புகழ் வேந்தன் அருஞ்சகுமர வேந்தன்மகள்
நெரிபத்தர் தன்னில்மிக்க நீண்ட புகழுடையோன்
சிரிதத்த னென்பான் செல்வத் திருமகளார்
வகையுறவே வந்துதித்த மாமாது மாதரசி
விசையமா தேவியென்று மின்னாள் பிறந்திருந்தாள்
கச்சமுதுங் கொங்கை கமல முகத்தழகும்
பச்சை யிரதியிலும் பாரமுகி பேரழகி
அந்தரத்தின் மின்னி னொருப்படையார்சிந் தாமணியை
இந்தத் திருவுருவை இராசா மிகவறிந்து
சிந்தை குளிர்ச்சிச் சிறுதத்தை தன்மகளார்
விந்தையாரில் மிக்கான விசையமா தேவிதன்னை
வந்துசச் சந்த மகாராசன் மணம்புணர்ந்தான்
அந்த மணஞ்செய்து அரசாண்ட வந்நாளில்
விசையமா தேவிதன் மேல் விருப்பமுற்று வேந்தனிவன்
ஆசை மனதாய் அவள்மேல் கிருபையுற்று
காமத் துயரில் கருத்துழைத்துக் காவலனார்
[1]காமனையும் விழுங்கிக் கொள்வார்போல் கோமகனும்
கட்டுமலர்ப் பூங்குழலைக் [2]காங்கிசையால் காவலனார்
விட்டுப் பிரிந்திலனே வேந்த னிருக்கரியான்
துறையாசை விட்ட வனுந் [3]தானே காந்தமாக
ஆசைவிட்டுக் காமனை ஆதரித்தா ரம்மானை !

தன்றெட்டை யானமொரு தன்னவனாய் வேணுமென்று
நன்றெட்டு மந்திரிமார் நாலுபே ருண்டவர்க்கு
நாலுபேர் மந்திரிமார் நாக்கு மவர்நாமம்
சாலஉருத் திரதத்தன் துருமதத்த னிருததத்தன்
உன்றுகட்டியக் காரனென்ன வொருமித்த நால்பேரும்
[4]இந்நால்வர் மந்திரிமார் இருக்குமந்த வந்நாளில்
[5]காம வேலுடைய சச்சந்தனார் கூதவிக்க
காம காரியங் கடுமிலை என்பதனைக் காட்டானதிம

1 கோமகனையும் என்றுளது. 2 தாங்கிக்கையால் என்பது பொருந்தும். 3 தானெகந்தமாக என்றுளது. 4 இன்னாளில் என்றுளது. 5 இது முதல் 4 வரிகள் சரியில்லை.

விளித்த தோகையைத் துயருறத் துடந்துவர
மன்கட்டியக் காரனை வாவென வழைத்தான்,

## விருத்தம்

அழைத்த போதி னரையுறுக் கட்டியக் கார
னிழைத்த நெஞ்சுட னென்கோவா யெனபகை எண்ணி
உளைத்த நெஞ்ச முள்ளுற முண்மையும் பயந்து
விளைத்த தீவினை யேதென வேந்தனைக் கண்டான்.

கண்டதொரு மந்திரியைக் காய்யாற வேயழைத்து
உண்டான நெஞ்சுரிமை உரைத்தனன்காண் அம்மானை !

கண்ணுக்குள் கண்ணான கருத்தான மந்திரியே !
பெண்ணுக்குப் பெண்ணான பேதையையுந் தான்விருப்பி
விட்டிருக்க மாட்டேன்காண் மெய்யாகச் சொல்லுகிறேன்.
கட்டியக் காரா [1]கருமையுள்ள மந்திரியே
உன்னை நம்பி னேனரசுக் குற்றொருவர் வேறில்லைகாண்
என்னை நம்பி நீயு மிருந்தரசு குன்றாமல்
நானாகி நீயாகி நாடுபா ரந்தாங்கி
யேனாகி நீயு மிருந்தரசை யாண்டிடுவாய் !
பெண்ணைப் பிறிந்தறியேன் புறநாடு புக்கறியேன் !
மண்ணைப் பிரியாமல் மகிழ்ந்தரசை யாண்டிருநீ !
காமக் கருத்தால் கலங்கினேன் மந்திரியே !
தாமக் குயில்மயிலைத் தான்பிரிய மாட்டேனே !
என்னரசு என்னுளா யிருந்தரசை யாளுகென
மன்னவனு மந்திரிக்கு [2]வருந்தினன்காண் அம்மானை !

கேட்டுக்கட் டியக்காரன் கிருபையுற்று யென்சொல்லுவான்
நீட்டு புகழ்மன்னா செப்பினீ ரிவ்வார்த்தை
நாட்டின்பா ரந்தாங்க நானதுக்கு வல்லவனோ
வேட்டமுடன் மும்மதஞ்சேர் மெய்த்தந்தி யாகநின்ற
ஆனைசுமக் கும்பார மற்பவுயி ராகநின்ற
பூனை சுமக்குமோ ! புரவலனே !! என்றுரைத்தான்.

---

1 சிந்திக்க. 2 உரைத்தனன் எனல் பொருந்தும்.

உன்னைப்போ லேயெனக்கு உண்மையுள்ள பேருமில்லை
என்னைப்போல் நீயு மிருந்தரசை யாளுமென்றார்.
கொடுத்தா னரசையிந்த கொற்றவனும் மந்திரிக்கு
அடுத்ததொரு மந்திரிமா ரனைவோ ரையுமழைத்து
என்கீழ் நடந்ததுபோ லிவரைப் பணியுமென்றார்
மன்ன னிவையுரைக்க மந்திரிமா ரில்லொருவர்
உருத்திர தத்த னுயர்வேந்தன் முன்புசொன்ன
கருத்துடனே சென்றுநின்று கைதொழுதார் அம்மானை!

மன்னனே மந்திரியால் மண்ணரசு நீயீந்தால்
உன்னரசு தானு முடன்பிழைக்கு மென்றுரைத்தான்.

## விருத்தம்

அரசைநீ யொருவன் கையில் ஆக்கினை யான போதே
விரையநீ யுயிரி முந்து மேதினி விடுவை கண்டாய்
நரபதி யரசை நாலாய் நாட்டிடு [1]பிறபா லெண்ண
செறையது மன்ன னோடே உரைத்தனன் மறுத்து முன்னம்.

மறுத்துமந்த மன்னவனும் மந்திரிக்கு மேதுரைப்பான்
ஒறுத்துநீ பேசினது உண்மையல்ல கண்டாயே
என்னுயிரைப் போலே யிருப்பான்கா ணெந்நாளும்
மன்னன்மறு மாற்றலரை மண்ணுலகில் வெட்டினதும்
அரசெனக்குத் தந்த அருமையுள்ள மந்திரிகாண்
தாரணியி லிவன்றனைப்போல் சார்வெனக்கு வேறுமில்லை
என்றரசன் சொல்ல இயல்மந் திரியுரைப்பான்
கன்றாதே மன்னா [2]கட்டியன்நெட் டூரனவன்
உன்னரசு முன்னுயிரு முடனளியு மென்றுசொல்லி
மன்னன் றனைத்தொழுது மந்திரியும் போயினராம்
மந்திரிமார் போனதற்பின் வாய்த்தகட்டி யக்காரன்

அந்த வரசை யவனுண்டு கொண்டிருந்தான்
இருக்குமந்த வந்நாளில் இளங்கொடியும் மன்னவனும்
விருப்பத்தால் காமம் விளைந்தவனும் மோகமதாய்

---

1 அரசே போலும். 2 கட்டிய நெட்டூரவன என்றுளது.

காமக் கலவியிலே கைகலந்து மெய்யாக
கோமகளு மன்னவனுங் கூடிப் பிரியாமல்
பார்த்தகண் வாங்காமல் பைந்தொடியும் மன்னவனும்
ஏறமதன மோக மிழைக்குமந்த வந்நாளில்
விற்பசந்த மோகநுதல் மெல்லியலாள் தன்வயிற்றில்
பூமலர்ந்த கொங்கைமின்னுள் பொன்னிறமும் மேனியெல் [லாம்
தேமல் சிறந்திருக்குஞ் சேயிழையாள் அந்நாளில்
கண்டாள் கனவொன்று கணந்துயிலும் வேளையிலே
அண்டமுட்ட நின்ற யசோகமரஞ் சாய்ந்திடவும்
சாய்ந்தமரந் தன்னடியில் சற்றே முளையெழும்பி
உயர்ந்து பெரிதாய் உடனே வளர்ந்திடவும்
வளர்ந்துநின்ற கன்றதிலே வாய்த்தமுத்து மாலைவடம்
இளந்தளிரின் கன்றதின்மே லெட்டுவடந் தூக்கிடவும்
கண்டு விசயமா தேவி கலக்கமுற்று,
கொண்டநித் திரைநீங்கிக் கோமகளு மப்பொழுது
நீர்க்கடனுந் தான்கழித்து நேரிழையு மப்பொழுது
தாக்குடனே மங்கைநல்லாள் தன்கணவ னையெழுப்பி
சச்சந்த னைத்தொழுது தையல்மிக்க கண்டகனு
மிச்சமுட னேவிரைந்து உரைத்தாள் மெல்லிநல்லாள்
கேட்டு மரசன் [1]கிலேசமுற்று நொந்திருந்தான்.
கொட்டுமுலை யாள்மனந்தான் கோடாம வேயவனும்
உள்ளே வியாகுலமாய் உள்மனதில் நொந்திருந்து
கள்ளவிழுங் கோதையர்க்குக் கனவின் பலனுரைத்தான்.

## விருத்தம்

பேதையே [2]யெண்ண வேண்டாம் பெருங்கனு வுரையைக்
கேளாய்
நீதியா யுன்வ யிற்றில் நிறைந்தன குழவி யாண்காண்
மாதவன் புணர வந்த வல்லியர் முத்து மாலை
சூதமாங் கன்று மைந்தன் துயர்விடு நோகை என்றான் !

மன்னவனு மங்கே மகிழ்ந்துரைத்தா னப்பொழுது
கனவின் பலன்களெல்லாம் கட்டுரைத்து மன்னவனும்

---

1 கிருபையுள்ளே என்றுளது. 2 யென்ன என்றுளது.

நினைவிலே யுள்வெதும்பி நேரிழைக்கு மென்சொல்லுவான் :
மனதில் கவலை வையாதே மங்கையரே
அண்டமரஞ் சாய்ந்ததுதான் அரசுமரஞ் சாய்ந்ததென்று
கண்டு மனதில் காரிகைக்குச் சொல்லாமல்,
கன்றுகத் தோன்றினது காரிகையே யுன்புதல்வன்
மன்னுர் குழலாரே வயிற்றிலுள்ள பிள்ளையென்றான்
யெட்டுமுத்து மாலைவட மிருக்கு [1]மரந்தனக்கு
கட்டுப்படும் பெண்கள் கன்னியரே யென்றுரைத்தான்
ஆரமுதுங் கேட்டு அரசனுடனே துரைப்பாள்
பேரரசாய்நின்ற பெரியமரஞ் சாய்ந்ததென்ன
யென்று யிவள்கேட்க யியம்பினனேயரசன்
தன்றன் னுயிர்வினையை [2]தான்விளக்கஞ் செப்பாமல்
சொல்ல மறந்திருக்க தோகை யவளுரைப்பாள்
வல்லபமாய்நின்ற மரந்தானுஞ் சாய்ந்ததென்ன
மறுத்து மறுத்தவளும் மன்னவனோடே கேட்டாள்
[3]கருத்து மறுத்தவனுங் கன்னியர்க்குத் தானுரைத்தான்

## விருத்தம்

கன்னியே [4]யமுதத் தேனே கஞ்சமீ திருந்த மின்னே
சென்னியிற் றரித்த கொன்றைத் தேவரு மறுக்க மாட்டார்
யென்னதான் [5]செய்வே னுன்னோ டிடையூறு தனக்கு மெய்தும்
மன்னவன் சொல்லக் கேட்டு மயிலுமே மறுகி விட்டாள்.

மைமயங்குங் கண்ணாள் மன்ன னுரை கேட்டு
மெய்மயங்கிச் சோர்ந்து விழுந்தா ளிளமயிலாள்
கைசோர்ந்து மெய்சோர்ந்து கமல முகஞ்சோர்ந்து
மெய்சோர்ந்து பூமயிலாள் மேனியெல்லாந் தள்ளாடி
வாடி விழுந்தவளை மன்னவனுந் தானெடுத்து
கோடிய வாள்முகத்தைக் கோமான் மிகத்துடைத்து

---

1 மைந்தனுக்கு எனல் பொருந்தும். 2 தான் வழக்கஞ் செப்பாமல் என்றுளது. 3 கறுத்த என்றுளது. 4 யமுத்தானே என்றுளது. 5 செய்யவேனுன்னோடிடையூறு தனக்கு மெய்தி என்றுளது.

கண்ட கனத்தான் கன்னியரே மெய்யுளதோ
உண்டான தல்ல ஓவியமே *யுன்கனவு
இன்னு ளரசாண்டு இவ்வுலகை விட்டாலும்
பொன்னு ளராளக் கண்டாலும் பொய்யாதோ
என்று மிகத்தேற்றி யிவளை யெடுத்திருத்தி
நன்றி மிகவுரைத்து நாயகனும் நாயகியும்
குன்றுமல் நன்றாகக் கோளதையும் மன்னவனு
(மொன்றாகக் கூடி மகிழ்)ந்திருக்கு மப்பொழுது

## விருத்தம்

இருந்தநாள்க் கெற்ப முற்றி யேந்திழை புணர்ச்சிக் காக
விருந்தவ வேந்த னுக்கு மந்திரி யறிவு ரைப்பான்
பிரிந்து இராச்சி யத்தைப் பேதமை யாக விட்டீர்
திருந்திழை **மயிற்பொறி யேற்றச் சீர்போ யியற்று
மென்றார்

என்றுமந் திரியுரைக்க யியல்வேந்த னேதுரைப்பான்
மன்றுதனிற் சிப்பியினை வல்லான் தனையழைத்து
இந்திரகோ லாக்லமாய் யெல்லோரு மெய்திடவே
யெந்திரமுண் டாய்க்கொடுவா யிப்போ வெனவுரைத்தார்
கூற அவன்கேட்டுக் கொற்றவனூர் தான்மகிழ
யேறப் பொறிதா னிசைந்தமயி லாய்ச்சமைத்து
பொய்மயிலை யுஞ்சமைத்துப் பொற்கொடியா ருக்கேற்க
மெய்மயிலை யுங்கொணர்ந்து விட்டனன்கா ணம்மானை!

விட்டு வரசன்முன்னே மெய்மயிலும் பொய்மயிலும்
கட்டுமட் டாய்நடக்கக் கண்டரச னென்சொலுவான்
பொய்மயில்தா னேது பூவுலகி லுண்டான
மெய்மயில்தா னேது விளம்புமென்றான் சிப்பியனும்
[1] உற்பனமாம் பொய்மயிலை உள்ளமயி லீதுவென்றான்
கண்டரசன் மெய்த்துக் கான மயிற்பொறியை
கொண்டுவந்த தச்சனுக்குக் கோலமுள்ள பொன்னுடை

---

*யுறகனவு என்றுளது. **மயிலேற்ற என்றுளது. 1 இதற்கு எதுகை வரி இல்லை.

உண்மெனவே மாநிதிய முபசரித்துத் தானனுப்பி
யெண்டிசையில் புகழ்ச்சிறப் பனியல்மனையில் போனதற்பின்
பொன்போலே யந்தப் பொன்மயில்மேல் பொற்கொடியை
வானமுற வேற்றி வலந்திருகக் காவுதனில்
சென்றிருந்து மெல்லச் சிக்கெனவே தான்திருக
அன்று யிடந்திருக அருங்கால் தனைக்குலித்து
வந்துமெள்ளத் தான்தரிக்கும் வாய்த்ததொரு பூமியிலே
இந்த வகையாக இவளைப் பயிற்றுவித்தான்
அப்படியே கைவரவும் அநேகநா ளானதற்பின்
மெய்ப்படவே யப்பொறியும் மேகப் படலமுட்டி
ஓடியோடி மீண்டு முலாவிவரு மந்நாளில்
தேடுபுகழ் மாதுகெற்பந் திங்கள்பத்துஞ் சென்றதுவே

## விருத்தம்

சென்றது பத்து மாதந் தேவியார் வயிற்றில் கெற்ப
மன்று கட்டியக் கார னரசனை யழைத்துத் தானே
தன்னுடன் றனக்குத் தாயைத் தனியர சாள வென்ன
கொன்றிட மனத்துட் கொண்டு கோலியே மனத்திற்
கொண்டான்.

அந்நாளில் கட்டியக் கார னரசளிக்க
உன்னி மனந்தனிலே [1]போகரையு முள்ளாக்கி
முற்றுமந்த மந்திரிமார் மூவரையுந் தான்கூட்டி
நற்றுணையே நீங்கள் நாமொன்று சொல்வதுகேள்
நம்மரச னுக்குப் பகையாக நாள்தோறும்
எம்மிடத்தி லேயுறையு மெண்ணரிய தெய்வம்வந்து
கரவு முறையாகக் கனவில்வந்தென் [2]கண்ணியில்வைத்து
இரவும் பகலுமென்னை [3]யிருக்கவே வொட்டுதில்லை
[4]கொன்றுதர ஆசையொன்று கொடுமை யுரைக்கிதுகாண்
அச்சொல்லைக் கேட்டு அறிவழிந்து மந்திரிமார்
இச்சொல்லும் நல்லதல்ல வென்றுமிகத் தானிருந்தார்

---

1 லோகரையு என்றுளது. 2 ஓசை மிக்குளது. 3 யிருக் கொட்டுதில்லை என்று அசை குறைவாயுள்ளது. 4 இதற்கு எதுகை வரி இல்லை.

வான மிடியேறு வந்து விழுந்தாப்போல்
தானவர்க ளெல்லாந் [1] தலைகவிழ்ந்தே யேங்கிவிட்டார்
தருமதத்த னென்னுந் தானவ [2] னே துரைப்பான்
சொன்னமொழி நல்லதல்ல தோற்று துரைத்தாயே
மன்னர்தீ யாவதுதான் மண்டலத்தில் மெய்த்தீயே
இன்று மொருவார்த்தை யியம்பக்கேள் மன்னவனே
தொட்டாற் சுடுங்காண் தொடாகிற் குளிர்ந்திருக்கும்
வாட்டமற்ற பூவுலகில் மன்னர் மனநெருப்பு
மின்னிடுன் ரூபத்திலும் வேறுள தீயதிலும்
உன்னை யுரைந்ததெய்வ முனக்குதவி யல்லவது
பின்னையுள்ள வுன்கிளையும் பிளைபெற வேபறக்கும்
விதனம் பலபேசி மீள வெடுத்துரைப்பார்
இதனை மறந்துவிடு இப்போ தெனவுரைத்தார்
கன்றியிவன் கூறக் கட்டியக்கா ரன்னுரைப்பான்
[3] தன்னருமை யான தருமதத்த னைநோக்கி
இத்துணையே நீதா னெனக்குதவி யானதுதான்
வித்துவான் போலே வேண்டிமிகக் கொண்டாடி
நல்லகறி சோறுபழம் நற்பா லுடனேயுண்டு
வல்லதொரு மாற்றான் வந்துவினை யுண்டுதென்றால்
வழுவியப்பால் போயகலும் வண்டர்நீ யாகுமென்றான்
குழுமி மிகப்பேசிக் கோவித்தா னப்பொழுது
[4] தன்னவனைப் போலுரைத்த தருமதத்த னைநோக்கி
பின்னு மொருபுதுமை பேசினு னப்பொழுது
மன்னவனும் பொன்னுலக மாறுதே ஆளவிட்டு
சொன்னதொரு மண்ணுலகில்ச் சேராதே நாமாள
அன்ன நெறியாலே யருளினான் கண்டாயே!
தன்ம முறையுள்ள தன்மதத்தா நீகேளு
இக்கரு(ம) மெல்லா மெனக்கு யிப்பொழுது
பக்குவம்நீ [5] சொல்லானே பாவலரைப் போலிருந்து
காமத் துரோகிதனில் தக்கதொரு மிக்கான
சுவாமி துரோகியென்று துன்பு மிகப்பேசி

---

1 தலைகவிழ்ந் தெங்குவிட்டாள் என்றுளது. 2 டேதுரைப் பான் என்றுளது. 3 தன்மையான என்றுளது. 4 தன்னவனும் என்றுளது. 5 = ?.

கோலித் திவனைக் கொடுமை மிகப் பேசி
பாவித்து மன்னவர்க்குப் [1]பலசொன்ன முங்கொடுத்து
சச்சந்த மன்னவனைச் சாந்தோரைக் காவலிட்டு,
தன்படை யுள்ளோரைத் தானென்று கக்கூட்டி
வன்படையா யுள்ள மதகரியும் வான்தேரும்
அரசர் பெருஞ்சேனை ஆர்பரித்துத் தான்கூட்டி
விரைவுடனே தானிருந்த வேந்தன்பதி யையவளைத்து
கண்டிருந்த வாசலவர் கடுகியே ஓடிவந்து
தெண்டனிட்டுத் தான்வீழ்ந்து தேர்வேந்த னோடுரைத்தான்
உன்னை வதைசெய்ய வொருமித்து யெல்லோரும்
மன்னுகட்டி யக்காரன் வளைந்தானே கோட்டை தன்னை
தேர்ப்படையும் மரப்படையுஞ் செங்கண்மா வின்படையுங்
[2]கார்ப்படை போலவந்து [3]கடித்துகா ணென்று[4]சொல்ல
சச்சந்தனப்பொழுது தனக்குள்ளாய்த் தானிருந்தான்
மெச்சதுரை மக்களையு மேல்படைக ளானதையும்
உச்சந்த மாகயிப்போ உடனே வாவெனவே
அச்சம் படைத்துமன்ன [5]னழைத்தானே யிப்பொழுது
தன்படைக ளானவரைத் தன்கோட்டை வாசல்தனில்
[6]துன்படை வாராமல் [7]சூதானஞ் செய்யுமென்றான்
துட்டன்கட்டி யக்காரன் சூதானஞ் செய்யுமென்றான்
கட்டியக் காரன்வினை காண்போ மெனவெருண்டு
திட்டமுடன் விசைய தேவிதன் [8]னையழைத்து
இட்டமுடன் சச்சந்த னிவள்க்கேது செப்புவனும்
அன்றுநீ கண்ட அருங்கனவின் தன்பயன்காண்
இன்று முடிந்ததுகாண் ஏந்திழையே யென்றுரைத்தான்
பொன்னுலகை யாளப் போரோம்நாம் பூங்கொடியே
மின்னே நின் மைந்தனுக்கு வியாகுலங்க ளெண்ணாதே
சொன்ன வப்பொழுதே துணுக்கமுற்றுத் தோகைநல்லாள்
கன்னி வயிற்றடித்துக் கதறி விழுந்தழுதாள்
மண்மேல் விழுந்தவளை மன்னவனும் சென்றெடுத்து

---

1 பல பொருள்கள் தங்கம் முதலியன-சொர்னம். 2 காலாள் படை எனினும் அமையும். காராப்படை என்றுளது. 3 கடுகியது காண் போலும். 4 சொல்லி என்றுளது. 5 னழத்தானே என்றுளது. 6 = ? 7 எச்சரிக்கை. 8 னையழித்து என்றுளது.

பெண்ணேநின் பேதமையோ பெருந்துயரம் வந்ததென்றல்
நற்பொடு திறப்புநன்மை நாலாய்ப் படைத்துமண்மேல்
மெய்யாகப் பூமிதன்னில் விட்டா னருருபரன்
தின்மைவந்தால் வேறே திகைத்தால் விடுவாரோ
அருமையுடன் பூவுலகில் [1]அரசுரியத் தோடிருந்த
இருபேரும் நன்றாய் இருந்தோமே பூவுலகில்
என்றுமின்னைத் தேற்றி யிளங்கொடிக்கு மேதுசொல்வான்
மன்றி லரசன்மேல் வந்துவினை மூண்டுதென்றல்
தான்போம் பொழுது தன்தலைவி முன்போக்கி
தேன்வாங்குஞ் சொல்லீர் நாம்போவதே செம்மைகண்டாய்
யென்றிவளைத் தேற்றி யியல்பாக வார்த்தை சொல்லி
மன்றில்தா னே [2]வெறுத்து வந்ததென மன்னவனும்
தந்தெனக்குத் தீவினைகள் வந்துதென்று தாரரசன்
அந்த [3]மட்டினிலே யருமையுள்ள பெண்ணணங்கை
இந்த மயிற்பொறியி லேறுநீ மின்னேயென்று
தந்தன் கரத்தாலே தன்தேவி யையெடுத்து
மெய்ப்பொறியி லேற்றி மெல்ல வலைந்திருக
அப்போது மயிற்பொறிதான் அம்மயிலைக் கொண்டேக
சச்சந்த மகராசன் தானு மலங்கரித்து
மெச்சவே போர்கோலஞ் செய்துகொண்டு வந்தனனே
நின்ற னுதவி வரக்காணு நெடுநேரம்
வென்றியுள்ள வேந்தன் வீரவாள் தானுருவி
மாணிக்கக் கேடகத்தை வாங்கிவலக் கைகோர்த்து
ஆணிப்பொன் னாபரணத் தாலே யலங்கரித்து
சென்று புறப்பட்டான் திருக்கோட்டை வாசலிலே
அன்று தனக்குதவி யானவரைக் [4]காணுமல்
சூழ வளைந்துகொண்டார் தோற்றமிய மாப்படையும்
வேழமுங் காலாளும் வேந்தர் பெரும்படையும்
சென்று புரள வெட்டிச் செய்ய துகள்போல
கொன்று சினந்தீர்ந்து கோவிந்த னின்றனனே
வெட்டி யுதிர்த்துநின்ற வேந்தன்சச் சந்தனையும்
கட்டியக் காரனவன் கண்டான்கா ணப்பொழுது

---

1 அய்சுவரியத் தோடிருந்த எனல் பொருந்தும். 2 வெறுப்பு எனல் பொருந்தும். 3 மடிறவே என்றுளது. 4 காணுதபோது.

முட்டியவனேறிவந்த மூறிமத யானைதன்னை
விட்டுகட்டி யக்காரன் வேந்தனவன் முன்னடத்தி
சச்சந்த மகராசன்தன் னாயுதசா லையிலிருந்த
மெச்சவே [1]பூசைகொண்ட மெய்யான ஆயுதத்தை
நேமிப் படைவாங்கி நிலவேந்தன் மேலெறிந்தான்
பூமியர சன்மார்பில் புதையவந்த ஆயுதந்தான்
அவ்வேல் வளைந்தேற யவ்வரசன் வேல்திருத்தி
செவ்வே பறித்தெறிந்தான் சீர்வேந்த னந்நேரம்
மீறியே வேந்தன்விட்ட வேல்கட்டி யக்காரன்
யேறிவந்த ஆனையிட மத்தகத்தி லேபதிய
பட்டுமத யானையந்தப் பார்மேல் விழுந்திடவே
திட்டெனவே கட்டியனுஞ் சினத்து மதகரிமேல்
விட்டானே மன்னவன்மேல் வீர மதகரியை
வெட்டமிட்ட கேடைய வாள்வாங்கி மன்னவனும்
வெட்டிமுன் கோடுவிழ வீரவாள் தன்னாலே
திட்டெனவே வாளிரண்டாய்த் தெறித்தோடிப்
போனதுவே
தராதலத்தில் வேந்தனவன் சச்சந்த ராசனுமோ
நிராயுதனாய் நின்றவனை நெட்டூரன் கட்டியனும்
கண்டுஒரு நேமிதனைக் கதித்தெறிந்தான் மன்னவன்மேல்
பண்டுகொண்ட கேடயமும் பாதியா யற்றதுவே
பாதியற்ற கேடயமும் பண்டுமுறிந்தவாளும்
செய்தியுட னின்று செறுச்செய்த மன்னவனை
பிழையாத வேல்வாங்கிப் பேரரசன் தன்மார்பில்
களையாய் உயிரெனவே கட்டியக்கா ரன்னெறிந்தான்
பட்டுருவத் தைத்துப் பதைக்கையிலே மன்னவனும்
தொட்டுப் பிடித்தவனுஞ் சுடுவேலைத் தான்பறிக்க
கட்டான மார்புரத்தி னாலே கடுவேலும்
வட்டமிட்டு வந்த வடிவேல் வளைந்தேற
செவ்வேல் வராமல் திருகியவன் மார்பில்நிற்க
அவ்வேலை முன்பட்ட ஆனையின்கோட் டால்திருத்தி
வாங்கி எறிந்துவிட்டு மன்னன்நின்று னப்பொழுது
நீங்கிக்கட்டி யக்காரன் நேமிஒன்றைத் தான்வாங்கி

1 பூசை கொண்டு என்றுளது.

மன்னன்மேல் விட்டான் வலதுதோ ளற்றதுவே
பின்னை நின்ற வீரர் தன்மேல் பெருவில்வளைத்
தெய்துவிட்டான்
வேல்பட்ட புண்ணாலும் வீரரெய்த அம்பாலும்
கோல்பட் டுருவிக் குலைகுலைந்து மன்னவனும்
மன்னனுக்குத் தான் தயக்கம் வருகையிலே யுட்பொருளாய்
முன்னங் குருஉரைத்த மொழிமந் திரத்தையுன்னி
அன்ன தியான மாகபர மேசுரனை
உன்னிஉயிர் போக உயர்விண் ணடைந்ததுவே.

விண்ணடைந்து விண்ணவர்பால் விற்றிருந்தான்
மன்னவனும்
மண்ணிலரச சன்வீழ மறுகட் டியக்காரன்
சென்று படையைத் திருப்பிவிட்டுத் தான்போனன்
மன்றி லரசனுட வார மனிதரையும்
காவல்செய்து போடுகையால் கண்டா ரொருவரில்லை
ஆவலுடன் கோவிற் காலத்தா தியர்கூடி
வந்துமன் னனையெடுத்து மங்கையர்க ளப்பொழுது
செந்தீ யழல்படுத்திச் சேர்த்துவிட்டா ரந்நேரம்
மன்னவனுஞ் செத்தபின்பு மறுகக்கட்டி யக்காரன்
தன்னரசு யென்றுபறை சாற்றுவித்தா னந்நேரம்
சாற்றும் பறையோசை தான்விசைய மாதேவி
யேற்றுபொறி மேற்போக யிவள்செவியி லுற்றதுவே
உற்ற பறையோசை ஒண்டொடியாள் தன்செவியில்
நற்றளவில் காதில் நாராசம் போலுருவி
மின்னிறைந்த மேனி மெய்மயிலாள் கைசோர்ந்து
யேற்ற பொறிதா னிருநிலத்தைத் தானேக்கி
அவ்வூர்ப் புறம்பாக யனைவரையுந் தாமாக்குஞ்
செவ்வே சுடுகாட்டில் சென்றதுவந் தப்பொறியும்
மைப்பொறிதா [1]னங்குவர மாதுவிசயமா [2]தேவிக்கும்
மைப்பான பிள்ளை நோக்கா டெடுத்ததுவே.

---

1 னங்குவக்க என்றுளது.

2 தேவியர்க்கும் என்றுளது.

## விருத்தம்

பிள்ளைநோக் காடுமுற்றிப் பெருந்துயர் மனத்தினாலே
கள்ளவிழ் குழலாள்நாளும் கனமயில் பொறியில்நின்று
மெள்ளவே பூமி தன்னில் மெல்லியல் சாய்ந்தாள் கொற்றப்
பிள்ளையும் பிறந்தான் (அங்கே) பேதையும்
மயங்கிவிட்டாள்,

தன்மயக்கந் தான்தெளிந்து தன்மகனையெடுத்து
மின்மயக்கும் வாளெனவே மெய்ம்மதலை யைப்பார்த்து
நன்பகையைத் தான்மீட்க நன்மகன்வந் தானெனவே
இன்பமுடன் கண்டகண இன்று பலித்ததென்று
[1]மனமகிழ்ந் தந்நேரம் மனது பிரசமுற்று
நன்மகனைத் தானெடுத்து நல்லபட்டு முந்தியிலே
பட்டில் கிடத்திப் பாலகர்க்குப் பால்கொடுத்து
வெட்டமுலைப் பாலை மண்மேலே தான்பீச்சி
மண்ணும்பா லுங்குழைத்து வாய்த்தமகன் நெற்றியிலே
திண்ணமா கத்திலதஞ் சித்திரம்போ லேயெழுதி
வண்ணமுள்ள மைந்தனையும் வளர்ப்பா ரொருவரில்லை
எண்ணியெண்ணி யங்கே யிருந்தனள்காண் அந்நேரம்.

## விருத்தம்

நேரிழை மனது நொந்து யிருக்கின்ற வேளை தன்னில்
சூழ்ந்தமா புரத்தி [2]லுற்ற தக்கதோர் தெய்வம் வந்து
வேந்தர் தன் மனதுக் கொத்த விசையமா தேவி யாரே!
போந்தன னுன்னைத் தேடிப் புரிகுழ லாரே வந்தேன்.

சண்பக மாலையென்பாள் தாதி யவள்கூனி
என்பேரு யென்று யியம்பினள் தாதியவள்
தேடினே னுன்னையிந்தத் தேசமெல்லாம்
தேடிநொந்தேன்
[3]மன்னனிறந் தானெனவே மயங்காதே மங்கையரே!
இந்நகரில்தான் இராசமா வப்புரத்தில்

1 மனமகிளாரதந்தன் என்றுளது. 2 லுற்று துக்கதோர் என்றுளது. 3 வரிவிடுபட்டுளது போலும்.

[1]வாழ்வார்கள் தன்னில் வாய்த்ததொரு
செல்வமுள்ளோன்
கன்னியரே கந்துகண்ணன் [2]கன்னியவள் பெற்றபிள்ளை
[3]செத்து யிறந்ததுகாண் தேனேநீ யிப்பொழுது
வைத்துயிந்தப் பிள்ளைதனை மறையப்போய்த்
தானிருப்போம்
நாம்போனால் செட்டிவந்து நன்மகனை யும்புதைப்பான்
அப்போ குழவிதனை யப்போ தவன்காண்பான்
கண்டா லவன்சவத்தை யிடுகாட்டில் போட்டுவிட்டுக்
கொண்டுபோய்ப் பிள்ளைதனைக் குற்றமற வேவளர்ப்பான்
யென்றுதெய்வந் தானும் இவள்க்குறுதி தானுரைக்கும்
வென்றிவிசைய மாதேவி மெய்த்தனத்தில் நற்பாலைப்
பாராய்ப் பகைவர்செய்யும் பகையெல்லா முன்மேலே
சாராமல் போகவென [4]சாதித்துத் தெய்வமது
ஆரமுலை யைப்பிடித்து அக்குழவி வாயில்வைத்து
சீராகப் பால்பீச்சி திருக்குழவி தன்வாயில்
முந்நாளில் சச்சந்தன் முத்திரையா ளியிவர்க்கு
அந்நா ளவன்போகி லதுவுமிகத் தான்கொடுத்தான்
அந்த திருவாழி யப்பிள்ளை தன்கரத்தில்
மைந்தனுக்குத் தாயார் மங்கலக்காப் பாய்த்தரித்தாள்
அக்குழவி யத்தலத்தில் அங்கே கிடத்திவைத்து
விக்கினம் வாராமல் விசையமா தேவியர்க்குக்
காட்டில் மறையக் கன்னியைக் கொடுபோய்க்
கூட்டிப் பெருந்தெய்வம் கொண்டுபோய் விட்டதுவே.
இந்நாளில் கந்துகண்ணன் இயல்புடைய நல்தேவி
மின்னாள் சுனதை மெல்லியலாள் பெற்றபிள்ளை
எந்நாளுந் தானே யிறந்திறந்து தான்பிறக்கும்
அந்நாள் சுனதைமின்னும் அருள்வணிக னும்இறந்து
பெற்றபிள்ளை யெல்லாம் பேரிடவு மில்லாமல்
செத்திறந்து போகுதென்று திகைத்திருக்கு மந்நேரம்
வந்தா னொருதவசி வாய்த்த வணிகனுடன்
அந்தத் தவசி யருமையுள்ள மாயோன்

1 வாளவகன என்றுளது: வாணிகர் எனினும் அமையும். 2 – ? (மனைவி) 3 செற்றுயிறந்திதுகாண் என்றுளது 4 சாமித்து என்றுளது.

வருங்காலம் செல்காலம் வாய்த்த நிகழ்காலம்
அருங்காலம் மூன்றும் அறியவல்ல சித்தனவன்
கந்துகண் ணன் தன்னைக் கண்டு தவசிசொல்வான்
அந்தழ லாக்கினியும் அதிபார மெந்தனுக்கு
அன்னந் தருவாயோ அமுதுபரி பூரணமாய்
யென்னவே கேட்க யியல்வணிக னப்பொழுது
பால்பழமும் நல்லமுதும் பண்பாக வேபடைத்து
சீலமுடன் உத்தம தானம் சிறக்களித்து
உண்டு களித்து உகந்துபரி பூரணமாய்
அண்டர் தொழுந்தவசி அமர்ந்து யிருந்தனரே!
இருக்குமந்த வந்நேரம் இயல்தவசி யைநோக்கி
கருக்குறையுங் குற்றங் கந்துகண்ண னுக்குரைத்தான்
அடியேன் தவக்குறையோ; அகமுடையாள் தன்குறையோ;
நெடியோன்முன் னுள்பிறப்பில் செய்த நெறிகேடோ?

விருத்தம்

கந்து கண்ண னன்பாற் கருதியே மிகவுங் கேட்க
வந்ததோர் தவசி தானும் வருமுறை யறிந்து சொல்வான்
முந்தவே நீயுஞ் செய்த முழுவினைப் பயன தாலே
சந்ததி யில்லை மன்னா தராதலந் தன்னி லென்றான்.

என்றுடின்னு மந்த யியல்யோகி யேதுரைப்பான்.
கன்றாதே நின்னுடைய காரிகையாள் பெற்றபிள்ளை
சென்று யிறந்து சேரவே போகுதென்றாய்
உற்றமனை யாளுக்கு ஒருகுழவி தான்தோன்றும்
தோன்றுங் குழவியது துச்சனஞ்செய் தேபிறக்கும்
அந்நாளி லிவ்வூ ரழிந்திடுங்கா ணென்றுரைத்தான்
மின்னுக இப்பதிக்கு மெய்யா யதிபதியாய்
சச்சந்த மன்னவனை தன்மந் திரியான
சச்சந்த மாயவனைக் கட்டியக்கா ரன்வதைப்பான்
மன்னவன் தேவி மயிற்பொறியின் மேற்போவாள்
சொன்ன சுடுகாட்டில் துயரமுட னேதரிப்பள்
தரித்தா லவள்வயத்தில் சந்ததியுந் தான்தோன்றும்
வருத்தந் தனைத்தவிர்த்து வாயற்ற குழவிகையில்

திருத்துபுகழ்ச் சீவகர்க்குத் திருவாழி யுந்தரித்து
காப்பிட்டுத் தெய்வர் வந்து கைக்குழவி யைக்கொடுத்து
தாட்டிட்ட நெற்றியிலே தாய்முலைப்பா லாலெழுதி
போய்ப்படர்ந்து நிற்பார்கள் புண்ணியனே
சொல்லுகிறேன்
நேயமாய்ப் பிள்ளை [1]நெறிப்படி கிடந்திருக்கும்
உற்றபிள்ளை தன்னை ஒருவரையுங் கூட்டாமல்
பெற்றபிள்ளை நற்சவத்தைப் பெருங்காட்டி லேமறைக்க
கொண்டுநீ யங்குசெல்லக் கொற்றபிள்ளை தானிருக்கும்
அக்குழவி யையெக்க வப்போது தும்முமது
கண்டுந்தன் [2]கைசவத்தை யிடுகாட்டி லேபோட்டு
நற்குழவி யை[3]வாழ்த்தி நல்லதெய்வ மேதுசொல்லும்
சீவக ரென்று திருவாக்குத் தானுரைக்கும்
பாவித்து நீயுமந்தப் பாலகர்க்குப் பேராக
சீவக னென்றுநாமஞ் செப்பியுந்தன் பத்தினிக்கு
அவ்வாழி மோதிரத்தையும் அரிவையர்க்குக் காட்டாதே
இவ்வாறெல் லாமுந்த னேந்திழைக்குச் சொல்லாதே
செத்தபிள்ளை யைப்புதைக்கச் சென்றேனே பிள்ளையது
உற்ற [4]உயிர்பிறந்து உடனே யெழுந்ததென்று
கொண்டுவந்து உன்மனையாள் கோதையவள் கைகொடுத்து
தெண்டிரைசூழ் பூவுலகில் சீவகனென் றேயிருப்பன்
வளர்த்தா லதின்பிறகு ஊமந்தருண்டு மூன்றுபிள்ளை
உளத்தால் மகிழ்ந்து உண்மையுட னேபிறக்கும்
என்று தவசி யியம்பினன் முந்நாளில்
அன்று [5]பிறந்தனனே அக்குழவி யும்பிறந்து
சொன்னபடி செட்டியவன் சுடலைதனில் கொண்டுசெல்ல
சின்ன மதலை திருமுகத்தைக் கண்டனனே
கண்டபொழு தேசவத்தை யிடுகாட்டில் தான்புதைத்து
பண்டு தவசிசொல்லால் பாலன் றனையெடுத்தான்
யெடுத்து மவன்திரும்ப யியற்குழவி தும்மியதே
ஆயுற்ற [6]தாயார்பால் நற்றெய்வம் நின்றுசெப்பும்

---

1 நெறியபடிரிந்திடுக்கும் என்றுளது. 2 கயகவத்தை என்றுளது. 3 வளத்தி என்றுளது. 4 உயிர் பரந்து என்றுளது. 5 பிறந்தனனொமக்குளவியும் என்றுளது. 6 தாயார் பாலற்றெய்வம் என்றுளது.

சீவிக்க வென்று திருவாக்குச் செய்ததுவே.
கேட்டுக்கந் துக்கண்ணன் கிருபையுற்றுக் கொண்டாடி
வாட்டமறத் தன்தன் மனையாள்பால் பாலகனை
கையாழி யையமறைத்துக் காவலன் கைக்கொடுத்தான்
செய்யானீ பூவுலகில் சீவகனு மென்றுபெயர்
கொண்டுசென்று பிள்ளையைக் குழியில் புதைக்கையிலே
பண்டுபோல் சீவனுந்தான் பாலகர்க்கு வந்ததுவே
யென்று சுனைதையர்க்கு யியம்பியே கந்துக்கண்ணன்
நன்றியுட னேயிருந்து நல்லசெல்வங் குன்றாமல்
நீரோசை கொண்டு நெடுந்தெருவில் செட்டியர்கள்
பாரோசை கொள்ளமிகப் பாவித்தா ரெல்லோரும்

## விருத்தம்

அன்னவர்க ளரசருட நீமை யாலே
அனைவோரும் விசனமுடன் வந்தி ருந்தா
ரிந்நகரில் கந்துக்கண்ண னென்பான் றானு
மிவர்கிளையில் வணிகருட னுருங் கூடிப்
பொன்னகரி யாமென்று சிறப்புச் செய்து
பூவையரு மாடவரும் புதுமை யாகக்
கன்னியர்கள் குரவையிடக் கீதம் பாடக்
கருக்குழவி பிறந்தவகை களிப்புச் செய்தார் !

அப்படியே கந்துக்கண்ணன் அமர்ந்திருக்கும் வேளையிலே
முப்படிகட் டியக்காரன் முனிந்தேது தானுரைப்பான்
அரசுநமக் கானதென்று அனைவோரு மொன்றுபெற
பிரைய மனங்குளிர்ந்து வெற்றிபெற நம்மாலே
நன்றாய்க் களிகூர்ந்து நன்னகரி யுள்ளோர்கள்
ஒன்று யொருமனமா யொருமித் தனைவோரும்
அந்த முறையன்றி அந்நகரி யுள்ளேர்கள்
தொந்த முறையிடவே துக்கமுற்ற ராரெனவே
[1] ஒற்றனைப் பரப்பி ஒற்ற நகரியுள்ளே
ஆராய்ந்து நீங்கள் அறியுமென ஆணையிட்டான்
சென்றார்கள் ஒற்றர்கள் செல்லுமந்த வந்நேரம்

1 ஓரோனைப் பரப்பு என்றுளது.

குன்றுமற் கந்துக்கண்ணன் கொண்டாடி சுதன்தேருவே
நன்றாய் மனமகிழ்ந்து நற்பவுசோ டேயிருந்தான்
அன்றாக ஓற்றர்கள் அவனீதி கண்டுசென்று
உற்ற நகரிதனி லுள்ளவர்க ளெல்லோரும்
வெற்றி முகம்வாடி மனங்கலங்கி யேயிருந்தார்.
கந்துக்கண் ணன்றெருவில் கன்னியர்கோ தாட்டிடவே
சிந்தை மகிழ்ந்து சிறந்திருந்தா ரென்றுரைத்தான்.
என்றுசொன்ன போதே யியல்பான கட்டியனும்
நன்றுநன்று செட்டிநம்மை நன்மனது தொண்டனவெ
என்றிருக்கும் போது யிருள்விடியு முன்னுகை
நன்றியுள்ள தெய்மெது நாயகிக்கு ஏதுரைக்கும்:
இனியுன் புதல்வனுக்கு யிடரில்லை யேந்திழையே!
கனிவாய் மொழியாளே கதிரோ னெழுவதுமுன்
கொந்தார் குழலாரே கோவிந்த மகராசன்
உந்தன் மகனு ரிருக்குமந்த படைவீடு
அரணி அவரிருக்கை யாற்றிலே சென்றாலும்
தரணி திலதமென்ற தையலே அந்நகரி
அன்பதின் காதவழி யாகுங்கா ணுயிழையே!
[1]பொன்கதிரோன் தோன்றும் போயமைய மாட்டேனோ
[2]அமரிக்கை யாற்றுக் கரையினைத் தானடுத்தால்
தரமாக மிக்கரையில் தவப்பள்ளி யுண்டுகண்டாய்!
அந்தத் தவப்பள்ளியி லாயிழையே சென்றிருந்து
[3]சிந்தைக் குகந்ததவம் சேயிழையே தானிருந்து
தவசிருக்க [4]வேணுங்காண் தையலே யென்றுசொல்லி
அவசம் பெறவெனவே யித்தெய்வம் [5]கூட்டினபோல்
சென்றாள் திருப்பள்ளி சேயிழையார் தன்னுடனே.
அன்றதிலே முன்னு ளரியதவஞ் செய்திருந்தாள்
கண்டவரை யாதரித்து கருணை மிகப்பரந்து
உண்டெனத் தங்களுடன் கூடியங்கு [6]நேரென்ன
பொற்புடைய விசையமா தேவி ஆண்டிருந்து
நற்பணிக ளெல்லாம் நயமாய்க் கழற்றிவைத்து

---

1 வரி சரியில்லை. 2 முன்னர் அவரிக்கை என்றுளது. 3 சிந்தைக் குத்தவந்தன் செய்யிழையே என்றுளது. 4 வேணுமென்று என்றுளது. 5 கூட்டினம்போய் என்றுளது. 6 ரென்ன என்றுளது.

காவிக் கலைதோய்த்துக் கலிங்கன் கலையுடுத்தி
சீலனை நன்றாய்ச் சிவனே வளவெனவே
மெய்த்தவத்தி லேயிருக்கும் விசையமா தேவிக்கு
அத்தவத்தி லேயிருந்த அரியதவத் தாருடனே
மெய்த்தவம் வேண்டி மெல்லியலா ளுங்களுட
உற்ற அடைக்கலமென் றேவியத்தைத் தானிருத்தி
சுற்றதெய் வத்துடனே கன்னியரு மேதுரைப்பாள்
[1]பார்த்துவா நன்குழவி பண்போ டிருக்குதென்று
தெய்வம் தனைத்திரும்ப அனுப்பிவிட்டாள் அப்போது
கைவந்த தெய்வம் கண்டுவர லாமெனவே
ஆண்டதெய்வந் தானும் அந்நகரி தானோக்கி
மீண்டுவந்த வப்பதியில் மெய்த்தெய்வம் நின்றதுவே.
நின்றபோ தந்த நிலையிருளும் நீங்கியதே
அன்று விடிந்ததற்பின் அந்நகரி யிற்பிறந்த
அஞ்ஞாற்று நாலு அருங்குழவி யானதுதான்
மஞ்ஞூற்றுங் கண்மடவார் வருத்தமுடன் பெற்றனர்காண்.
கந்துக்கண்ணன் தனையழைத்துக் கட்டியனு
மேதுசொல்வான்
சிந்தையுட னீயுஞ் சிறந்திருந்த தென்னவென்றான்.

## விருத்தம்

மன்னர சுனக்குத் தானே வந்தது மென்று வேந்தன்
மென்மனை யாளு மீன்றாள் என்மகன் றன்னை யின்று
பொன்னெனப் பூரித் தென்றன் பொலிபெற மனது மெய்த்து
அன்னவன் றனக்குச் செட்டி அன்புட னுரைத்து நின்றான்.

அன்போ டுரைத்தவனை அன்றுகட்டி யக்காரன்
நன்றியுட னீயும் நன்மைவேண்டிக் கேயடுத்தேன்
யேது மிவர்க்கு மினிமைசெய்வோ மென்றுசொல்லி
ஆதவன்கூ ழந்நகரி யன்றுபிறந் தகுழவி
அஞ்ஞூற்று நாலு மவன்பிள்ளை [2]யொன்றுமாய்
[3]கைமுகிழ்த்த மாகவுந்தான் கட்டளையு மிட்டானே!

---

1 பாற்றுவா என்றுளது. 2, 3 தொடர்கள் சரியில்லை. வரிகள் விடுபட்டுள போலும்.

அந்நாளில் சீவகர்க்கு ஆனவய தொன்றதிலே
முன்னாளிற் சுனதையர்க்கு மூவொண்டில் நற்குழவி
ஆண்டுக் கொன்றாக அம்மூன்று புத்திரர்கள்.
[1]நாட்டிற் பரந்து நல்லோரைக் கண்டிரங்கி
கேட்டுப் பெரும்பசிக்குக் கிடையாதென் றேதிரிந்தான்.
அந்நாளி லச்சந்தி யரும்பசியு முண்டதனால்
இந்நாளில் கந்துக்கண்ணன் என்பான்முன் சென்றனனே !

## விருத்தம்

செப்பமுள்ள அச்சந்தி செட்டியவன் பால்போய்ச் சென்று
நீயும்
[2](மெப்)பசியு மோகடின மென்றுமிக வேவுரைக் குங்கால்
(அங்கே)
இப்பசியுந் தீரெனவே யியலுடனே தரவுரைக்கு மிதயங்
கூர்ந்து
அப்பசியுந் தீர்ப்பனென்று அமுதுகறி தான்படைத் தாதரிக்
குற்றனே ?

அவ்வாறு அச்சந்தி அசனமிகச் செய்திருந்து
ஒவ்வான மண்டபத்தி லுலாவிநிற்கும் வேளையிலே
சீவகனைத் தாதியர்கள் சென்றெடுத்துக் கொண்டுசென்று
ஆவலுடன் முன்பாக அவன்முன்னே கொண்டுசென்றார்
நின்றார்கள் பிள்ளைதனை நேரே யிவன்நோக்கி
அன்றுவந்த ஆனைத்தீ யவனைவிட்டு நீங்கியதே
அன்னார் பெரும்பசிதான் அகன்றதுகா ணம்மையென்று
இவனே யவனொருவன் [3]ஆனவச் சந்தியிவன்
ஞானத் திருட்டியினால் நாடியிவ னைப்பார்த்து
ஆனசச் சந்த னவன்குமா ரன்னெனவே
மீண்டுமந்த பிள்ளையைத்தான் மின்னாள் வயிற்றினிலே
வந்து பிறந்த வணிகர்மைந்தர் மூவேரும்
நந்தட்ட னோடு நவிலனு மாபுலனும்
கந்துக்கண்ணனுக்குமைந்தர் கைமேலே தான்பிறந்தார்.

---

1 தொடர் சரியில்லை. வரிகள் விடுபட்டுள போலும். 2 சீர்கள் சரியில்லை. 3 நுசுச் சந்தியிவன் என்றுளது.

ஆக அஞ்ஞூற் றெட்டதிலே அஞ்சுபேர் தான்தலைவர்
வாகுடனே யங்கே வளர்ந்தனன்கா ணப்போது

## விருத்தம்

வளர்ந்தனன் வளர்ந்த நாளில் மன்னவன் குமார னுக்குக்
குழந்தையள் அஞ்ஞூற் றேழுங் கூடியே தோழ மாரா
யுளம்பெறு மகிழ்ச்சி பொங்க உகந்துடன் சுந்துக் கண்ணன்
நளன்பெறு சீவ கற்கு நாலென வயது மானான்.

காவலனும் வந்துமுன்னே காந்தருவ ராசமன்னன்
விவேகம்வர வீரப் பாலுண்டான் பேருடையான்.
ஆண்டு முடிந்து அவன்வயது சென்றவந்நாள்
மீண்டுதான் பாலனுக்கு மெய்யர்கை தான்கொடுத்து
அன்று துறவி லரியதவம் பண்ணியநாள்
சென்றுதவ முற்றியபின் செப்பினர் வேறொருவர்
அச்சந்த னென்று அவர்நாமம் தான்கூறி
மெச்சிருக்கு மந்நாளில் வினைவந்து மூண்டதுவே.
ஆனைத்தீ வந்து அவனை யுற்றதம்மா
கானகத்தில் தீப்போலே கடியமூ லாக்கினி
கண்டு மகிழ்ந்து கருணையுற வச்சந்தி
உண்டான கல்வி யுபதேச மும்வருந்தி
வேணுமென்று நன்மையுடன் மெய்க்குமா ரன்றனக்கு
ஆணவமு மிக்க வறிவுமெய்ஞ் ஞானமுதல்
பள்ளிக் கிருத்திபல பாசைக ளானதெல்லாம்
அந்தர மார்க்க மானபல வித்தையெல்லாம்
விந்தைவிந்தை யாக விதவிதமாய் வருத்திவைத்து
அஞ்சு வயதி லருமைக் குமாரனுக்கு
வெஞ்ச முறவே வருத்தினன் மெய்ஞ்ஞானி
எட்டுப்பேர் பத்துப்பேர் எடுக்கரிய கல்லையெல்லாம்
அட்டதிக் கெல்லாமறி யம்மானை [1] போலாட
ஆயிரம் பேர்க ளசைக்கவொண்ணுக் கல்லையெல்லாம்
தாவமிகு காத்தான் தாமரைப்பூப் போலெடுத்து

1 போலாமப என்றுளது.

தேரேற்று மாவேற்றுஞ் செங்கண் கரியேற்றும்
போரேற்றுஞ் சிலம்பப் போர்வல்ல ஆயுதங்கள்
சேரப் பயிற்றுவித்தான் செல்வக் குமாரனுக்கு
ஆரமுடன் வித்தையெல்லாம் அருளினு னச்சந்தி
அவ்வகை யாய்க்குமரன் அங்கே வளர்ந்திடுநாள்
வெவ்வியகட் டியக்காரன் வேட்டைக்குப் போயினனே.

## விருத்தம்

போயினன் வேட்டை யாடப் போனதோர் போது மங்கே
காவினில் வனங்க ளெல்லாம் காவெல்லாந் திரிந்து தானே
மாவின சீவ னெல்லா மாயவே அசந்த காலான்
தாயமாங் கட்டி யன்னுந் தவித்தறச் சாய்ந்து விட்டான்.

கட்டியக்கா ரன்தவிப்பைக் கண்டுவந்தோர் சொல்லிடவே
இட்டமுடன் நெய்பால் இட்டசோறும் இப்பருப்பும்
வண்டியிலே ஏற்றிக் கொண்டுபோனார் சீவகனார்.
கொண்டுபோய்த் தானீந்து கொடுத்துத் தவிப்பாறி
பண்டுபோல் நன்றாய்ப் பவுசொடு தானிருந்தான்.
தண்டமிழ்நூல் நாடகங்கள் தான்காண வேணுமென்று
கோலமுடன் மங்கையர்க்குக் கோலச்சா ரியணிய
சீலமுடன் சீவகனைச் சென்றழைத்து வாருமென்றான்.

## விருத்தம்

நாடக மகளி ரான நவிரிளை யான மின்னு
ளாடக மணியி னானே யனங்கநன் மாலை தன்னை
பாடக மதன கோலம் பலபட வகையே (யென்னைச்)
சேடகு சீவ கன்னைச் சென்றழை யென்று சொன்னான்.

அப்பொழுது சீவகனை அழைத்துந்தா ரம்மானை !
செப்பமுடன் சீவகனார் சென்றுமக ளீர்கோலம்
ஆரா ரணியா ரணிகோல மானதெல்லாம்
சீராகத் தானணிந்தார் செப்பமுற வந்நேரம்
நாடக மாடும் நளினமெல்லாங் கண்ட தற்பின்

ஆடலாஞ் சென்று அனங்கமாலைதானும்
சீவகனைக் கண்டுருகிச் சேயிழையார் மோகமுற
பாவையரைக் கட்டியக் காரன்பரிந் தழைத்தானே
ஒவ்வாமலேயவள் மெல்கி மருகிவிட்டாள்.
செவ்வான சீவகனார் சேர்ந்தா னிலையெனவே!
அரசர் குமாரனையும் அன்றுகட்டி யக்காரன்
விரையவே சீவகனை வெறுத்தான் மனதுதன்னில்
அந்நாளி லப்பொழுது யச்சந்தி மாவிருசிப்
பொன்னுன சீவகனை புகழ்சோலை யிற்கொடுபோய்ப்
புள்ளும் பறவைகளும் போயிராச் சோலையிலே
வள்ளல்தனை மாவிருசி வருத்தும் படியாக
தனித்திவன் தான்கொடுபோய்த் தானுமுப தேசம்வைக்க
மனித ரறியாத மந்திரங்க ளும்வருந்தி
செனித்த முறைப்பாடுஞ் செல்வனே சொல்லுகிறேன்.
கனித்திரு வாயழகா கதைகேளு மென்றுரைத்தான்
சுடுகாட்டி லேபிறந்தாய் சொலக்கேள் [1]மேனுளில்
உடுவினில் மேலான உத்திரட் டாதிகண்டாய்
சச்சந்த னுக்குகந்த தாய்விசய மாதேவி
உச்சந்த மாகஉந்த னுயர்பிழைக்க வேணுமென்று
உந்தாய்தவப் பள்ளியிலே யுற்றதவஞ் செய்கின்றாள்.
கந்துகண்ண னுன்னைக் கருதி வளர்த்தவன்காண்
கட்டியனுன் தந்தைக்குக் கபடமுள்ள மந்திரிகாண்.
வெட்டிவிட்டான் தந்தைதனை மெய்யாகச் சொல்லுகிறேன்
யென்று மகாவிருசி இத்தனையுஞ் சீவகர்க்கு
அன்றுவறி வுள்ளதெல்லா மப்போ துரைத்துவிட்டான்.
கேட்டுமந்தச் சீவகனும் கிளர்ந்தகோபந் தானெழும்பி
வேட்டைப் புலிபோல வெகுண்டப்போ சீவகனும்
வெட்டுவேன் கட்டியனை யென்று வெகுண்டெழுந்தான்
கட்டியவ னைப்பிடித்து கைமேலே கொல்லாதே
மன்னு குமராகேள் வாய்த்தகட்டி யன்றனக்கு
இன்னமொரு வயசுக்கிவ[2] னுன்னரசுக் கென்றுறுத்தி
இத்தனை நாளுமுந்த[3] னிடிறி லவதரித்து

---

1 மேனுேழம் என்றுளது. 2 கிவன்றுன்திரசகென்றுறுத்தி என்றுளது. 3 – ?.

கற்றவித்தை யெல்லாங் கட்டளையு மிட்டேனே !
தெட்சணை யேதுதந்தாய் செல்வரா ருன்னுடைமை
இச்சையுடன் மாவிருசி யிவனோடே யேதுரைப்பான்
தாவமுடன் சீவகனார் சற்குருவைத் தெண்டனிட்டு
தேவரீர் வேணுமென்ற திருவுளங்கள் செய்வேனென்றான்.
அச்சந்தி யப்போ யவதியது தெட்சணைதான்
இச்சையுட னோராண்டு சென்றார் வனமேலே.
கட்டியக் காரனுக்குக் காலம்வரு மந்நாளில்
வெட்டியிடு வென்று வேந்தன்மக னோடுரைத்தான்
இச்சையுட னன்பாய் இராசன்மக னையிருத்தி
அச்சந்தி தானுமருந் தவஞ்செய்ய வேகினனே !

## விருத்தம்

ஆயினன் தவத்தின் கண்ணே யச்சந்தி யென்பான் றானும்
போயினன் பண்டு போலே புகழுடைச் சீவ கன்முன்
தாயினள் தவத்தி யானாள் தானுமோர் கரும மெண்ணி
வாயமாங் கால மொன்று வரும்வரு மென்றி ருந்தான்.

வாலை ஆனந்தி காப்பு

**முதலாவது நாமகளிலம்பகம் முற்றும்.**

# 2—வது

# கோவிந்தையார் விலம்பகம்

## கதைச் சுருக்கம்

மக்கள் ஐந்நூற்றெட்டு பேரும் நன்கு வளர்ந்திருக்கையில் ஒருநாள், இராசமாபுரத்தை அடுத்துள்ள காட்டிலுள்ள வேடர்கள், இவ்வூர்ப் பசுக்களைக் கவர்தல் வேண்டி, ஆலோசித்து நிரை கவரும்போது, கட்டியக்காரனால் ஆபத்து வரினும் விலக்கிக் கொள்ளும் வழியறிந்து, நிரை கவர்ந்து கொண்டு, வழியில், நந்தகோன்[1] என்பானுடைய பசுக்களையும், பிற பசுக்களையும் கவர்ந்துசென்றுவிட்டார்கள்.

இதனைக் கட்டியக்காரனிடம் கூற, அவன் தன் படைகளை ஏவினான். அவர்களை வேடர்கள் வென்றார்கள். நந்தகோன் மிகவும் அஞ்சி, "இந் நிரைகளை மீட்டுத் தருபவருக்கு என் மகள் கோவிந்தையைத் திருமணம் செய்து கொடுப்பேன்" என்று கூறினான். ஊரிலுள்ளார், "யம தூதர்களுடனா போர் செய்வார்கள்" என்று கூறி வாளா இருந்தனர்.

சீவகன், தன் தம்பிமார்களோடு புறப்பட்டு, "வேடர்களுடன் போரிட்டு, அவர்களை வெல்லேனாயின், தக்க மனையிருக்கச் சார்ந்தயலில் சீரழிந்த வீணரிலும் வீணனாவே" னென்று சபதங்கூறிப் போரிட்டு, மூன்று லட்சத்து முப்பத்தோராயிரம் பேரையும் வென்று, நிரைகளை மீட்டு, மீண்டு வந்தான்.

---

1 நந்தையர்கோன் என்றுமுளது.

சீவகன் வெற்றியுடன் மீண்டதை அறிந்த கட்டியக்காரன் வருத்தமுற்றான். சீவகனை ஊரார் புகழ்ந்தனர். நந்தையர்கோன் தான் கூறியாங்கு தன் மகள் கோவிந்தையை சீவகனுக்கு மணமுடித்து வைக்க வேண்டினான். தன் குலமுறைக்கு ஒவ்வாதது என்று சொல்லித் தன் தோழன் பதுமுகனுக்குக் கோவிந்தையை மணமுடித்து வைத்தான்.

**2-வது கோவிந்தையாரிலம்பகக்**

**கதைச் சுருக்கம்**

**முற்றும்.**

## 2—வது
# கோவிந்தையா ரிலம்பகம்

### விருத்தம்

கோவிந்த கனியுந் தேனு கண்டுசர்க் கரையோ டப்ப
மாவிந்த மலரு மிட்டு மதகரி முகனை வாழ்த்திப்
பூவிந்த மேனி யான பொற்கொடி யிட நன் மாதின்
கோவிந்த யிலம்ப கத்தைக் கூறுவோங் குவல யத்தே!

அன்றுமவன் தான்கூடி ஐந்நூற்றெட் டுப்பேரும்
நன்றியுடன் வளர்ந்து நன்ரு யிருக்கையிலே
அப்பதியின் வேடர்அவ ரெல்லாருந் தான்கூடி
[1] நிம்மல மாக [2] நிரைகொள்ள வேநினைந்து
விரைநிரை கொள்ளவந்த வேடர் தமைநோக்கி
[3] புரைசேவல் நிமித்தம் புனற்றுவே டன்னுரைப்பான்
கட்டியக் காரன் கனத்தமன்னன் தன்பதியில்
இட்டமுட னிரையை யாங்கொண்டு போம்பொழுது
திட்டெனவே படையைச் சேரமே லேவிடுவன்
வெட்டப் படையை வெருட்டிவிட்டு நாம்போவோம்
போனு லொருவனெருரு பொற்றேரி லேவருவன்
தானெருவ ஞகவந்து தட்டளிய வெட்டிவென்று
இன்றுநிரை போகாம லிமைக்குமுன்னே தான்கூடி
மிண்டுகொண்டு போவனென்று விளம்பினு னப்போது

### விருத்தம்

அன்றுதான் வேடன் சொன்ன அறிவுள்ள வேடன் றன்னை
குன்றினில் வேட ரெல்லாங் கோவித்துப் பார்த்துரைப்பார்

---

1 நிர்மலமாக; நிர்மூலமாக போலும். நிம்மளமாக என்றுளது.
2 பசுக்களைக் கவர்தல். 3 புரைசெவழ என்றுளது.

சென்றுநாம் நிரைகொண் டாக்கால் சேரநம் படையை
வென்று
ஒன்றவன் றேரில் வந்து ஒருநிரை மீட்ப னென்றான்.

என்றுசொன்ன புன்றலே வேடன் தனையிகழ்ந்து
நன்றுநன்று யென்றிவனை நகைத்தனர்காண் அம்மானை !
சுட்டியக் காரன் கனபடையை வெட்டிவென்று
துட்ட நிரை கொண்டு சொன்னபடி மீட்கையிலே
ஒத்தைத் தேர்க்காரன் ஒருவன்வந்து தோன்றுவனும்
வென்றியாய் வெட் டிவென்று வெல்வானும் நம்படையை
குன்றுதனில் வேட ர் குவிந்தார் பெரும்படையாய்
தங்கள்குல தெய்வஞ் சண்முகனை யும்நினைந்து
அங்கப் புலிபோலே அவ்வேட ரெல்லோரும்
கானகத்தில் வேடர் கருமேகம் போல்திரண்டு
சேனைபடை வெள்ளந் திரண்டு நடந்ததுவே
வேடர் பறையறைந்து வேண்டு நிரைகிடக்கு
நாடதனை நோக்கி நடந்துவரு மந்நேரம்
அந்தச் சச்சந்தன் அருஞ்சுரவி கானகத்தில்
நந்தகோ னென்கிறவன் நாமமு மேரிடையன்
கேகயப் பிள்ளைபுள்ளு கிளர்ந்துகுரல் பாடியதே
ஏக்கமுள்ள நந்தையர்கோ [1]னிவ்வாறெலாமுரைத்தான்
இந்நிமித்த மிட்டதினு லிந்நிரைக்குத் தாழ்வுவரும்
மன்னர் பெரும்படையோ மற்றோர்கள் தன்படையோ
கொள்வா னிரையெனவே கூறினு னப்பொழுது
காற்றுநிற்கும் வேளையிலே கனவேடர் தான்கூடி
சோற்று நிரைகொண்டார் சிலேவேட ரப்பொழுது

## விருத்தம்

வேடுவர் நிரையைக் கொண்டு விரைந்துடன் போர போது
காடெல்லாங் கன்று நின்று கதறியே யலமந் தோடித்
தேடியே சுட்டி யன்றன் திருமுன்பு சென்று நின்று
பாடெல்லாம் உரைத்தார் கோன்கள் பதறிவிண் ணப்பஞ்
செய்தார்.

1 னிவாரெலாமுரைத்தாள் என்றுளது.

கட்டியக் காரன் கண்டு மிகச்சோர்ந்தான்
இட்ட பரிகலங்கள் யானை குதிரைகளும்
வெட்டெனவே காலாளை விரைய வரவழைத்து
கட்டுடனே நல்ல கனபடையைத் தானேவி
ஏவினுன் தன்படையை யிடிபோல் முரசதிர
கோஷித்துச் சென்றுபடை கூடியதே யப்பொழுது
நிரைகொண்ட வேடுவரும் நின்ற பெரும்படையும்
பொருந்த யிருபடையில் புன்வேடர் வெற்றிகொண்டார்
தட்டழியக் கட்டியக் காரன் படைசாய்ந்து
வெட்டித் துரத்தி வேடர்கொண்டு போனுர்கள்
அப்போது நந்தை யலேமலேந்து தானேடி
இப்படையை வெட்டி இந்நிரையை மீட்டவர்க்கு
என்மகளை யான்கொடுப்பேன் (என்றுநலங் கூறிவிட்டான்)
நன்னயமா யுள்ள நகரிதனி லுள்ளோரும்
கூற்ருேடு மற்பொருது கொடுப்பாரோ தன்னுயிரை
வார்த்தை மிகவுரைத்து மகிழ்ந்து யிருந்தனர்காண்

## விருத்தம்

இருந்தன ருயிரை யோம்பி யெதிர்த்துட னிரைமீ ளாமல்
அருந்தவச் சீவ கன்ருன் [1]இவ்விட ரேதென் றெண்ணிப்
பொருந்திய உரையைக் கேட்டுப் புறப்பட்டான் தோழ
ரோடு
பெருந்தவ முடைய மன்னர் பிறர்கொளப் பொருந்தா
னென்றே!

கட்டியக் காரன் கனபடைதான் தோற்றதுவும்
வெட்டவென்று வேடர் மிகநிரையைக் கொண்டதுவும்
இட்டமுட னுனு மிந்நிரையை மீளாமல்
நாட்ட முடனே நாலுபேர் தானறியக்
கொடுபோகப் பார்த்திருந்து கூண்டா யிருப்பேனேல்
அடுபால்தயிர் சோறருந்தி யறிவிலிபோ லாவனென்ருன்.

---

1 தானியேதென் றெண்ணிப் என்றுளது.

## விருத்தம்

திரும்பாத நெடுநிரையைத் திரும்ப விட்டுச்
சோரரை வெற்றிகொண்டு நேரே ருகில்
அரும்பாருங் குழலுடைய மனையாள் நிற்க
அம்மனையை விட்டகன்று அயலாய் நின்று
கரும்புவரு மொழிபயிலுங் காம சிங்கி
கண்ணுனைக் களங்கமே லாசை வைத்து
விரும்பாத பரத்திரிமேல் விரும்ப நின்ற
வீணர்தனில் வீணனென்ருன் (வீர மைந்தன்.)

யென்றுசப தங்கூறி யிளையதம்பி யானதொரு
ஆனந்த திட்டனையும் அப்போ வரவழைத்து
தேரை யலங்கரித்துச் சென்றுகொடு வாவெனவே
ஆனதொரு தேரை யலங்கரித்துக் கொண்டுசென்ருன்.
தொண்டுபடி நின்றதொரு தோழமார் தன்னுடனே
பண்டுதான் நற்குருவைப் பார்மேல்நின் றேதொழுது
அண்டரெலாம் போற்ற அகமகிழ்ந்து சீவகனர்
தேரேறி விற்பூட்டிச் சீர்கணையுந் தான்தெறிந்து
பாரோர் மனமகிழப் பச்சைத்தேர் தான்னடத்தி
குன்றின்மலை வேடருடன் கூடினு ரப்பொழுது
அன்றுவொரு தேரு மருள்வேடர் கண்களுக்குக்
கோடிநா ருயிரந்தேர் கூடி வளைந்தாப்போல்
நாடியே யந்நேரம் நன்ருய் வளைந்துகொண்டார்.
புன்றலை வேடன்முன்னுள் பொருந்தி உரைத்ததுதான்
இன்று முகிந்ததென்று யியல்வேடர் தான்கூடி
மூன்றுநா ருயிரத்து முப்பத்தோ ராயிரம்பேர்
ஒன்றுநின்று சீவகனை யெல்லோருந் தான்கூடி
தொந்தி வளைத்தவில்லால் சுடுகணைமா ரிசொரிந்தார்.
கணைமாரி யானதெல்லாங் கைவில்லு மொன்ருலே
முனையாக நின்றெதிர்த்து செய்துவிட்டான் சித்திரங்கள்.
வில்வேடர் தங்களையும் வில்நாணை யும்மறுத்து
கல்வேடர் தன்தலையைக் காடெல்லாந் தானுருட்டி
வேடர்புறஞ் சாய்ந்தோட வெற்றிகண்டு சீவகனர்
நாடி நிரைமீட்டு நாட்டில்வந்தா ரம்மானை!

## விருத்தம்

வேடரைத் துரத்தி வெட்டி விடுநிரை தன்னை மீட்டுச்
சேடநன் மைந்த ஞனை சீவகன் மீண்டா னென்னக்
காடென மனம யங்கிக் கட்டியக் காரன் நொந்தான்
நாடவர் மனது மெய்து நன்மையா யினிதி ருந்தான்!

மின்னிரையை மீட்டுவந்த வெற்றிகண்டு சீவகரை
அந்நகரி லுள்ளோ ரார்ப்பரித்துத் தான்மகிழ்ந்து
பாக்கிலையு மன்பாய்ப் பலபேருந் தான்கொடுத்தார்
ஆகமுட னங்கே அலங்கரித்தா ரந்நேரம்
அவ்வகையா யங்கிருக்கும் அந்நாளி லப்பொழுது
செவ்வகை நந்தையர்கோன் சீவகனோ டேதுரைப்பான்
சச்சந்த மகராசன் தன்ம நெறியுடையோன்
மெச்சநிரை மேய்த்திருந்தேன் என்மனைவி யாறுபேரும்
வேதா விதியால் விளங்கிவந்த மங்கையவள்
கோதா விதியாள்பெற்ற கோலத் திருமகளார்
கோவிந்தை யென்பாளையென் கோன்நிரையை மீட்டவர்க்கு
மாவிந்த மாக மணஞ்செய்வே னென்றுசொல்ல
என்னிரையை மீட்டீ ரென்மகளைக் கொள்ளுமென்றான்.
மன்னவர்க ளோடே மகிழ்ந்துரைத்தா னப்போது
நின்று மவன்பேச இராச குலதிலகன்
நன்றிமணஞ் செய்வேனென்று நன்மனதி லுள்ளுறுத்தி
உள்ளபடி பாங்கா யுடன்படுவோ மென்றுசொல்லி
வள்ள லவர்க்கு மகிழ்ந்துரைத்தா னப்பொழுது
வங்கிஷத்துப் பூமாலை சூட்டும் வகைபோல
நீங்கி மனதிலெண்ணி நின்றகலுன்னிப் பார்த்திருந்தான்.
உவந்த மனக்கருத்தை உள்ளறிந்து நந்தையர்கோன்
தவஞ்செய்து தான்பிறந்த தையல்நல்லாள் தன்மகளை
அம்மகளைத் தானே யலங்கரித்துக் கொண்டுவந்து
செம்மையுள்ள சீவகனின் செங்கையிலே நீர்வார்த்தான்
நீர்வார்க்க சீவகன்றன் நெறியுடைய தோழர்களில்
பாரார் பதுமுகற்குப் பைந்தொடியென் றேயொப்பாள்
யேற்றபடி யந்த ஏந்திழைகோ விந்தையரும்
வாழ்த்திப் பதுமுகனும் வாழ்ந்திருந்தா ரப்பொழுது.

## விருத்தம்

பார் தனில்ச் சீவ கன்றன் பதுமுகன் தனக்கு மன்பாய்
கோவிந்தை மாது தன்னைக் குணமொடு மணமுஞ் செய்து
பேர்பெருஞ் செல்வ மோங்கப் பெருந்துயர் நீங்கி மண்மேல்ச்
சீர்பெற யிருந்தார் மெத்த தெளிவுறு கதையு ரைப்பாம்!

## 2-வது கோவிந்தையாரிலம்பகம் முற்றும்.

(இத்துடன் திருவனந்தபுரம், காரியவட்டம், கேரள பல்கலைக் கழகச் சுவடி நிலையத்திலுள்ள சுவடி எண். 10366-ன் பகுதிகள் நிறைவுபெறுகின்றன.)

உ

## 3—வது

# காந்தருவதத்தையார் இலம்பகம்

### கதைச் சுருக்கம்

இராசமாபுரத்து வணிகன் சீதத்தன். அவன் பொருள் இழந்து வருந்திக் கடல்கடந்து பொருளீட்டி. அப்பொருள்களைத் தன் தோழர்களுடன் மரக்கலத்திலேற்றிக்கொண்டு வெகுதூரம் கடந்து வருகின்றான்.

ஆண்டு, 'வெள்ளிவேதண்டம்' என்னும் மலைமீதுள்ள அழகுமிக்க நகரத்தில் அரசு செலுத்தும் [1]'ஏழுலகன்' என்பான் மகள் 'காந்தருவதத்தை'. இவள் பிறந்ததும், நிமித்திகர் மூலம், இவளுக்குக் கணவன், 'இராசமாபுரத்து வீணைவல்லான் ஒருவனே' என்று அரசன் அறிந்தான். இவள் பருவமடைந்ததும், தரன் என்னும் மந்திரியை அனுப்பித் தக்கபடி ஏற்பாடு செய்ய அனுப்பினான்.

விஞ்சை வல்ல தரன், மரக்கலத்தில் வந்துகொண்டு இருந்த சீதத்தனை மாயையினால் மயக்க, அவன் கடலில் விழுந்து கரையேறி, தரனைக்கண்டு செய்தியுணர்த்தான். தரன் அவனை விண்வழி அழைத்துப்போய் காந்தருவ தத்தையை ஒப்படைத்து, இராசமாபுரம் அனுப்பினான். அவன் அவளைத் தன் மனைவியிடம் கொடுக்க, இருவரும் தன் சொந்த மகள்போல் வளர்த்தனர். தனது மரக்கலத்திருந்த தோழர்கள் நலமுடன் வந்து பொருளுடன் வணங்கினர். மகிழ்ந்தான்.

---

1 கலுழவேகன்.

வீணைவல்ல காந்தருவதத்தையை வெல்பவருக்கு, அவளைத் திருமணம் செய்துகொடுப்பதாக முரசறைந்தான். மன்னர்கள் பலரும் வந்து தோற்றனர். சீவகன் வந்து. வீணையின் நிறைவு குறைவு கூறி, அவளை வீணையில் வென்றான். காட்டாங்கன் என்பான், தோற்ற மன்னர்களை ஏவிவிட்டுப் போரிடச் செய்தான். சீவகன் வென்று காந்தருவதத்தையை மணமுடித்துக் கொண்டான்.

**3-வது காந்தருவதத்தையாரிலம்பகக்**

**கதைச் சுருக்கம்**

**முற்றும்.**

## 3—வது

# காந்தருவதத்தையாரிலம்பகம்

அம்மானை ரம்மானை ராடியசி ரம்மானர் !
ஆரை யினிப்பாடி யாடுவோ மம்மானர் !!

[1](அழகுடைய அருகனடி தொழுதிடுஞ் சீர்வணிகன்
இழந்த பொருளீட்டிக்,)* காதலுட னேயந்த
(சீதத்தர் தோழருடன் தா)னுமந்த [2]சரக்கேற்றி
(ஓதக் கடல்மீதில் ஓட்டிவ)ந்தே வெகுதூரம்
(மழைவரும் குறியறிந்து) மருவிநின்ற ரம்மானர்.
(வேகமுடன் வருந்)தோணி வளைந்ததுகா ணம்மானர்.

அப்போது மேகமெல்லாம் அதிதீவி ரம்மாகி
செப்பமுட னெண்திசையும் சேர்ந்து வளைந்ததுவும்
மூடி யெழும்பியேதான் முழங்கிப் பெருங்காற்றும்
நாடி மழைபொழிய நற்சோங்கு[4] தான் நடுங்க
மழையும் பெருங்காற்றும் வந்தவுட னப்பொழுது
(வழியறியா தேவணிகன் வாகாய் நிமிர்ந்துகண்டான்)
[3]மாலாய் ஒருமலையும் வன்மையுடன் தானுளது
(விந்தைக் குகந்ததுவாம்) வெள்ளிவே தண்டமெனும்
அந்த மலைமீதில் அழகுபெறு மோர்நகரம்
விந்தைபெறும் பட்டணத்தில் வீரியதோர் வேந்தனவன்
கந்தருவ வமிசத்தில் காளையவன் ஏழலகன்[5]
(மன்னவனும் வேகனவன்) தன்னுடைய பெண்ணொருத்தி
(கன்னல்மொழிக்) காந்தருவ தத்தையெனும் காரிழையாள்

---

1 இதற்குமுன் சிலவரிகள் இல்லை. 2 சொங்கேற்றி என்றுளது.
3 இதற்கு எதுகை இல்லை. 4 மரக்கலம். 5 கலுழவேகன்.
*விடுபட்ட இடங்கள் அடைப்புக் குறிக்குள் நிரப்பப்பெற்றுள்ளன.

(மதிமுகத்தாள் தன்னுடைய) மன்னவனு ரென்றவனும்
(சோதிடரைத் தானழைத்து) சொல்லுமென்றே
கேட்டவுடன்
(மாதுநல்லாள் தன்னுடைய மதிவழியைத்) தான்பார்த்து
(நுந்தன் மகளார்) நேரிழையா ருக்குரிய
அந்தமுள்ள கணவன் ஆருமில்லை என்றவர்கள்
முல்லை நகையாரும் பிறந்த முகூர்த்தமதால்
வல்லமையால் வீணை வாசிக்க வல்லவன்காண்
நாயகியார் தந்தமக்கே நன்னு வலந்தீவில்
இராசபுர மென்பதொரு நன்னகரி யுண்டதிலே
வாழு மொருவனவன் மாலையிடு வான்மகளை
ஊழியி லுள்ளபடி ஓதியிட்டே சோதிடர்கள்
நேய முடன்விதித்தார் நேயமுட னப்பொழுது
தாமக் குழலாளுஞ் சதிருடனே தான்வளர்ந்து
சோம வதனியரும் துலங்கியிடும் வீணையினில்
மெத்தப்பிர சித்தமுடன் விளங்குகின்ற நாள்தனிலே
கற்றைக் குழலாரும் காமபரி பக்குவமாய்
யௌவனத்தி னுல்மிகுந்த ஏந்திழையைத் தான்கண்டு
கௌவையுட னத்தந்தை கவலையுற்றே யம்மானை!

மாதினுக்குத் தானுரிய வரனழைத்து வாருமென்றே
மந்திரியைத் தானழைத்து வாகுடனே தானுரைப்பார்
செந்திருவாள் தன்னிமித்தம் செப்பூ(ர்)த்தி யாந்தனக்கே
அந்தமுடன் நீர்போகி அன்புடனே தான்பார்த்து
மூந்த மறையாளர் முடியரசர் வைசியர்கள்
சாதியினு லிம்மூவர் தங்கள்குல கோத்திரத்தில்*
ஓதியசொற் கேட்டவனும் மிகுந்தமதி மந்திரியும்
ஆதரவி னுலவனும் அந்நா வலந்தீவில்
சேர வரும்பொழுது சீதத்த ரைக்கண்டு
தீர்க்கமுடன் ராசபுர செட்டியிவ ரென்றறிந்து
மாயமுடன் செட்டியர்தன் மரக்கலத்தி னுல்மிகவும்
செய்யுமிந்திர சாலமிப்போ செய்திடுவே னென்றெண்ணிக்
காற்றும் பெருமழையும் கனமாக ஏவிடவே

*தொடர்பு சரியில்லை; வரி விடுபட்டுளது போலும்.

அப்பொழுது மேகமெல்லாம் அதிதீ விரமாகி
செப்பமுட னெண்திசையும் சேர்ந்து வளைந்ததுவும்
மூடி யெழும்பியேதான் முழங்கிப் பெருங்காற்றும்
(நாடி மழைபொழிய நற்சோங்கு தான்நடுங்க)
சத்தமுட னிந்திரசாலம் செய்தனர்கா ணம்மானை!

(சித்தங் கலங்கவைக்கும் சத்தப் பேரிடியும்
மழையும் பெருங்காற்றும் மரிகடலில் வீசுவதால்)
சுழலும் பெருஞ்சோங்கும் சுற்றியே தானடுங்க
கண்டந்த சீதத்தர் கனக்க விசாரமுற்று
மண்டியிடுங் காற்றும் மழைக்கு மிகப்பயந்து
தாங்கிய சோங்குவிட்டு சமுத்திரத்தில் போய்விழுந்து
பாங்குடனே ஓர்மரத்தைப் பற்றியவர் கைக்கொண்டு
மெள்ளவே வந்தவரும் வெருண்டே கரையேறி
உள்ளபொன் னத்தனையும் முறமையுள்ள தோழரையும்
கப்பலுடன் சாகரத்தில் கவிழ்த்துவிட்டோ மென்றவரும்
செப்பவொண்ணு துக்கமதைச் சேர்ந்தனர்கா ணம்மானை!

அப்போது சோங்குதனில் அமர்ந்தசன மத்தனையும்
தப்பியவ ரெல்லோரும் சால எடுத்துரைப்பார்
சீதத்தர் சாகரத்தில் சென்றமிழ்ந்தி னரென்று
மா துக்க மாகியேதான் வருந்தி மிகத்தோழர்
நல்லதொரு சோங்குதனை நலமுடனே தானிறுத்தி
மெள்ள நிறுத்தியவர் விசாரமிட்டுத் தானிருக்க
இந்தப் படியாகி இருக்குமந்த வேளையிலே
வழிப்போவர் போலேயந்த மந்திரியு மப்பொழுது
வழுவுத லில்லாத வணிகனிடம் சேர்ந்தவனும்
கப்பல் கவிழ்ந்ததென்றே கடுகியே தானுரைக்க
செப்பமுடன் சென்றவரை சீதத்தர் தான்பார்த்தே
ஒப்புர வாயவர்க்கே ஓதிடுவா ரந்நேரம்
இப்பொழுது சோங்குதனில் எண்ணவொண்ணு நன்னிதியும்
உலகில் கிடையாத உயிர்த்தோழர் அத்தனையும்
அலைகடலில் மூழ்கியேதான் அமிழ்ந்திட்டா ரம்மானை!

எல்லா முறைத்துமவர் ஏங்கியே கிலேசமுடன்
சொல்லாத் துயரமுடன் சொன்னபடி தான்கேட்டு
அப்பொழுது மந்திரியா ரானதரன் செப்பலுற்றார்.
செப்பமுட னஞ்சாதே செட்டியரே உம்முடைய
செம்பொன் மரக்கலமும் சீர்தோழ மாரையெல்லாம்
இன்பமுடன் காட்டிடுவேன் என்பிறகே வாருமென்ன
நல்லதென்றே சீதத்தர் நாடியவர் பின்னேடே
செல்ல நினைந்தனர்காண் சீதத்த ரம்மானை!

விந்தையுடன் மந்திரியும் விமானம் வரவழைத்து
அந்த விமானத்தில் அன்பாய் இருவோரும்
ஏறிப்புறப் பட்டனர்கா ணின்பமுட னப்பொழுது
வீறியதோர் தன்மனையில் வேகமுடன் போய்ப்புகுந்து
எந்தன்மனை தானுமிது என்றுரைத்துச் செட்டியர்க்கு
அந்தமுடன் போசனங்கள் அன்புடனே பண்ணுவித்து
மந்திரியு மப்பொழுது வாஞ்சையுட னேயுரைப்பான்:
இந்த நகரத்தில் [1]ஏழுலக வேகனென்னும்
மன்னவனார் தன்மகளார் மாதினிட பேர்தானும்
கன்னல்மொழிக் காந்தருவ தத்தையெனுங் காரிழையார்
அன்னநடை யாள்தனக்கே அன்புடனே நின்னுடைய
நன்னகரி லோர்புருடன் நாடிவிதித் திட்டபடி
காந்தருவ தத்தையெனும் காமினியாள் வீணைதனில்
பூந்திருவாள் நல்ல புகழுடைய பாங்கியவள்
ஆயிரம் வீணையவள் அழகுபெற ஓதிடுவாள்
சேயிழையாள் தன்னையிப்போ சேரழைத்து நீபோகி
உம்முடைய பட்டணத்தில் ஓங்கியதோர் பிராமணரில்
செம்மையுள்ள சத்திரியர் சீர்வணிகர் தங்குலத்தில்
யாதா மொருவனவன் ஆரிழையார் தன்னுடனே
ஆதார வீணையினில் அன்பாய்க் [2]கெலித்தவர்க்கு
பைங்கொடியைக் கலியாணம் பண்ணுவீர் என்றுசொல்லி
அங்கவர்க்குப் பக்குவமாய் அன்புடனே தானுரைத்து
அந்தமுடன் காந்தருவ தத்தையாரை யப்பொழுது
சந்ததமு சீதத்தர் தன்னுடைய கைகொடுத்து

---

1 கலுழவேகன். 2 செயித்தவர்க்கு.

உன்மகளைப் போலே உகந்தருளீ ரென்றுசொல்லி
நன்மையுடன் கட்டுவர்க்கம் ரத்தினு பரணமெல்லாம்
பைம்பொன் கலையுடனே பாங்கியர்கள் கைச்சூழ
இன்பமுடன் ஆபரணப் பெட்டிகளு மேந்திழைக்கு
செம்பொன் அநேகமுடன் சேரவே தான்கொடுத்து
அன்புடனே ஆயிரம்பே [1]ரணக்கியமார் தானளித்து
வீணைக்குத் தோழியென்னும் வித்தியா தரர்குலத்தில்
வாணுதல்வீ ணுபதியாம் மங்கையரைத் தான்கூட்டி
இத்தனைபேர் தன்னுடனே யேகியே உம்முடைய
வெற்றிமனை கொண்டுசென்றே வீறுபெற வைத்திருந்து
வீணை தனில் வென்றருளும் வெற்றிமுடி மன்னருக்கே
நாணயமாய்க் கன்னியரை நல்கியிடு மம்மானை!

மந்திரியு மப்பொழுது மங்கைநல்லார் தங்களையும்
சிந்தையுடன் கூட்டியந்த செட்டியார் தன்னுடனே
செம்பொன் விமானமிசை சென்றறிய வப்பொழுது
இன்பமுடன் வந்தார்காண் ராசபுர மீதிலேதான்
சமுத்திரத்தில் அக்கரையில் சார்ந்துவரு மப்பொழுது
அமுத்தியிடும் சோங்கும் அன்புடைய தோழருந்தான்
வந்துகரை சேர்ந்ததுவும் வாகுடனே யவ்வளவில்
சிந்தைமகிழ் தெத்தருக்கே தெண்டனிட்டா ரம்மானை!

சந்தோஷ மாயவரும் தான்என்னும் மந்திரியை
சிந்தா துரமாக சேரவே தானழைத்து
செம்மையு னும்மிடந்தான் சேருவீ ரென்றுரைக்க
தம்மிடத்தில் மந்திரியும் சார்ந்தனர்கா ணம்மானை!

சீதத்தர் காந்தருவ தத்தையரைக் கொண்டுசென்று
மீதுற்ற ராசபுரம் மேவியே தன்மனையில்
காதலுடன் சென்றவரும் காதலியைத் தானழைத்து
மாதுநல்லாள் காந்தருவ மங்கையரைத் தான்காட்டி
அந்தர மாமுலகில் அரசனுட தன்மகளார்
மந்திரமாம் வீணையினை வாசிக்க வல்லவள்காண்

---

1 அணங்கியர் போலும். அணங்கார்—பெண்கள்; அணங்கினர்—தேவப்பெண்கள்.

வீணைதனில் வென்றவர்க்கு மெல்லியரும் மாலையிட்டு
நாணயமாய்க் கலியாணம் நலமாகச் செய்யவென்றே
இன்பமுடன் என்கையில் ஏலக் குழலாளை
அன்புடனே தான்கொடுத்தார் ஆரிழையே கேளுமென்ன
பெற்றிடும்பெண் ணுகவேதான் பிரியமுடன்
தான்கொடுத்தார்
மற்றவளை நீயுமிப்போ மகளாய் வளர்த்திடுவாய்
என்றுரைத்தே செட்டியரும் ஏந்திழையாள்
கைகொடுத்தார்
நன்றுநன் றென்றேதான் நலமாய்ப் பிரியமுடன்
தன்னுடைய பெண்ணிவளே தப்பா தெனமகிழ்ந்து
அன்னநடை யாருமங்கே ஆனையிட நற்கழுத்தில்
நாட்டிலுள்ள மன்னவர்கள் நாடியிங்கு வாரபடி
காட்டி முரசுதனைக் கட்டுமென்று ரம்மானுர்!

அவ்வளவில் ராசமன்னர் அத்தனையுந் தான்வருவார்
செவ்வையுடன் சீதத்தர் சேர்ந்தசுப லக்கினத்தில்
வந்தவந்த மன்னவரை வாஞ்சையுடன் தானழைத்து
அந்த முடனவரை அங்கிருக்க வேயமர்த்தி
செந்திருவார் காந்தருவ தத்தையரைச் சிங்காரித்து
சந்ததஞ் சுயம்வரமும் [1]சாங்கமுட னேசமைத்து
பளிங்குமணி மண்டபத்தில் பாங்கியர்கள் கைச்சூழ
உளங்களிக்கும் காந்தருவ தத்தையெனு மெண்டொடியும்
வந்திருந்து பின்னவளும் வாங்கியே வீணைதனை
சந்ததமு நன்ருக சரசுவதியைத் தான்துதித்து
வீணைபலர் வாசிக்க வேந்தரவர் தான்கேட்டு
நாணயமாய்ப் பார்த்து நலமாக வீற்றிருந்தார்
வீணு பதியென்னும் மெல்லியர்தா னங்குவந்து
நா ணுமல் ராசவர்க்கம் லட்சகரைத் தான்பார்த்து
நீருமொரு வீணைதனை நிலவரமாய்ச் சொல்லுமென்று
காரிழையார் சொல்லலுமே காந்தருவ தத்தையரும்
செங்கையினுல் வீணைதனைத் திருந்தவுடன் வாசிக்க
கொங்கைநல்லாள் ராகக் குரலதனைக் கேட்டவுடன்

---

1 ஒழுங்குபட.

வானில் சகோரமுடன் மற்றுமுள்ள பட்சியெல்லாம்
தானே யதுமயங்கித் தரையின்மே லேபடியும்
மன்னவர்கள் தன்கையினால் வாசிக்க வீணைதன்
இன்னிசையைக் கேட்டவுடன் எழும்பியே பட்சியெல்லாம்
தட்டி எழுப்புவர்போல் தானோடும் வானகத்தில்
மட்டுளதோர் மன்னவர்கள் வர்க்கமெல்லா மிப்படியே
வீணைதனில் தோற்றார்கள் வேந்தர்குல மத்தனையும்
நாணயமாய்ப் பிராமணரும் நல்ல வைசியருந்தான்
வந்துவந்து மங்கையரை மணமிசைய வேணுமென்று
தந்தியுள்ள வீணைதனில் தான்சமந்த மில்லாத
மங்கையரை விட்டகல மாட்டாம லப்பொழுது
அங்கவர்கள் நொந்தே அலைந்தனர்கா ணம்மானை!

(ஆறைஞ்சு நாளளவும் இப்படியே யாகியவள்
ஆருஞ் செயித்திடவே அறியாமல் நிற்கையிலே
காட்டாங்க மன்னவனும் காதலுட னேயுரைப்பான்
தாட்டீக மன்னரெல்லாம் தலையிறங்கித் தோற்றார்கள்
நாட்டிலுள்ள சேனையெல்லாம் நாயகிக்காய் வீணைதனில்
மாட்டாமல் தோற்றபடி வண்ணமதாய் மங்கையரைப்
பரமேசு வரனெரித்த பஞ்சசர வில்லியுந்தான்
சுரமுடைய வீணையினால் சுந்தரியை வெல்வதல்லால்
மற்றொருவ ரம்புவியில் வல்லவரு மில்லையென்ற
சத்தமதைச் சீவகனார் தன்தோழன் கேட்டுவந்து
சீவகனார் தன்னுடனே செப்பவே தான்கேட்டு
காவலரு நாமதனைக் கண்டறிவோ மென்றுகந்து
தம்முடைய தந்தையிடம் சார்ந்துமவ ரப்பொழுது
செம்மையுடன் கந்தோர்க்க செட்டியார் தம்முடனே
இந்த வசனமெல்லாம் எடுத்துரைக்கும் வேளையிலே
அந்த சமையத்தில் காட்டாங்க னம்மானை!

நாடக சாலையிலே லாவண்ணிய மாயொருபெண்
சூடகக் கச்சியவள் துலங்கனங்க மாலையென்பாள்
செந்தா மரைமுகத்தாள் செங்கழுநீர்ப் பூவாலே
(பந்தா)க வோலைதனைப் பரிவுடனே தானெழுதி

(கந்தோ)ர்க்க செட்டியர்க்குக் கடிதியே தானனுப்ப
அந்தோலே வாசிக்க வந்தா ஞெருதோழன்
ஓலேயுள்ள வாசகத்தை ஓதுவா னப்பொழுது
கோலமுடிச் சீவகன் முன்னே குறிப்பாக
முன்னுளில் அனங்கமாலே முரிகுழலா ளாடுகைக்கு
சொர்ணு பரணமுடன் துலங்கியே சேலேகளும்
நன்ரு யிசைவாக லட்சணமாய்க் கட்டியிட்டு
பன்ருன சீவகரும் பார்த்து மிருக்கையிலே
ஒப்பித்த ஒப்பனேயும் ஒண்டொடியும் தான்கண்டு
செப்பமுடன் சீவகர்மேல் தேன்மொழியும் மோகமுமாய்
ஆவலுடன் கூத்தும் அதிமோகம் சீவகர்மேல்
நாட்டமுட னுடயிலே நற்கூத்தும் விட்டொழிந்து
[1]கும்பகாரன் மண்மிதித்தாற் போலே குழறியிட
இன்பமாகக் காட்டாங்கன் நிலேயறிந்தே யம்மானுர் !

ஆட்டம் முடிந்தவுடன் எல்லோரும் போனபின்பு
தாட்டீக மாயனங்க மாலேயரைத் தானழைத்து
இப்படிநீ தப்பாட்டம் ஏனுடி ஞயென்றே
அப்படியே பல்லுதிர அறைந்தனர்கா ணம்மானுர் !

அன்றுமுத லின்றுவரை அன்பான சீவகர்மேல்
கன்றியே காட்டாங்கக் காரன் சினந்திருக்க
வீணே படிக்கவல்ல மெல்லியர்தம் மண்டபத்துக்
காணும்படிப் போதுகைக்குக் கடவல்லா சீவகர்க்கு
ஒண்ணுது காணுமென்றே ஒளிதாரான் வாசிக்க
நன்ருகக் கேட்டந்த நாயகனுர் செட்டியரும்
காட்டாங்க மன்னவர்க்கே கனத்தபட்டம் வந்திருக்க
நாட்டமுடன் துக்கமிப்போ நாமும்பா ராட்டுகைக்கு
ஒண்ணுது காணுமென்று உத்தமனு ரப்பொழுது
நன்ருகப் பாலகனே நாடியவர் கைக்கொண்டு
கந்தோர்க்க செட்டியரும் கிலேசமிக வாகியேதான்
(வந்த பகையை வளர்க்க மனமின்றி)
சீவகனுர் தம்மை திறமையுடன் பார்த்தவரும்

1 குயவன்.

ஆவலுடன் சுயம்வரத்து மாளிகைக்கே யப்பொழுது
போகவொண்ணு தென்றுசொல்லி புத்தி பலவுரைக்க
நாகரிக மாகவேதான் நகைத்தந்த சீவகரும்
தோழமார் தன்னுடனே துலங்கவே சிங்காரித்து
வேழமீ தேறியவர் வெளியே புறப்பட்டு
காந்தருவ தத்யைிட காவணக்கால் மண்டபத்தில்
சேர்ந்தார்கா ணப்பொழுது சீவகரு மம்மானை !

ஆனையின் கீழிறங்கி அங்கிருந்த பொற்றவிசின்
சேனை திடுக்கிடவே சென்றே யினிதிருந்தார்
வீணையினுல் தோற்றுநின்ற வேந்தர்குல மத்தனையும்
பூனைத் திரள்போல பொருந்தியவர் தாமிருந்து
திருமருவுஞ் சீவகனுர் திவ்வியாங்க லட்சணமும்
மருவியிடுங் குண்டலமும் வாழ்முகமும் மங்கையரை
அணையவல்ல திண்டோளும் அம்பொன்மணி முன்னூலும்
இணையில்லாப் பேரழகை யெல்லவையுங் கண்டரசர்
மங்கையருக் கேற்றநல்ல மணவாள னுமிவன்காண்
சங்கையில்லா வீணைதனை சமத்துடனே வென்றுயர்ந்தே
கொங்கைநல்லாள் தன்னைமணம் கொண்டிடுவா
னென்றுசொல்லி
அங்கணுள்ள மன்னர்மொழிந் தாடினர்கா ணம்மானை !

இந்தப் படியாகி இருக்குமந்த வேளையிலே
கந்துக் களிறுநடைக் காந்தருவ தத்தையரும்
பார்க்கத் தொடங்கினள்காண் பாவையுந்தன் கண்ணாலே
தீர்க்க முடன்பார்த்தாள் திரைநீக்கி சீவகரை
அழகு மிளமையுடன் ஆண்மையுடன் மேம்பாடும்
மொழியுந் திருவாயும் முல்லைமுகை நேர்நகையும்
கண்டாள்காண் காந்தருவ தத்தையருங் கண்களிக்க
செண்டார் முலையாளுஞ் செல்வியருங் கூறிடுவாள்
இத்தனைபேர் மன்னவர்க்குள் இவரேகா ணெந்தனுக்கு
பத்தி யுடன்புருடன் பார்மன்னன் வீணைதனில்
என்னைச் செயித்திடுவார் என்றே யவள்கருதி
அன்ன நடையாளும் அனங்கன் விகாரமதால்

மோகமிக வாகியேதான் முத்துநகை யாளிருக்க
தாகமுடன் வீணை பதியென்னுந் தார்குழலாள்
இன்பமுடன் வீணையொன்று யேந்தியே சீவகர்க்கு
அன்புடனே தான்கொடுத்தாள் அந்தமுட னம்மானை!

வீணைதனை வாங்கியேதான் விரகுடைய சீவகரும்
நாணயமாய்ப் பார்த்து நலமுடனே தானுரைப்பார்
குற்றமுள்ள வீணையென்றார் கோமானு மப்பொழுது
தத்தைநல்லாள் கேட்டே தனக்குள்ள வீணையெல்லாம்
கொண்டுவரச் சொல்லியந்த கொற்றவனார் தங்கரத்தில்
செண்டுமுலை யாள்கொடுக்கச் சொன்னாள் திறமையுடன்
அப்படியே வீணையெல்லாம் ஆணழகன் கைகொடுக்க
செப்பமுடன் வாங்கியந்த சீவகனார் தான்பார்த்து
வீணைதனக் குள்ளபடி விதமெல்லாம் செப்பலுற்றார்
நீணிலத்தில் [1]மன்னவரும் நீர்கேளு மிப்பொழுது
நீரிலே நின்ற நெடியமர மாமிதுகாண்
நீரில் பிறந்தமரம் நீர்கேளுங் காணுமிது
வேம்பினாற் செய்தமரம் வேறென்று காணுமிது
தேம்பி யிடிவிழுந்து சென்றமரம் மற்றிதுவும்
கொல்லை யழுவரிது கொளுத்தியே சுட்டமரம்
வல்லிடும் பானையினால் மதித்தமரம் ஈதென்றே
சொல்லியவ ரிப்படியே சோதித்தா ரம்மானை!

குற்றமுள்ள வீணையெல்லாங் கோமா னெடுத்துரைக்க
தத்தையருங் கண்டே சதிருடனே தன்னுடைய
உறையிற் பொருந்தியிட்ட உயிர்வீணை தான்கொடுத்தாள்
திறமையுடன் வீணைதனைச் சீவகனார் தான்வாங்கிப்
பார்த்தவரு மிவ்வீணை பாங்குடைய தென்றுமிக
சாற்றியவ ரதன்நரம்பில் தனிக்குற்ற முண்டென்றே
தோற்றிருந்த ராஜமன்னர் தோணவே காணும்படி
பார்த்திபனு மந்நரம்பைப் பாங்குடனே தான்பிரித்து
அந்தநடு வில்லிருந்த அணிமயிர் தானெடுத்து
சந்ததமுங் காட்டலுற்றார் சகலருக்கு மம்மானை!

---

1 மன்னவரே என்றுளது.

நல்லதொரு நம்முடைய நலமான வீணைதனை
நரம்பையவிழ்த் திடுமென்ன நாயகருந் தான்வாங்கி
திரும்பவே பூட்டியவர் திரித்தந்த சீவகரும்
வாசித்தார் வீணைதனை மன்னவரு மப்பொழுது
ஓசையுள்ள ராகமுடன் ஓதியிட்டா ரம்மானை!

கேட்டந்த வானவர்கள் கந்தருவர் சோதிடர்கள்
தாட்டீக வித்தியாதரர் சகலருந் தான்கூடி
வந்தே விமானமதில் வானிறயப் பார்த்திருந்தார்.
அந்தமுடன் பட்சி அழகுசக்ர வாளமுடன்
வானிற் சகோரமுந்தான் மற்றுமுள்ள பட்சியெல்லாம்
சேனைத் திரளுடனே சென்றேங்கி பூமிதனில்
ஈப்படிந்தாப் போலே யிறங்கியிடும் பட்சியெல்லாம்
தோப்பிற் சுரும்புடனே தோகைமயில் மானினமும்
சாங்க முடன்தரையில் தான்மயங்கி யேசுழலும்
ஆங்கதனைக் காந்தருவ தத்தையவள் தான்கண்டே
சீவகனார் தம்பொருட்டால் சேர்ந்தோம்நாம் இங்கேயென்று
ஆவலுடன் வீணைதனை அவளிசைத்தா ரம்மானை!

வீணையில் ஓசைதனைக் கேட்டளவில் வேந்தரெல்லாம்
நாணியே தோற்றிருந்த நரபதிகள் அத்தனையும்
மயங்கி விழுந்தார்கள் மன்னவர்க ளப்பொழுது
செயங்கொள்ள மாட்டாத தத்தையரு மன்புடனே
பேழையிற் குள்ளிருந்த பொருந்துமணி மாலைதனை
தோழியைக் கொண்டுவரச் சொல்லியவள் வாங்கியேதான்
சீவகனார் தன்கழுத்தில் தத்தையரும் மாலையிட்டாள்
பாவையற்காய்த் தோற்றிருந்த பார்மன்ன ரெல்லோரும்
மேடைதனை விட்டிறங்கி வெள்கியிட்டே போயவர்கள்
வாடி மனங்கலங்கி மயங்கலுற்று ரம்மானை!

காட்டாங்கக் காரனுந்தான் கடுகியே தானெழுந்து
தாட்டீக மன்னவர்கள் சகலரையுந் தான்பார்த்து
கூறிடுவா னப்பொழுது கோலமுடி மன்னவரே

வீறியேதான் நீங்களிப்போ மெல்லியரைக்
கொள்ளவென்றே
ஆனை குதிரையுடன் அணிரதங்க ளுள்ளதெல்லாம்
சேனை பதாதிகளும் செரிக்கவே நீங்கள்வந்து
மாதுமட மானொருத்தி மங்கைநல்லாள் வீணைதனைத்
தோற்றியே நீர்செயிக்கும் உபாயம் அறியாமல்
தோற்றூர்கள் என்கிறதும் சொல்லினம் அல்லவோதான்
பார்த்தா லபகீர்த்தி பாங்குடைய மன்னவரே!
பட்டணத்தி லோர்வணிகப் பையலிவன் பெண்கொடியை
திட்டமுடன் வீணைதனில் செயித்தவனுங் கொண்டபடி
பார்த்திருக்க உங்களுக்கும் பார்த்திபரே ஒவ்வாது
ஏற்றமுட னெல்லோரும் ஏகமாய்க் கூடியேதான்
சீவகரை வென்றவர்க்கு சேயிழையைக் கலியாணம்
பாவனையாய்ப் பண்ணவென்றே பகர்ந்தனன்கா
ணம்மானை!

காட்டாங்கன் சொன்னமொழி [1]காவலர்கள் தான்கேட்டு
தாட்டீக மாகவேதான் சகலருமே கூடியிட்டு
சீவகர்மேல் சண்டைதனைச் செய்ய அணிவகுத்து
காவலர்க ளெல்லோரும் கனக்கவே ஆர்ப்பரித்தார்
கண்டந்த சீவகனார் காட்சியுள்ள தோழனவன்
பண்டிசைந்த கோபால பதுமுகனு மென்றொருவன்
கந்தங் களிற்றினிட கழுத்ததனிற் றன்புகுந்தே
வந்துமந்த ராசவர்க்க மன்னவர்கள் முன்புநின்று
உங்கள் விசாரமென்ன ஓதிடுவீ ரென்றுரைக்க
மங்கையரை நாங்களுந்தான் மணமிசைவ தல்லாமல்
கொள்ளவொட்டோஞ் சீவகரைக் கோலமுட னிப்பொழுது
தள்ளியே எங்களுடன் சண்டைசெய்வ தல்லாமல்
போகவெட்டோ மென்றவர்கள் போதவே தானுரைக்க
பாகனைய சொல்லுடையான் பதுமுகனுந் தான்கேட்டு
கேளுநீர் மன்னவர்க்கங் கெலிப்பில்லாக் காரியத்தைப்
புதுமையாய்ச் சொன்னீர்கள் புகன்றிடுவே னம்மானை!

1 மன்னர்கள்.

எங்க ளிடத்திராணி இப்பொழுது பாருமென்று
துங்கமுடன் விற்பிடித்தே தொடுத்தாரே ரம்பதனை.
எட்டுத் திசைகளையும் ஏகமாய்த் தான்மறைக்க
திட்டமுடன் வல்லமையாற் செய்தபடி கண்டுமவர்
சம்மதியு மில்லாமற் சகலருமே யார்ப்பரிக்க
செம்மையுள்ள சீவகனார் தீர்க்கமுடன் தான்கேட்டு
காந்தருவ தத்தையரின் காவலர்கள் தம்முடனே
வேந்தனொடு தோழருமாய் வைத்த விறகுடனே
ஆனையின்மீ தேறியவர் ஆணழக னப்பொழுது
சேனை திடுக்கிடவே திறமையுடன் வந்துநின்று
என்ன விசாரமுமக் கென்றவருங் கேட்கலுமே
மன்னவர்கள் செப்பலுற்றார் வண்மையுட னம்மானை!

நாடும் நகரிகளும் ராச்சியமும் நாங்கள்விட்டு
நீடியதோர் சதுரங்கம் நீளுந் திரளுடனே
கூடியொரு மாதம் குறையாமல் காத்திருந்து
மேடைமிசை வீற்றிருந்த மெல்லிநல்லாள் தத்தையெனும்
வட்ட முலையாளை வணிகன்மகன் நீயும்வந்து
திட்டமுடன் கொண்டதனால் சின்னமாய் நாங்களெல்லாம்
போறது மில்லையும்மைப் போகவொட்டோ மிப்பொழுது
வீறியே எங்களைநீர் வென்றே செயித்துவிட்டு
மங்கையரைக் கொண்டருளும் என்றே வழக்காடி
துங்கமுட னார்ப்பரித்தார் சூழ்ந்துமவ ரம்மானை!

சீவகரு மப்படியே செய்வதென்று தானேற்று
காவலர்கள் தன்னுடனே கடுகியவர் போர்பொருது
இருக்கிறவர் தானுமப்போ எதிர்த்தே படைபொருத
ஒருவருக் கொருவர்சக்கர வர்த்தியைப்போல் யுத்தமிட
காம வடிவழகன் காவலனார் சீவகரும்
கோமளமாய் வென்றுநின்றே கோலமுட னம்மானை!

சந்தோட மாயிருக்க தப்பிநின்ற ராசவர்க்கம்
சிந்தா குலத்துடனே சென்றோடிப் போனபின்பு
படுகளமுஞ் சோதித்தே பண்புடைய சீவகரும்
இடமாய்க் களப்பலியும் செய்தேதன் தோழருடன்

மடவா ளுடனேயப்போ மனைபுகுந்து மன்னவனும்
அடவுடனே தானிருந்தார் அன்னணமே யம்மானை !
கந்தோர்க்க செட்டியருங் கந்தருவ தத்தையரைச்
சந்தோட மாய்ப்பார்த்து தாகமுட னப்பொழுது
நல்லசுப லக்கினத்தில் நாயகனும் சீவகர்க்கே
முல்லைநகை காந்தருவ தத்தையெனும் மொய்குழலைக்
கலியாணம் செய்தனர்காண் காட்சியுட னப்பொழுது
மல்லுத் திரள்தோளான் மாதினுட னேமருவி
கூடிக் குலாவியேதான் குரும்பைமுலை யாருடனே
மேடையின் மீதிலவர் விளையாடி வீற்றிருந்தார்.
இப்படி யாகவேதான் இன்பமுடன் தான்கூடி
செப்ப முடனிருந்து சிலநாள் கழிந்தபின்பு
சாந்துமுலை யாளுடனே தானுகந்த பிற்பாடு
ஏந்திழையாள் காந்தருவ இலம்பமுற்று மம்மானை !

அம்மானை அம்மானை ஆடியசீர் அம்மானை !
ஆரை யினிப்பாடி யாடுவோம் அம்மானை !!

**3-வது**

**காந்தருவ தத்தையார் இலம்பகம் முற்றும்.**

## 4—வது

# குணமாலையாரிலம்பகம்

### கதைச் சுருக்கம்

இராசமாபுரத்தில் சீவகன் காந்தருவதத்தையுடன் இனிதுறையும் நாளில் வசந்தம் தொடங்கியது. பங்குனித் திங்களில் ஊர் மக்கள் யாவரும் புதுப்புனலாட ஆற்றங் கரை சென்றனர். சீவகனும் சென்றிருந்தான். அப்போது வணிகர் மகளார் இருவர் தமக்கை, தங்கை போன்ருர்; குணமாலை, சுரமஞ்சரி என்பார், தாமும் சிவிகை எறிப் புனலாடப் போந்தனர்.

அதுகாலே, குணமாலையும் சுரமஞ்சரியும் தங்கள் தங்கள் கற்பூரச் சூரணமே உயர்ந்ததென்று வாதிட்டு, அவற்றைத் தங்கள் தங்கள் தோழிமார் கையில் தந்து, அவற்றைத் தக்கார் பக்கல் காட்டிச் சிறந்த தறிந்துரைக் கட்டளை யிட்டனர். தோழியர்கள் அறிஞர் பலரிடம்காட்ட அவர்கள் இரண்டும் சிறந்ததே என்றனர்.

சீவகனிடம் காட்ட, அவன், குணமாலை சூரணமே உயர்ந்தது என்ருன். சுரமஞ்சரியாரின் தோழி அதன் உட்கோள் கேட்டாள். உடன் ஒரு இசைபாட, வானில் வண்டு முதலான பறப்பன வந்து சூழ்ந்தன. இரண்டு சூரணப் பொட்டலத்தையும் இருகைக்கொண்டு, வானில் வீசி எறிய, குணமாலை சூரணத்தைக் கவர்ந்து சென்றன. சுரமஞ்சரி சூரணம் கீழே விழுந்தது.

கோபங்கொண்ட சுரமஞ்சரி, தன் சூரணத்தைத் தரக் குறைவென்று கூறியதால், "தன் காலில் சீவகன் வந்து விழுந்தால் சீவகர்க்கே மாலையிடுவேன்" என்று கன்னி மாடம் புகுந்தாள்.

அதுபோது, தேவராசன் 'சுதஞ்சணன்' என்பான் முனிவரின் சாபத்தால் நாயாகி, அதன் காதில் மந்திர உரைக்கப்பெறின் தேவனாகும்; சாபநீக்கமும் பெறும்சாபம் பெற்று மண்ணுலகில், கள்விலைஞனிடம் வளர்க்கப் பெற்றான். கள்விலைஞன் நாயுடன் புனலாட வந்தான். அப்போது, அந்நாய், ஆண்டுள்ள ஓமகுண்டத்துள் புகவே, அந்தணர்கள் அதனைப் புடைத்தனர். அதுகண்ட சீவகன், அதன் காதில் மந்திரம் உரைக்க, சாபநீக்கம் பெற்ற தேவன் "உனக்கு ஆபத்து நேருங்கால் என்னை நினைத்தால், நான் வந்து, உன் ஆபத்தை நீக்குவேன்" என்று கூறிப்போனான்.

அதன் பின்னர் குணமாலை, பல்லக்கேறி, வீதிவழி வரும்போது மதங்கொண்ட யானை துரத்த, அதனைச் சீவகன், அடக்கிக் காக்கவே, இருவரும் ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டனர்.

தாய் தந்தையர் சம்மதித்துப் பெண்பேசினர். குணமாலையும் கிளியைத் தூதுவிட்டு மகிழ்ந்தாள். குணமாலை சீவகனுக்கு மாலையிட்டு மகிழ்ந்தாள்.

**4-வது**

**குணமாலையாரிலம்பகக் கதைச்சுருக்கம் முற்றும்.**

## 4—வது

## குணமாலையா ரிலம்பகம்

அம்மானை அம்மானை ஆடியசீர் அம்மானை !
ஆரை யினிப்பாடி யாடுவோம் அம்மானை !!
குணமுடைய சீவகனார் குணமாலை கோதையரை
மணமிசைந்த போதரவை வாழ்த்திமிகப் பாடிடுவோம்.
மற்று மொருகாலம் வந்துதுகா ணிப்பொழுது
நித்தியவ சந்தமெனும் நீள்கால மாமதுவும்
பங்குனியாம் மாதம் பருவ மதுதனிலே
துங்கமுடன் பட்டணத்தில் தொல்சனங்க ளத்தனையும்
பொங்கும் புதுப்புனலில் ஆடவே போந்துமவர்
தங்கியாற்றங் [1]கங்கைதனில் சார்ந்தனர்கா ணம்மானை !

ஆற்றங் கரையதனில் அனைவோரும் வந்திருந்து
தீர்த்தங்க ளாடி செழித்திருக்கும் வேளையிலே
அந்த நகர்தனிலே ஆனவைசியர் தங்குலத்தில்
செந்திருவை யொப்பதொரு சேயிழையார் தாமிருவர்
சுரமஞ் சரியுங்குண மாலையெனும் சுந்தரியும்
இருவருங் கூடியேதான் எழிற்சிவிகை தானேறி
தங்கை தமக்கையைப்போல் தையல்நல்லா ரப்பொழுது
துங்கமுடன் வங்கணமாம் தோழியர்கள் கைச்சூழ
வந்துமலர்ச் சோலையதில் வாஞ்சையுட னேயிருந்து
சுந்தரத்தி னல்மிகுந்த சுரமஞ் சரியாகும்
என்னுடைய கற்பூரச் சூரண மதுக்கிணையாய்
பன்னுலகில் இல்லையென்றே பாங்கிகுண மாலையர்க்கு
காட்டின ளப்பொழுது கண்டுகுண மாலையரும்
தீட்டியதன் கற்பூரச் சிந்தூரச் சூரணத்தைப்
பாராய் சுரமஞ்சரி பாங்கி இதுக்கிணையாய்
நேரான தில்லையென்று நேரிழையார் காட்டலுமே

1 கரையதனில் போலும்.

ஒருவர்க் கொருவரப்போ உகந்து விளையாடி
இருவருட சூரணத்தை இதுபெரிது சிறிதெனவே
பாங்கியர்க ளப்பொழுது பட்சப்பிர பட்சமுடன்
ஓங்கியதோர் சூரணத்தின் உயர்ச்சியறி யும்படிக்கு
தங்கள்தங்கள் தோழியரைச் சதிருடனே தானழைத்து
பொங்குமுலை மாதர்கையில் பொருந்தியசூரணங்கொடுத்து
[1]தாட்டீகர் தங்களிடம் சார்ந்தே யிதின்குணமும்
நாட்டி யறிந்துடனே நன்மையுடன் வாருமென்ன
நல்லதென்று தோழியர்கள் நாணயமாய் அப்பொழுது
முல்லை நகையாரும் மோகமுடன் கொண்டுசென்றே
பட்டணத்தில் வாழும் பரிசனங்கள் எல்லோர்க்கும்
திட்டமுடன் காட்டலுற்றார் திறமையுட னம்மானை!

இரண்டுமே சமனாகு மென்றே யவருரைக்க
திரண்ட சனங்களெல்லாம் செப்பினர்கா ணப்படியே
நல்லதிது பொல்லதென்று நாடியதோர் சூரணத்தை
சொல்லுவா ரில்லையென்றே தோழியர்கள் கூறலுமே
அங்கு சிலபேர்கள் அப்பொழுது கூறிடுவார்
[2]கங்களிக்குஞ் சீவகர்க்கே காட்டுமென்று சொல்லலுமே
தோழியருஞ் சீவகர்க்கே தோணவே காட்டலுற்றார்
வாழுமந்த சீவகரும் வாஞ்சையுடன் பார்த்தவரும்
சொல்லுவார் நல்லதென்றே சூர்ணமது ரெண்டினையும்
எல்லோருந் சொன்னபடி யேயுரைத்தீர் நீருமிப்போ
நல்லதிது பொல்லதென்றே நாணயமாய்ச் சொல்லுமென
மல்லுத் திரள்தோளான் மறுத்துரைப்பா ரம்மானை!

குணமாலை சூரணந்தான் கோலமுடன் நல்லதென
மணமருவும் பூங்குழலாள் மங்கைசுர மஞ்சரியார்
தோழியருங் கூறிடுவாள் தோணவே யப்பொழுது
வாழுஞ்சீ வகனாரே வாஞ்சையுடன் நீர்கேளும்
குணமாலை யார்சூர்ணம் கொண்டாடிச் சொன்னீரே!
அணியுமந்த சூரணமதுக் கடையாளஞ் சொல்லுமென்ன

---

1 அறிஞர். 2 தங்களிக்குஞ் என்றுளது. கண்களிக்கும் என்று கொள்ளப்பட்டது.

நல்லதென்று சீவகரும் நாணயமாய் ராகமொன்று
மல்லுத் திரள்தோளான் வாஞ்சையுடன் பாடலுமே
வண்டுடனே துப்பியது மருவியிடுந் தேன்மிருகம்
அண்டியே நால்வகையும் ஆகாசம் வந்துநிற்க
அப்பொழுது சீவகனுர் அன்புடைய சூரணத்தைச்
செப்பமுடன் ரெண்டினையும் சேரவே பொட்டணமாய்க்
கட்டி யிருகரத்தில் காவலனுந் தானெடுத்து
திட்டமுட னாகாசம் சென்றெறிந்தா ரம்மானுர் !

குணமாலை சூரணங்கள் கொண்டதுகா ணப்பொழுது
மணமருவும் பூங்குழலாள் வாழுஞ்சுர மஞ்சரியார்
தன்னுடைய சூர்ணமது தரையில்விழும் பொட்டணமாய்
அன்னநடைத் தோழியர்கள் அப்போ தவைகண்டே
வந்துடனே தங்கள் தங்கள் மாதருட னேகூற
சுந்தரத்தில் மிக்கவொரு சுரமஞ் சரிகேட்டே
எந்தனிட சூரணத்தை இகலாய்ப் பழித்தவரும்
வந்தேயென் காலில் வணங்கியிட்டா லப்பொழுது
சீவகற்கே நானுமிப்போ தேவியரு மாயிடுவேன்.
காவலனு ரென்சூர்ணம் காணுங்குணம் பாராமல்
பழித்தாரே என்றவளும் வைங்கொடியும் தான்வெகுண்டு
முழுப்புனலு மாடாமல் மூர்க்கமுடன் தன்மனைக்கே
சுரமஞ் சரியாரும் துணுக்கெனவே தான்வந்து
மருவியதாய் தந்தையுடன் வாக்குரைத்தா ரம்மானுர் !

சீவகனு ரென்சூர்ணம் திகட்டாய்ப் பழித்ததனுல்
ஆவலுட னென்காலில் அவர்வீழ்ந்தா லப்பொழுது
அவருக்கே யான்மாலை யளித்திடுவ தல்லாமல்
எவருக்கும் மாலையிடேன் என்றேற சபதமிட்டு
தந்தையுடன் தாயார் தமக்கே யறிக்கையிட்டு
கந்தமலர்ப் பூங்குழலாள் கன்னியா மாடமதில்
புருட ரொருவரையும் போந்துமுகம் பாராமல்
விரதங்கொண் டேமிகவும் மெல்லியரைக் காவல்வைத்து
அன்ன நடைமாதர் அவரிருக்கும் [1] நாளதிலே

---

1 நைத்தில் என்றுளது.

சின்னவிடைப் பெண்ணமுர்து செல்விகுண மாலையரும்
சுரமஞ் சரியார்தன் தோழிபுன லாடாமல்
பொருமிமனங் கோபமதாய் போந்தபடி கண்டவளும்
ஆனந்த மாரியரும் அப்புனலி லாடாமல்
மானனையாள் தானுமொரு மரத்தருகில் வந்திருந்து
காவல் மிகவாகிக் காரிழையாள் வீற்றிருக்க
அவ்வளவில் ஓர்புதுமை ஆனதுகா ணம்மானை!

அவ்விடத்தி லோர்சிறிது ஆரியப் பிராமணர்கள்
செவ்வியுட னேயாக சாலையவர் தான்செய்து
ஓமம் வளர்த்தியவர் உயர்மந் திரமோதி
[1]நேம முடன்நடத்தி நிறைந்துவரும் வேளையிலே
முன்னாளி லந்தரமாம் உலகிலொரு தெய்வரசன்
அன்னாளிற் [2]சோனையென்பான் அருமுனிவர் தந்தனக்கு
குற்றமிகச் செய்ததனாற் கோபித்தே யம்முனிவர்
மெத்த மனம்வெகுண்டு வேந்தனுக்குச் சாபமிட்டார்
பூலோகந் தன்னிலந்த பொருந்தியிடும் ராசபுரம்
மாலாகிக் கள்ளுவிற்கும் மானிட வன் தன்னிடத்தில்
நாயாகி யேபிறந்து நலியுமென்றே சாபமிட
ஆயாசப் பட்டவனும் அம்முனியைத் தான்வணங்கி
சாப விமோசனமும் தானெப்போ தீருமென்று
கோபித்த மாமுனியைக் கோமான் வணங்கியிட
அந்த முனிவரரும் அருளுடனே தானுரைப்பார்
விந்தை யுடனொருவன் வீரியதோ ரந்நகரில்
உந்த னிடசெவியில் உபதேச மந்திரத்தை
அந்த முடனுரைக்க அன்றுனக்கு சாபமெல்லாம்
தீருமென்று அந்தமுனி செப்பியதோர் வாய்மையினால்
சீரழிந்து ராசாவும் சென்றுராச மாபுரத்தில்
கள்விலைக் காந்தனிடம் கடுகியவன் தானடைந்து
உள்மெலிந்த நாயாகி ஓங்கியவன் தான்பிறந்து
நின்றே சிலநாள் நிலைதளரும் வேளையிலே
வன்னமுடன் கள்விற்பான் வாக்குடனே யம்மானை!

1 நேமமுடிநடத்தி என்றுளது. 2 சுதஞ்சனன்

கள்விற்க [1]வின்றியவன் கவலையுட னப்பொழுது
தெள்ளியதோர் கள்ளு திருந்தவே கொண்டவனும்
நாயுங்கை யிற்பிடித்தே நன்மையுட னேகியந்த
தூயபுதுப் புனல்களாடி [2]யிடுதோல் வழியந்த
சென்றிருந்த வேளையிலே சேய்மை மறையோர்கள்
[3]பன்னியாக சாலையெனும் பதியிடத்தி லம்மானை!
நாயோடி யேபுகுந்து நல்கியிடு மன்னமெல்லாம்
வாயாரத் தின்றுமிக வந்தபடி தாங்கண்டு
ஆரியர்க ளெல்லோரும் அடித்தந்த நாயதனை
சேர [4]விடுத்தெரிந்தார் சேதமுட னம்மானை!

நாயடித்த வேதியரை நாளும்பழி வாங்காமல்
போயகல வொட்டேனென்று போர்செய்தே கள்விலைஞன்
வேதியர்கள் செய்யுமந்த வேள்விச்சா லையினடுவே
மோதி யுடைப்பேனெந்தன் கள்ளுமொடா வென்றவனும்
ஓடியே கள்விலைஞ னேலமிட்டா னப்பொழுது
நாடியந்த வேளையிலே நலமுடைய சீவகனார்
கண்டவர்கள் சண்டையெல்லாம் காரியமாய்த் தான்கேட்டு
சண்டை யகற்றியவர் சம்மதிக்கை யேதவரும்
குற்றுயி ரோடுங் குறைந்திறந்த நாயதனை
[5]அற்றை யவர்பார்த்து நலமுடைய சீவகனார்
பஞ்சபத மந்திரத்தைப் பாங்குடனே நாய்தனக்கு
இஞ்சலுடன் செவியில் எய்தியுப தேசிக்க
அறிக்கையுடன் மந்திரத்தை அந்தமுடன் தான்கேட்டு
இறக்குமந்த நாய்போன்றே இந்திரனார் தன்னுலகில்
பஞ்சமந் திரபலத்தால் பாங்குடைய தேவனுமாய்
விஞ்சியே தான்பிறந்தான் வேகமுட னம்மானை!

அந்தச் சணத்திலேதான் அவதியுடன் பார்த்தவனும்
முன்பவத்தி லேயோர் முயங்கியநா யானதுவும்
சீவகனா ரெந்தனுக்கே செய்தவுப காரமதால்
மேவியதோர் தேவகதி வீறுபெற்று மென்றுணர்ந்து

---

1 இவன்றியவங் என்றுளது. 2 = ? 3 பண்ணியாகசாலை என்றுளது. 4 விழுத்தெரிந்தார் என்றுளது. 5 அத்தை

சாப விமோசனமும் ஆச்சுதென்றே தானுகந்து
சோபனமாய்த் தேவன் சுரருலகந் தன்னில் நின்றும்
பூலோகம் தன்னிலேயோர் புதுமையுடன் சீவகர்முன்
மாலாகித் தேவனுமே வந்துநின்ரு ரம்மானுர் !

கண்டந்த சீவகரும் காட்சியுடன் பார்த்தவரும்
தெண்டன் நமஸ்காரம் தேவனென்று தான்பணிந்து
தேவரீ ரிங்குதித்த செயலறியச் செப்புமென்ன
காவலனுர் கேட்கவுமே காட்சியுடன் தேவனுந்தான்
செப்பலுற்ரு ரப்பொழுதே சீவகனுர் தன்னுடனே
முற்பவத்தி லேரிஷிதான் முயற்சியிடும் சாபமதால்
நாயாகிப் பிறந்தவென்னை நற்கருணை யால்நீரும்
செய்யா துபகாரம் செய்தபடி யும்மாலே
இவ்வுருவு மானேனென் றேத்தி யுபசரித்து
கவ்வையுண்டா மப்பொழுது கடுகியெனை நீர்நினைந்தால்
அந்தச் சணம்வருவேன் அன்புடனே உம்முடைய
சிந்தை கவலையெல்லாம் தீர்க்கவல்ல னென்றுசொல்லி
தேவன் சுரலோகம் சேர்ந்தார்கா ணம்மானுர் !

சீவகனு ரப்பொழுது செய்யபுன லாடியவர்
தான தருமமெல்லாம் சகலருக்குந் தான்வழங்கி
ஆனையின்மே லேறி அவர்வரும் வேளையிலே
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளெல்லோரும்
சட்டமுள்ள சீவகரைத் தான்கண்டே வெய்யோனைக்
கண்ட பனிக்குலம்போல் கால்நடுங்கி நீங்கிடுவார்
வண்டாடும் பூங்குழலாள் மாதுகுண மாலையரும்
பல்லக்கி லேறியேதான் பைங்கொடியும் வாறளவில்
நல்லமத யானையொன்று நாட்டமுடன் சேனையெல்லாம்
சாடியே தானடித்து தையல்குண மாலையின்மேல்
ஓடிவரும் வேளையிலே ஒண்டொடியாள் பல்லக்கின்
சிவிகைபல் லக்கைத் திட்டெனவே விட்டோட
செல்விகுண மாலையரும் திடுக்கெனவே தான்கண்டு
ஓடத் தொடங்கினள்காண் ஒண்டொடியும் அம்மானுர் !

[1] நாடியே யக்கரியுந் தையலின்மேல் ஓடிவர
கண்டந்த சீவகனார் கால்கடுகி ஓடிவந்து
ஒண்டொடியை யானையிப்போ ஓடியே கொல்லுமென்று
ஆனையின் கீழிறங்கி அதற்குநீ அஞ்சாதே
ஆனையுட கோடதனை அழுத்தியே தான்பிடித்து
அலட்டியிடும் பெண்மயிலே அப்புரம்போ மென்றுசொல்லி
நிலத்தி லிருத்தியிட்டார் நேசமுட னம்மானை!

தோழமார் பின்னுடனே தோகையரும் போனபின்பு
வேழமதின் கால்நடுவே மெள்ளவே தானுழைந்து
பெலஞ்செய்து வால்பிடித்தே பின்னுக்கோர் பத்தடிதன்
நிலந்தூர மட்டிழுத்தே நேசமுடன் விட்டுவிட்டார்
ஆனை மதந்தணிந்தே அப்புறம்போ காதபடி
ஆனையின் பாகனவன் அன்புடனே தான்கண்டு
ஆனைகட்டும் பந்தியிலே அங்கவனும் கொண்டுசென்றான்.
ஆனையும் அன்றுமுதல் ஆகாரந் தான்வெறுத்து
கவளம் பிடியாமல் [2] கண்டகெதப் பிராணனுமாய்
இவளவாய் வேழமதும் ஏங்கிநின்ற தம்மானை!

அவ்வளவிற் சீவகனார் அன்புடைய தோழருடன்
செவ்வியுட னந்நகரம் சேர்ந்துவரு மப்பொழுது
தம்முடைய தோழரெல்லாம் சகலரையுந் தன்மனைக்கே
செம்மை யுடனனுப்பி சீவகனு மப்பொழுது
ஏகாந்த மாகியேதான் இனிதிருந்து சோலைதனில்
பாகான நன்மொழியாள் பாங்கிகுண மாலையிட
அன்ன நடையுமவள் அளகத்தின் பேரழகும்
சின்ன விடையுமிரு செம்பொற் கிரிமுலையும்
இந்திர தனுசுக்கொப்பா மெழிற்புருவப் பேரழகும்
சந்திர வதனமதிற் றங்குநுதற் பொட்டழகும்
பவளச் செவ்வாயும் பளிங்கொக்கும் பல்லொளியும்
குவளை மலர்க்கண்ணும் குமரிப் பருவமெல்லாம்
கண்டதனாற் சீவகர்க்கே காமக் கனைபெரிதாய்
வண்டாடும் பூங்குழலாள் மாதரிட பேரழகை

---

1 தாடியு நாக்கரியுந் என்றுளது. 2 = ?

உருவமெல்லாமெழுதி உகந்துடனே பார்த்திருந்தார்
பருவயிளங் கொங்கைநல்லாள் பாவைகுண மாலையரும்
தன்னகத்திற் சென்றவரும் தார்குழலு [1]மெண்ணிடுவாள்
அன்னநடை மாதருந்தா னப்பொழுதே யம்மானை!

ஆனை யெனைத்துரத்த அவ்வளவிற் சீவகனார்
சேனையுடன் வந்தவரும் திருந்தியெனைத் தான்விடுத்த
தாடாளன் சீவகனார் தன்னுடைய லட்சணமும்
ஈடான திண்புயமும் இளமைப் பருவமெல்லாம்
தன்மனதி லெண்ணியேதான் தளர்ந்து மதன்கணையால்
மன்மதவி காரமதால் வாடினள்கா ணம்மானை!

செங்கைக் குமரியென்னும் குணமாலை சீவகர்மேல்
தங்கியே மோகமதால் தான்தளரும் சைகையெல்லாம்
தோழி யறிந்துரைக்கச் சொல்லுவாள் மற்றவட்கே
வேழ மெனைத்துரத்தி வெகுண்டுவரும் போதெந்தன்
பிராண பயந்தவிர்த்த பிராணநா யகனுக்கே
பிராண வல்லபனார் பேர்பெரிய சீவகர்க்கே
மாலை யிடுவதல்லால் மற்றெதையும் நான்நினையேன்.
ஆலசிய மாயிருந்தால் அப்போ துயிரிழப்பேன்
என்றுகுண மாலையுந்தான் யியம்பியிடுஞ் சொற்கேட்டு
அன்னை பிதாவுரைப்பார் அப்பொழுதே யம்மானை!

நம்முடைய பெண்பெருமாள் நாயகனார் சீவகர்மேல்
செம்மையுள மோகமதால் செய்தோம்நாம்
புண்ணியங்காண்
சீவகனார் நம்மனைக்கே செய்ய மருமகனாய்
பாவனையா லிப்பொழுது பாக்கியம்நாம் பெற்றோமென்று
உறவின் முறையாரும் உற்றபெரி யோர்களுடன்
திறமையுடன் அன்னணமே சேர்ந்தனர்கா ணம்மானை!

வந்தவர்கள் கந்தோர்க்க வணிகனிட தன்மனையில்
எந்தனுட பெண்மயிலாம் எங்கள்குண மாலையைத்தான்
சந்ததமும் சீவகர்க்கே தருகிறோ மென்றுசொல்லி
கந்தோர்க்க செட்டியரும் காதலுடன் கேட்டவரும்

---

1 மென்றிடுவாள் என்றுளது.

பெண்மயிலைப் பெற்றவர்கள் பிரியமுடன்
தான்கொடுத்தால்
உண்மைமிகு நன்றெனவே உகந்தவருஞ் சம்மதித்து
பாக்கியமு மாச்சுதென்றார் பட்சமுட னம்மானை!

வாக்குமொழி தான்கேட்டே [1]மாதுகுண மாலையரும்
சந்தோட மாயிருக்க தையலரு மப்போது
முந்தியே சீவகர்மேல் மோகமுட னாகையினால்
தாகமுடன் தான்வளர்த்த சம்பிரமுள்ள கிளியின்கையில்
வாகுடனே ஓலையுந்தான் வரைந்தனுப்ப வக்கிளியும்
ஓலையது தான்கொண்டே ஓடியே சீவகன்முன்
சோலை யிடந்தனிலே சொற்கிளியும் போய்ப்பார்க்கும்.
தாகமுடன் சீவகனார் தன்கைப் படம்பிடித்து
மோகமுடன் பார்த்தவரும் முயங்கியிடும் வேளையிலே
ஓலைகொண்டு போனகிளி ஓடியவர் தன்னருகில்
சோலை மரத்தருகில் [2]தோன்றியிட்ட தம்மானை!

அந்த அவசரத்தில் அன்னநடை காந்தருவ
செந்திருவாள் தத்தையரும் சீவகனா ரிப்பொழுது
சோலை யிடத்திருந்த காரியமே னென்றுசொல்லி
மாலைக் குழலாளும் வந்துமவர் பின்புறத்தில்
மறைவாகி நின்றேயந்த மங்கையரும் பார்த்திருக்க
முறைமுறையாஞ் சீவகரும் மோகமுடன் பட்டகத்தைக்
[3]கண்ணிலும் மூக்கினிலும் காணும் முகத்தினிலும்
நன்றியுடன் ஒத்தியவர் நயந்திருந்தா ரம்மானை!

கண்டந்த காந்தருவக் காரிழையுங் கண்சிவந்து
ஒண்டொடியாள் கோபமுடன் ஓடினள்கா ணம்மானை!

அவ்வளவி லவ்விடத்தில் ஆரும்மற்றோர் இல்லையென்றே
செவ்விகுண மாலையிட சிறுகிளியு மோடிவந்து
காதலுட னோலையைத்தான் காட்டலுமே யப்பொழுது
ஓதி யறிந்தார்காண் ஓலையுள்ள வாசகத்தை

---

1 மாதுகுணமாலையரும் என்றுளது. 2 தோணியிட்டதம்மானை என்றுளது. 3 கன்றிலும் முக்குளிலும் என்றுளது.

மறுவுத்திரந் தானெழுதி வாஞ்சையுடன் கைகொடுத்து
உறுதி உபகாரம் ஒண்டொடிக்குச் சொல்லுமென்று
அந்தக் கிளியதனை யனுப்பிவிட்டா ரம்மானை!

செந்திருவாள் தன்கிளியும் சென்றுகுண மாலையிட
கையில் கொடுத்தோலை காதலுடன் வாங்கியவள்
செய்ய வயணமெல்லாம் செந்திருவாள் வாசித்தே
விரக மதுதீர்ந்தே விம்மலையாள் வீற்றிருக்க
பரிவுடைய தாய்தகப்பன் பாங்குடனே யப்பொழுது
சீவகர்க்குத் தன்மகளார் செல்விகுண மாலையைத்தான்
ஆவலுடன் வதுவை ஆகவென்றே தான்கருதி
நல்லசுப லக்கினத்தில் நாட்டிலுள்ளோர் தாமறிய
சொல்லறிய மேளமுடன் துந்துபிகள் தான்முழங்க
அந்தணர்கள் உத்தமர்கள் அனைவோரும் வந்திருக்க
சுந்தரி சுமங்கலியர் சோபனங்கள் பாடியிட
ஆரியர்கள் மூத்தோர் அனைவரும் வந்திருந்து
சீரியநெய் யாலோமஞ் செய்தனர்கா ணம்மானை!

[1]கந்தாட் சதையுமிட்டு கிரமமுட னப்பொழுது
செந்தா மரைத்திருவாள் செல்விகுண மாலையரை
சீவேந் திரப்பெருமாள் தீர்க்கமுடன் மாலையிட்டார்
பாவாண ரப்பொழுது பாடியிட்டா ரம்மானை!

மேகக் குழல்புரள மெல்லிகுண மாலையுடன்
தாகமுடன் சீவேந்திரன் தான்மருவி யேதினமும்
சந்ததமும் வாழ்ந்திருந்தார் சந்தோட மாகியேதான்
இந்தகுண மாலையிட இலம்பமுற்று மம்மானை!

அம்மானை ரம்மானை ஆடியசீர் அம்மானை!
ஆரை யினிப்பாடி யாடுவோ மம்மானை!!

## 4-வது
## குணமாலையாரிலம்பகம் முற்றும்

---

1 கந்தம்+அட்சதை = கந்தாட்சதை. சந்தணம் பூசப்பட்ட மஞ்சள் அரிசி.

உ

# 5—வது

# பதுமையா ரிலம்பகம்

## கதைச் சுருக்கம்

சீவகனால் அடக்கப்பட்ட 'அசனிவேகம்' எனும் யானை கவளம் கொள்ளாமல் நின்றது. கட்டாங்கன், செய்தி அறிந்து, அவன் தன் மைத்துனன் மதனன் என்பானை ஏவி சீவகரைப் பிடித்துவரக் கட்டளையிட்டான். அவ்வாறே கொணர்ந்தவுடன், அவனை யானைக்காலில் இடரும்படிக் கட்டளையிட்டான். சீவகனை யானையருகில் அழைத்துச் சென்றனர்.

அவனை விடுவிக்க காந்தருவதத்தை முயன்றாள். அவனது தோழர்களும் முயன்றார்கள். அவ்வாறு விடுவிக்கப்பட்டால் தனக்கு அபகீர்த்தி என்று எண்ணிய சீவகன் தனக்கு வாக்குத்தந்த தேவனை நினைக்க, அவன் வந்து, தனது மாயையினால் இருள் சூழச்செய்து, சீவகனை தேவலோகத்துக் கழைத்துச்சென்று, அங்கு அவனுக்கு, கணைதொடுத்தால் குறி தப்பாது செயிக்கவும், இசைபாடி, யானையை இசைய வைக்கவும், வேண்டும்போது யானைகளை வரவழைக்கவும், ஆகிய மூன்று மந்திரங்களை உபதேசித்து அவனைப் பூவுலகில் விட்டான்.

சீவகன் வரும்போது காட்டுத்தீயால் அலறும் யானையை மேகராகக்குறிஞ்சி ராகம்பாடி, மழைபொழியச்செய்து காப்பாற்றினான். 'சினவரன்' கோயிலை நோக்கிச் செல்லும் போது அக்கதவு தானே திறந்தது வணங்கினான்.

பல்லவதேச, சந்திரரோப நாட்டு மன்னன் 'தனபதி' முப்பத்திரண்டு ஆண்மக்களைப் பெற்றுப் பின்னர் 'பதுமை' என்னும் பெண் பெற்றான். முனிவரை அழைத்துப் பதுமைக்குக் கணவன் யார் என்று கேட்க, அப்போது அம் முனிவன் இவளைப் பாம்பு தீண்டும், அவ் விடத்தினை நீக்க வல்லவனே இவளுக்குக் கணவன் என்று சொன்னான்.

அப்பட்டணத்தில் ஒரு சோலையருகில் நாடகக்கணிகை நடனமாடினாள். அதற்கு மன்னன் மகன் 'லோகபாலன்' பின்னணி இசைத்தான். சீவகனும் அதனைக்காணவந்தான். அவனைக் கண்ட கணிகை அவன்மீது மையல் கொண்டாள். லோக பாலனும் பிரியமாய் இருந்தான்.

அவனது தங்கை பதுமையாள், தான் பிரியமாய் வளர்த்த முல்லைச் செடியருகே பாம்பு தீண்டி மயங்கிக் கிடந்தாள். யாவரும் வந்தும் பயனில்லை. சீவகன் வந்து விடம் போக்கி அவளை மணந்து மகிழ்ந்தான்.

**5-வது**

**பதுமையாரிலம்பகக் கதைச்சுருக்கம் முற்றும்.**

ரு

# 5—வது
# பதுமையா ரிலம்பகம்

அம்மானா ரம்மானார் ஆடியசீர் அம்மானார் !
ஆரை யினிப்பாடி யாடுவோ மம்மானார் !!

பதுமையா ரென்னுமொரு பைங்கொடியைச் சீவேந்திரர்
வதுவைமண மாலையிட்ட வளம்பாடி யாடிடுவோம்
ஆனைகட்டும் பந்தியிலே 'அசனிவேக' மென்னுமொரு
ஆனையைக் காட்டாங்கன் அன்புடனே பார்ப்பளவில்
கவளங்கொள் ளாதபடி காய மிளைத்ததுவும்
அவலமுற்று நின்றதொரு யானையைப் பார்த்தவனும்
பாகனையுந் தானழைத்து பாங்குடனே கேட்டிடவே
தாகமுடன் பாகனுந்தான் சாற்றிடுவா னம்மானார் !

சீவகனார் தம்மாலே செப்பியதோ ரானையிதும்
கேவலமாய் நொந்தே கிலேசமுற்றே மற்றதுவும்
கவளம் பிடியாதே கனக்கவே தானிளைத்து
இவ்வளவாய் நின்று இருந்தபடி காணுமென்றான்.
அப்பொழுது காட்டாங்கன் அவ்வசனம் தான்கேட்டு
செப்பரிய கோபமுடன் சீவகரைத் தான்பிடித்து
வாருமென்றே மச்சினனும் மதனையே தானழைத்து
சாருஞ்சது ரங்கமெல்லாம் தன்னுடனே கூட்டியேதான்
ஏவிவிட்டான் காட்டாங்கன் ஏற்றமுட னப்பொழுது
பாவி மதனனுந்தான் [1]பராக்கிரமமுடன் தான்சீறி
[2]சாதுரங்க சேனையுடன் தாட்டீக மாயவனும்
வாதுடனே சீவகனார் மனையை வளைத்துக்கொண்டான்.
அந்த வயணமெல்லாம் அறிவுடைய சீவகனார்
சந்ததமுங் கேட்டவருந் தக்கபெருங் கோபமுடன்

---

1 பருக்கிரமுடந் என்றுளது. 2 சதுரங்க; எதுகை நோக்கி நீண்டது போலும்.

அம்புடனே வில்லும் ஆணழகன் தானெடுத்து
கொம்பி எழுந்திருந்தான் குரோதமுட னம்மானை!
தந்தையெனுங் கந்தோர்க்க தார்வணிகன் தானறிந்து
மந்தரமாஞ் சிவேந்திரன் மகனுரைத் தான்பார்த்து
புத்தியில்லா உந்தனுக்கே போர்பொருத வென்றுரைத்து
மத்த கெசம்போன்ற மகனுரை யப்பொழுது
காட்டிக் கொடுத்தனர்காண் கந்தோர்க்க ரம்மானை!

நாட்டிப் பிதாமகனை நன்மையுடன் தான்கொடுத்து
வயணமது காட்டாங்க மன்னவனுந் தான்கேட்டு
நயமுடனே சந்தோட மாகியுனை விட்டிடுவேன்.
என்றந்த கந்தோர்க்க ரேதமுடன் தானுரைக்க
வண்ணமுள்ள சீவகனார் வாஞ்சையுடன் தான்கேட்டு
பிதாவசனந் தப்பாமல் பிரியமுடன் முன்னுளில்
உதவியிடு மாசாரியார் உண்மைமற வாமலேதான்
உண்மையென்று சீவகனார் உகந்தனர்க ணம்மானை!

வண்மையுடன் கந்தோர்க்க செட்டியரும் வாஞ்சையுடன்
சீவகரைத் தான்பிடித்து சிக்கெனவே தான்கொடுத்து
ஆவலுடன் தேடியிடும் அற்றமெல்லாம் நான்கொடுப்பேன்
என்றமொழி தான்கேட்டு நற்றேழ ரானவர்கள்
வண்ணமுட னைஞ்னூற்று வருமுவ ரும்வந்தே
எல்லாருங் கூடி யிருந்தே விசாரமிட்டு
வல்லாண்மை சீவகரை வாக்கில்விடு விக்கவென்றே
ஆலோ சனைநினைந்தார் அந்தமுட னம்மானை!

மேலான சீவகரை விடுவித்தோ மாமாகில்
சீவகனார் வெற்றித் திறங்குலையு மென்றுசொல்லி
ஏவல்வலம் ரெண்டுமில்லா தேதோ கருமமென்று
அடங்கி யிருந்தார்கள் அனைவோரு மம்மானை!

வடஞ்சுமந்த கொங்கைநல்லாள் மாதரெனுங் காந்தருவ
தத்தையரு மிந்தமொழி சாங்கமுடன் கேட்டவளும்
மெத்த மனங்கருவி வேகமுடன் நம்முடைய

தந்தையெனும் விந்தையிந்திர சாலமது தான்செய்து
விந்தையுடன் சீவகரை விடுவிப்பே னென்றவளும்
ஆர்க்க முடனெழுந்தாள் அப்பொழுதே யவ்வளவில்
தீர்க்கமுட னோர்நினைவுஞ் செய்தனள்கா ணம்மானை!

மனைவி விடுத்த(ன ளெ)ன்னுமப கீர்த்தியதும்
யிணையுமெந்த(ன் பத்தாவுக்) கிப்பொழுது என்றவளும்
இந்திர சாலமெல்லாம் ஏதலுடன் போகனுப்ப
சுந்தரியு மப்போது துணிந்தனள்கா ணம்மானை!

சிவகரும் நம்முடைய தீர்க்கமுள்ள தோழரெல்லாம்
ஆவலுடன் கூடியேதான் அனைவோரும் வந்துற்று
விடுவித்தே நம்மை விலக்கியப கீர்த்தியதும்
விடுவிக்கப் போறார்கள் என்றே மனங்கருதி
வியாகூலப் பட்டே விசாரமிட்டே யப்பொழுது
தியாகமுடன் வாக்குரைத்த தேவனுமே முன்னாளில்
விசனம்வந்த போதுதன்னை வேகமுட னேநினைந்தால்
உதவிசெய்வே னென்றுசொன்ன உத்தமனைத் தானினைக்க
தேவ வுலகிலந்த தேவேந்தி ரன்தனக்கு
ஆவலுடன் ஆசனந்தான் [1]கம்பியிட அப்பொழுது
ஞானத்தால் பார்த்தவரும் நன்றியுள்ள சீவகர்க்கு
ஈனத்துட னேவிபத்து இப்பொழுதே வந்ததென்று
தாக்குடை சீவகரைத் தப்பாமல் பார்த்துநின்று
சீக்கிரத்தில் தேவன் திறமையுடன் வந்தவனும்
என்னசெய்வே னென்றே யிருந்தனன்கா ணம்மானை!

அன்னணமே சீவகரை ஆங்கவர்கள் கொண்டுசென்று
காட்டாங்கன் முன்புவிடக் கண்டுமவன் கோபித்து
தாட்டீகச் சீவகரைச் சாங்கமுடன் கட்டியேதான்
நம்முடைய ய(ானை)முன்னில் நல்கியிடும் போட்டிவனை
செம்மை யுடன்முறித்துச் சேதனங்கள் செய்யுமென்று
ஆக்கினையு மிட்டனன்காண் அறிவில்லா னப்பொழுது
ஆக்கமுடன் சேவகரும் அப்படியே யம்மானை!

---

1 = ?.

சீவகரைக் கொண்டுசென்றே சேவுகரு மப்பொழுது
தாவியிடு மானையின்முன் சார்ந்தனர்கா ணம்மானை!

அந்த அவசரத்தில் தேவனும் தான்பார்த்து
விந்தையுடன் காற்றும் வெகுமழையும் மின்னலுடன்
மழைபோன் ற வெல்லிருளு மாகியவன் மாயையினால்
மெய்நடுங்க வெண்ணிடியும் வேகமுட னார்ப்பரிக்க
கண்டந்த சேவகரும் கால்நடுங்கி உள்நடுங்கி
மண்டியிடும் காரிருளால் வண்ணமுகங் காணமல்
ஒருவர்க் கொருவர்முகம் ஓசையுடன் காணமல்
இருளின் மழைமுடுக்கால் ஏங்கினர்கா ணம்மானை!

தேவனு மப்பொழுதே சென்றந்த சீவகரை
ஆவலுடன் கொண்டேதான் அந்தரத்தில் சென்றிடுவான்
மற்றந்த காட்டாங்கன் மச்சினனு மாகுமதன்
மெத்த விசாரமுற்றே மேவியவன் நிற்கலுமே
அவ்வளவி லவ்விடத்தோர் அகுதிபர தேசியவன்
செவ்வியுடன் நின்றவனை சோதனைசெய் தேவதைத்து
ஆனை யிடக்காலில் அகப்படவே தான்முறித்து
சேனையுடன் சீவகரை சென்றுகொன்றோ மென்றுசொல்லி
உதிரக் குறியவர்க்கும் உகமையுடன் தான்காட்டி
சதிருடனே காட்டாங்கன் தன்முன்னே சொல்லிடுவார்
நன்றியில்லாக் காட்டாங்கன் நாயகனுந் தான்கேட்டு
வண்ணமுள்ள சீவகனர் வாள்திறமும் வல்லமையும்
சவுரியப ராக்கிரமமும் சங்கையில்லாக் கல்விகளும்
நவமுடைய சீவகரை நன்றாகக் கொண்டாடி
உங்களுட கையிலவன் ஓங்கியகப் படுகிறதும்
இங்கிதுகா ணுமற்புதமை என்றவரைக் கொண்டாடி
கொன்றுவந்தோ மென்றுசொன்ன கோமான்றன் மச்சினனை
[1]வன்றமுட மெச்சியவன் வரிசையிட்டா னம்மானை!

கவலை மனமெல்லாங் கடுகியே தான்கண்டு
அவ்வளவிற் பூரித்தே ஆலித்தா னம்மானை!

1 வண்ணமுற என்று இருத்தல் நலம்.

தேவ னுலகிலந்த தேவனுடன் மாயையினல்
சீவகனர் சென்றவிதம் செப்பிடுவோ மிப்பொழுது
பொன்னுலகில் தேவனுடன் போந்ததொரு சீவகனர்
உன்னிட்டோ மென்றே உகந்துகளிப் பில்லாமல்
காட்டாங்கக் காரனிட கையிலகப் பட்டோமென்று
தாட்டீகம் சற்றும் தளராமல் நம்முடைய
ஊழ்வினைப் பயன்கா ணென்றே உறுதிபண்ணி
ஆழியைப்போற் கெம்பீர மாயிருந்தா ரம்மானை!

அவருடைய சித்தமெல்லாம் அறிந்தந்தத் தேவனுந்தான்
கவலையில்லாச் சீவகரை கண்டே பிரியமுடன்
தன்னுடைய சிங்கா தனத்தின்மேல் சீவகரை
உன்னிதமாய் வைத்தும் ஒக்கவே கொண்டிருந்தார்!
தேவனுட [1]ஸ்ரீயளெல்லாம் சீவகரைத் தான்பார்த்து
தேவனையே கேட்கயிவ ராரென்று செப்பிடுவான்
நரலோகம் தன்னிலேயோர் இராசபுர மாநகரில்
அரசகு மாரனிவன் ஆருங்கா ணம்மானை!

தந்தைதனைக் கொல்லவொரு சத்துருவு மப்பொழுது
அந்த விசேடமிவர் அறிந்தே யடக்கமுடன்
குருவசனந் தப்பாமல் கோமா னிருந்தபடி
திருமருவு சீவகனர் என்றூர் திருநாமம்
முன்னுள் இவராலென் மூடியதோர் நாய்சென்மம்
நன்றாகத் தீர்ந்ததென்று நாயகியர்க் கேயுரைக்க
தேவனுட [2]ஸ்ரீயளெல்லாம் தீர்க்கமாய்க் கேட்டவர்கள்
காவலனுஞ் சீவகர்மேல் கனக்கப் பிரியமுடன்
இவருடைய சத்துருவை இப்பொழுதே சங்கரித்து
கவலையில்லா ராச்சியபதங் கட்டுமென்று ரம்மானை!

[3]அப்பொழுதே தேவனுந்தான் அன்புடனே சீவகர்க்கு
" அம்பு தொடுத்தெய்ய அக்குறி தான்செயிக்க,
ஒப்புடனே பாடிடவும் [4]ஓடிவேழ மிசைவிக்க,

---

1 & 2 ஸ்திரீகள்; தேவமாதர்கள். 3 எதுகை விடுபட்டுளது போலும். 4 ஓங்குவிழ மிழப்பனவும் என்றுளது.

வேண்டியிடு வேழமெல்லாம் விதவிதமாய்க்
கொண்டிடவும்"
காண்டிடவே மூன்றுவகை மந்திரமுங் கற்பித்தே
*பூலோகத் துள்ளிறங்கிப் போம்வழியும் தான்காட்டி
மாலாகி யேயவரை மானிடவர் தன்னுலகில்
கொண்டுவந்து விட்டனன்காண் கோமான் [1]சுதஞ்சணனும்
ஆதேச மங்கங்கே ஆக்கு பலவகையும்
சொல்லிச் [2]சுதஞ்சணனும் தொழுதவனுந் தான்போக
அண்டியதோ ரவ்விடத்தில் அன்றளவும் வீற்றிருந்து
[3]மற்றுனாளைப்பொழுது மார்க்கமுடன் சீவகரும்
காட்டுத்தீப் பட்டுக் காட்டானை தானலற
அப்போது [4]'மேகரஞ்சி' அவர்கீதம் பாடலுமே
மாரி பொழிந்தவிக்க மதயானை யிடர்நீங்கி
அப்பாலே தான்போக அங்கு மலைமேலே
'சினவரன்' தன்கோயில் சிகரமுந் தான்கண்டு
அவ்விடத்தில் தான்போகி அலர்பூவுந் தான்பறித்து
கோவிலில் வந்து கும்பிட்டு நிற்கையிலே
தானே திருக்கதவு தான்திறந்து தப்போது
ஆனந்தத் தோடு அலர்சொரிந்து தோத்திரங்கள்
அன்பாகக் கீதம் அவர்படிக்கு மப்போது
எட்சியொரு தெய்வம் யிதங்கிப் பசிதீர்க்க
அவ்விடந் தான்கடந்து அவர்செல்லு மப்போது
பல்லவ தேசமென்னும் பார்புகழும் நாடதனில்
[5]'சந்திர ரோப'மென்னும் சதிருடைய மாநகரம்
அரசன் தனபதியாம் அவன்தேவி திலோத்தமையாம்
[6]முப்பத் திருவர்மக்கள் முன்பிறந்து பின்னாக
பதுமையா ரென்னுமொரு பாவையவள் தான்பிறந்தாள்
வீறும் [7]விரும்பழகும் மேவியவள் தான்வளர
(ஆரார் தனபதியும்) [8]அருள்முனிவர் தனையழைத்துப்

---

*இதுமுதல் எதுகை சரியில்லை. 1 & 2 சுதஞ்சயனும் என்றுளது. 3 மற்றனை என்றுளது. மறுநாள் என்பது பொருள். 4 மேகராகக் குறிஞ்சி என்னும் இராகம். 5 சந்திராயம். 6 முப்பத்திருவறுக்கள் என்றுளது. 7 விழுப்பழுமும் மேதியவள் தான் வளர என்றுளது. 8 அறுமுனிவர் தான்வளர என்றுளது.

பதுமைக்குக் கணவனவன் பாருலகில் யாரெனவே
[1]அவதி தனில்பார்த்து அருள்முனிவர் தான்சொல்வார்
பாம்பு விடந்தீண்டும் [2]பாவைதனை யப்பொழுது
[3]புண்ணிய வானொருவன் போந்துவிடந் தான்தீர்ப்பான்
அவளுக் [4]கவர்பொருத்தம் அம்முனிவர் தான்சொல்ல
இப்படி யாக இருக்குமந்த வேளையிலே
பட்டணத்தில் வந்துசொன்னார் பாங்குடனே அம்மானை!

அந்நகரந் தன்னின் அழகும் பெருமைகளும்
[5]கோட்டை யழகும் கொம்பனையா ராடல்களும்
வீதி யிருமருங்கும் மேல்நிலையில் மாலனையார்
காம னிவனென்று கண்டு மயங்குவாரும்
இப்படியே வீதிதனில் ஏகுமந்த வேளையிலே
அரச குமாரனவன் அன்புடைய லோகபாலன்
கின்னரம் யாழ்வீணை கீதம் வகையுடனே
மத்தள தாளமும் மனமகிழ்ந்து தானொலிப்பான்
பிரியமுடன் நாட்டியங்கள் பேறுடனே பார்ப்பதற்கு
[6]துன்மொழியான் வந்திருந்தே சோலை யருகுதனில்
[7]சேல்விழி வேசியரைத் திருந்தவே தானழைத்து
நட்டுமுட்டுக் காரரையும் நாடகச்சா லைக்கொடியும்
திட்டமுடன் கூட்டியவன் திருக்கூத்து பார்த்திருக்க
நாடகம் பார்த்து நயந்திருக்கு மவ்விடத்தில்
சீவேந் திரருமப்போ சேர்ந்துநின்று பார்க்கலுமே
கொம்பனையாள் வேசியவள் கூத்தாடி நாலுதிக்கும்
இன்பமுடன் பார்க்கையிலே ஏகாந்தச் சீவகனார்
தன்னழகைக் கண்டுமவள் சாலமதி தான்மயங்கி
அன்னநடை வேசியரும் அவரெதிரே வந்துநின்று
மாருமலேபார்த்தாள் மயக்கமுட னம்மானை;

வீரான மன்மதனால் விரகமிக வாகியவள்
ஆட்டம்மறந் தேயவளும் அசையாமல் நின்றபடி

---

1 அவனி எனல் பொருந்தும். 2 பாவதனை என்றுளது.
3 புன்றிய என்றுளது. 4 கவர் பொருந்தின் என்றுளது. 5 – ?.
6 – ?. 7 சேலைவிழி என்றுளது.

தேட்ட முடனரசன் திருக்குமரன் தானுமப்போ
பார்த்தா னொருபார்வை [1]பாவையஞ்சீர் [2]கண்ணுலே
சீவகரைத் தான்கண்டு சிந்தை கலங்கியவள்
அந்தப் புறத்தில் அதிசயமாய்த் தானுட
பூத்தா மரைமுகத்தாள் புண்ணியனுர் சீவகரைக்
கண்டா ளவரழகைக் காளைப் பருவமெல்லாம்
மன்னன்மகன் லோகபாலன் மனமகிழ்ந்து அப்பொழுது
கொண்டாடிச் சீவகரைக் கோலமுட னேதுதித்து
பிரியமாய்க் கொண்டிருந்தான் பிரகாசமுட னம்மானுர் !

அரிவை யெனும் வேசியவள் அன்புடனே நாட்டியங்கள்
தாளமுடன் மத்தளமுந் தவருமலாடியிட்டாள்
அரசன் குமாரனுக்கோர் ஆனதொரு தங்கையவள்
பரிவுடைய நாமமது பதுமையா ரென்றவளும்
முல்லைச் செடியும்வைத்தே மோகமுடன் தான்வளர்ப்பாள்
மோகமுடன் பார்த்திருக்கும் வேளைதனி லம்மானுர் !

சொல்லியொரு தோழியந்த செடியிலொரு பூக்கண்டு
பதுமையர்க்குச் செப்பிடவே பாங்குடனே மற்றவளும்
புதுமையுடன் பார்க்கவென்றே பொற்கொடியும்
போய்நடந்தே
முல்லைச் செடியின்மலர் மோகமுடன் தான்கண்டே
கண்டு மனமகிழ்ந்து காரிழையுந் தானுமப்போ
சொல்லப் பிரியமுடன் தோகையரு மச்செடியை
இன்னம் புதுமலர்கள் எங்குமுண்டோ வென்றெண்ணி
அன்னநடை யாள்செடியை ஆராய்ந்து பார்க்கையிலே
சின்னவிடைப் பாம்பதுவும் சேயிழையா ரைக்கடிக்க
அம்மாவோ வென்றலறி அழுதுமவள் தான்வழவே
கண்டு கலங்கியவர் கோகோ வெனவிழவே
மண்டுவிட மேறியவள் மயக்கமுற்ரு ளம்மானுர் !

அப்பொழுதே சேடியர்கள் அவசரமாய்த் தானேடி
செப்பிடுவார் மன்னவர்க்குந் தேவியர்க்கு மந்நேரம்

---

1 – ?. 2 கன்ருலே என்றுளது.

தந்தையருந் தாயுந் தயவுடனே தான்கேட்டு
இந்தவிட காரியரை அந்தட் சணமழைத்தே
விடமதனை மீளுமென்ற வேந்தனுரை கேட்டவரும்
விடமந்திர மோதியவர் மிக்கவது மீளாமல்
மேலிட்டே யவ்விடமும் மீறி விளங்கியிட
மாலிட்ட மன்னவனுர் மகளா ரிடப்பக்கல்
கூத்தாட்டம் பார்க்கும் குமாரனிடம் தூதனுப்ப
விந்தா தரவுடனே விளம்பிநன்கா ணம்மானுர்!

மன்னன் குமாரனவன் மதியுடனே தான்கேட்டுப்
பின்னுமந்த கூத்தைப் பிழையில்லா தாடுமென்று
சீவகரைத் தன்னிடத்தில் சிக்கெனவே வைத்தவனும்
காவலனுர் தன்மகனுங் கடுகியவ னேடிவந்து
மற்றவிட வைத்தியரை வாஞ்சையுட னேயழைத்து
பொற்கொடியாள் தன்விடத்தைப் போக்கடியு
மென்றுரைக்க
மணிமந்திர ஔடதத்தால் வைத்தவிடம் மீளவும்
தணியாம லேமிகவும் தலைமண்டை கொண்டதனுல்
எல்லோரும் கூடி யிருந்தே விசாரமிட்டுப்
பொல்லா விடமதனைப் போக்கும்வழி காணுமல்
மெத்த வியாகுலத்தால் வீற்றிருக்கும் வேளையிலே
உற்ற தொருபுறத்தில் ஓங்கியதோ ராந்தைசொல்ல
அந்நிமித்தம் ஆண்டறிந்தே அவனொருவன் கூறிடுவான்
தேசாந் திரியாகிச் சென்றனன்கா ணிப்பொழுது
வாசால மும்மழகும் வண்மையுள்ள வாலிபமும்
புத்தியுள்ள தாட்டீக புருஷனவன் கையாலே
முத்திழையாள் தன்விடமும் மீண்டிடுங்கா ணம்மானுர்!

என்றுமவன் கூறலுமே இளங்குமரன் தான்கேட்டு
நன்றியவன் யோசனையாய் நாடியவன் பார்ப்பளவில்
நம்மருகில் வந்திருந்து நாடகங்கள் பார்த்திருந்து
அம்மனிதன் ராஜாவாம் என்றே யவனறிந்து
சீவகரை யவ்விடத்தில் சீக்கிரமாய்த் தானழைக்க
காவலனுர் சீவகருங் கடுகிவந்தா ரம்மானுர்!

வந்தவரும் நம்மையிப்போ வரவழைத்த காரியமென் ?
சிந்தனையேன் என்றுசொல்லி சீவகனார் தான்கேட்க
அந்தரசன் தன்குமாரன் அறிவோ னெடுத்துரைப்பான்
எந்தன் தங்கை யாகியதோர் எங்கள் பதுமையாரைப்
பொல்லா விடந்தீண்டிப் பொற்கொடியாள் சோர்ந்திருக்க
எல்லா விடகாரி யிறக்கியும் மீளாமல்
தீவிர மாகிவிடந் தேருதே செய்கையினால்
ஆவலுட னெங்களுட ஆலோசனைப்பொருட்டால்
உம்மையழைப் பித்தபடி உற்றீரே கேளுமென்ன
செம்மையுள்ள சீவகருஞ் செப்புவா ரப்பொழுது
இவ்வளவுக் கோ நீங்கள் ஏங்குறீர் என்றவரும்
செவ்விடஞ் செப்பியேதான் செங்கழுநீர்ப் பூவொன்று
கொண்டுவரச் சொல்லியவர் கோலமுடன் தான்வாங்கி
மண்டை யினிலிருந்தே வாங்கியே காலளவாய்
தேவரன்று சொல்லியிட்ட திருமந் திரமோதி
பூவதனால் முக்கால் பொருந்தி யிறக்கியிட்டே
மங்கைநல் லாள்பதுமை வட்ட முகந் தன்னெதிரே
செங்கழுநீர்ப் பூவதனைச் சேரப் பிடித்தவன்தான்
கொண்டைதனி லேசொருகிக் கோதியிட்டா ரம்மானை !

ஒண்டொடியாள் தன்விடமும் ஓடிக் குதித்திரங்க
பதுமையா ரவ்வளவிற் பாங்குடனே தானெழுந்து
புதுமையுள்ள சீவகரைக் கண்டாளே பூங்கிளியும்
ஆசை யவர்மீதில் அளவில்லா மோகமுடன்
நேசமுட் சேர்த்தனள்காண் நேரிழையு மம்மானை !

அருகில்நின்ற தோழியவள் அன்புடனே தான்கண்டு
பருவமுள்ள சீவகரைப் பார்த்தே எடுத்துரைப்பாள்
உம்முடைய கையால்நீர் உகந்தவளைத் தான்தீண்டி
செம்மையுடன் மீட்கவென்னச் செய்திடுவா ரப்படியே
அவ்வளவி லேயரசன் அதிசயித்தே பிரியமுடன்
செம்மையுள்ள சீவகரைத் தீர்க்கமுடன் தான்பார்த்து
வித்தையினால் ரூபமதால் வீறுபெறு லட்சணத்தால்
குற்றமற்ற சத்திரியன் என்றே யுகந்தவனும்

நல்லசுப லக்கினத்தில் நாட்டிலுள்ளோர் தாமறிய
செல்வியெனுந் தன்மகளார் சீர்பதுமை யார்தனையே
சீவகர்க்கே தான்கொடுத்து திருவதுவை செய்தனன்காண்
நாவலர்கள் பாடியிட ராசமன்னர் கொண்டாட
பதுமையரைக் கல்யாணம் பண்ணியந்த சீவகனார்
இதமுடனே கொண்டிருந்து இராப்பகலு மாறாமல்
காமானு ராகமதால் காரிகையைத் தான்மருவி
பூமா தரிபோலப் பொருந்தினன்கா ணம்மானை!

கண்களிக்குஞ் சீவகனார் காதலுட னேமகிழும்
பெண்பதுமை யாரிலம்பம் பெருக்கமுற்று மம்மானை!

அம்மானை ரம்மானை ஆடியசீ ரம்மானை!

ஆரை யினிப்பாடி யாடுவோ மம்மானை!!

## 5-வது
## பதுமையாரிலம்பகம் முற்றும்

*
***

***
*

# 6—வது

# கே(ம)சரியாரிலம்பகம்

## கதைச் சுருக்கம்

சீவகன் பதுமையாருடன் இரண்டு திங்கள் இருந்து ஒருநாள் நள்ளிரவில் புறப்பட்டு, யாருமறியால் மாறு வேடங்கொண்டு சென்றனன். பதுமை கலங்கித் துடித்தாள். அவள் தந்தை, நாற்புறமும் ஆட்போக்கி யழைத்துவரும்படி ஏவினான். ஒருவன் சீவகனின் அழகு கண்டு அவனையே வினவினான். சீவகன், "நீ தேடுமந்த காளை ஒரு திங்களில் வருவதாகக் கூறிச் சென்றான்" என்று கூறவே. அதனைக் கேட்டு, பதுமையும் தாய்தந்தையரும் ஆற்றியிருந்தனர்.

சீவகன் வேறொரு நாடடைந்து, ஆண்டு ஒரு சோலை மருகில் இருந்தான். அவ்வூர் கோவணிகன் மகள் 'கேமசரி' பிறந்தது முதல் ஆடையுடுக்காது நாணமின்றி இருந்தாள். வணிகன் சோதிடரை அழைத்துக் கேட்க, "இவள் யாரைக் கண்டு நாணுகின்றாளோ, அவனே இவள் கணவன்" என்று கூறவே, அதுகேட்டு, அவ்வணிகன் ஒரு பெரும் விருந்து நடத்தினான். அந்தணர்கள், அரசர்கள், வணிகர்கள் ஆகியோரை அழைத்து விருந்திட்டான். அதன் நடுவே நாணமின்றி வந்தாள் கேமசரி. வணிகன் கவலுற்றிருந்தான்.

ஒருநாள் சீவகனைக் கண்டு அவனைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று உணவிட்டான். அவனைக் கண்டு கேமசரி நாணிப் புடைவையுடுத்து மறைந்து நின்றாள். பெற்றோர்கள் அவளைச் சீவகனுக்கு மணம்புரிவித்தனர். சீவகன் மகிழ்ந்திருந்தான்.

**6-வது கேமசரியாரிலம்பகக் கதைச் சுருக்கம் முற்றும்.**

## 6—வது

# [1]கே(ம)சரியாரிலம்பகம்

அம்மானை ரம்மானை ஆடியசீர் அம்மானை!
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை!!

சீவகனார் [2]கேசரியைச் சேர்ந்துமண மாலையிட்ட
பாவலர்முன் னிக்கதையைப் பாடுவோ மம்மானை!

இரண்டுதிங்க ளாமளவும் ஏந்திழையாள் பதுமையுடன்
திரண்டகொங்கை மேலருவி செழித்திருந்தும் ஓரிரவில்
நித்திரைசோ தித்துமவர் நீங்கிவிட வேணுமென்றே
உத்தமனார் சீவகரும் ஒண்டொடியை விட்டகன்று
போனார்கா ணப்பொழுது பெண்கொடியுங் கண்விழித்தே
காணாதே சீவகரைக் காதலினா லேமயக்கி
வியாகூலப் பட்டவளும் விசாரமுற்று நின்றபடி
வாகான தாய்தகப்பன் வண்மையுடன் கண்டவர்கள்
திசைநான்கும் ஓலைவிட்டுத் தேடுவித்தா ரம்மானை!

[3]இசையுமோர் தென்திசையில் எழிலான சீவகரைக்
கண்டிடவே மற்றவரும் காதலுட னப்பொழுது
அண்டினவர் காணாமல் அந்தமறு வேடமொன்று
கொண்டபடி தேறாமல் கொற்றவனார் தம்மருகில்
அண்டியவர் கேட்டிடுவார் அன்புடனே அம்மானை!

உம்மைப்போ லிந்த உருவுகொண்ட தோர்புருடன்
செம்மையுடை [4]யானைநீர் காணீரோ செப்புமென
கண்டே னிதுவழியார் காலையொரு திங்களின்மேல்
தண்டாம லேவருவேன் தாடாள னென்றுசொல்லிப்
போனார்காண் என்றே புகழ்சீவ னார்பக்கர்

---

1 கேசரியாரென்றேயுளது. 2 கேமசரி. 3 இசைமோர்கதந்த திசையில் என்றுளது. 4 யானேநீர் என்றுளது.

தாஞகக் கேட்டுவந்தே தாரரசர்க் கோதியிட்டார்
மன்னவனுங் கேட்டே மகள்பதுமை யார்தனக்கும்
இன்னபடி சொல்லியேதான் இளங்கொடியைத்
தேற்றியிட்டு
சிந்தனையை விட்டவரும் தேறியிட்டே தாமுகந்து
அந்தமுடன் வீற்றிருந்தார் அன்புடனே யம்மானை!

சிவேந் திரப்பெருமாள் சீர்பதுமை யாரைவிட்டு
ஆவலுடன் போந்தவர்தான் அதிசயத்தை நானுரைப்பேன்
அப்பொழுது சீவகரும் அவ்விடத்தை விட்டகன்றே
செப்பமுடன் தூரவழி சென்றுமவர் போனபின்பு
பண்ணு[1]தக்க நாடாம் என்பதொரு பட்டணத்தில்
விண்ணுனை மாய்ச்சேர்ந்து மெத்தஇளைப் பாகியேதான்
சோலைதனிற் போயிருந்தார் [2]தூமொழியா ரம்மானை!

கோலமுட னந்நகரில் கோவணிக ஞர்தமக்கும்
முன்னுளி லோர்பெண் மோகமுடன் தான்பிறக்க
அந்நாளிற் சோதிடரை அன்புடனே தானழைத்து
இந்தமக ளார்தமக்கே ஏற்ற புருடனுந்தான்
எந்தவகை [3]யூரன்காண் என்றவரைத் தானுகந்து
தந்தையருந் தாயுஞ் சதிருடனே கேட்டவர்க்கே
அந்தப் புரோகிதர்கள் அன்புடனே தானுரைப்பார்
[4]பெண்பிறந்த சாதகனுள் [5]பேதித்தே பார்த்தவர்கள்
பண்புடைய பெண்பிள்ளை பரிவுவெட்க மில்லாமல்
அறையிற் கலையுடுக்காள் [6]அம்மணமு மாயிருப்பாள்
புரையில்லாப் பருவமட்டும் பொற்கொடியு மம்மணமாய்
இருப்பளவில் யாதொருத்தன் எதிரிலவள் கண்டவள்தான்
மருவியதோர் நாணமுற்றே மாதர்துகில் தானுடுத்தால்
அந்தப் புருடனுக்கே ஆகுமிவள் பாரியென்றே
விந்தையுள்ள சோதிடர்கள் விதித்தனர்கா ணம்மானை!

---

1 நகர்ஞடாம் என்றுளது. 2 துன்மொழியார் என்றுளது. 3 புரன்காண் என்றுளது. வரன் என்பதும் பொருந்தும். 4 பெண் புரந்த என்றுளது. 5 பேதிற்றேர பாத்தவர்கன் என்றுளது. 6 தம்மணமு என்றுளது.

அப்படியே பெண்கொடியும் அன்றுமுதல் நாளளவும்
செப்பமுடன் பக்குவமாய் தேறியிட்டு மம்மணமாய்
புடவை யுடுக்காமல் பேதையாய் நின்றபடி
அடவுடனே தாய்தகப்பன் அனைவோரும் தான்கண்டே
கேசரியா ரென்னுமொரு கீர்த்தியுள்ள நாமமிட்டு
ஆசையுட னேமகளார் அனுபவங்கள் காண்பமென்று
சோதிடர்கள் சொன்னமொழி சோதிப்போ
மென்றுசொல்லி
ஆதரவா யாயிரத்தெண் கழஞ்சுகள் பொன்னளவும்
[1]நேர்ந்தே மறையோர்கள் நீள்வைசிய ராசகுலம்
சேர்ந்துமிந்த மூவர்குலம் சேனையெல்லாந் தான்கூட்டி
போஜனங்கள் பண்ணுவித்து பொன்னுளதெல்
லாங்கொடுத்து
ஓசையுட னுற்றுரும் உறமுறையா ரெல்லோரும்
கூடி யிருந்தவர்கள் குலாவியிடு மச்சபையில்
நாடியவேந் தன்மகளார் நாணமின்றி கேசரியும்
ஆடை யுடுக்காமல் அம்மணமாய் நின்றபடி
வாடியேதாய் தந்தையரும் மகளாரைத் தான்பார்த்து
என்செய்வோ மென்றவர்கள் இருந்தே விசாரமிட்டு
அஞ்சியவர் சோகமுற்றே அங்கிருந்தா ரம்மானை!

வாழும் மகளாரும் வாழ்க்கைப் படாமலேதான்
என்னவிது காரணமோ என்றே யவர்கருதி
தாழும் படிக்கிவளும் தானிருக்கும் அம்மானை!

அன்னணமே யவ்வணிகன் அங்கே வெளிப்பட்டு
நல்லோர் பெரியோரை நாமழைத்துக் கொண்டுவந்து
செல்லமக ளார்நமது சேயிழையார் முன்விடுவோம்
என்றே மனங்கருதி ஏதலுடன் போம்பொழுது
கண்ணான சீவகரைக் கண்டானோர் சோலைதனில்
கண்டந்த சீவகரைக் காதலுட னேவணிகன்
அண்டி நமஸ்கரித்தான் அன்புடனே யம்மானை!

---

1 னெந்தே என்றுளது.

ஆரென வென்றேதான் அவர்தன்னை யேவினவ
காரியமாய்ச் சீவகனார் கட்டுத் தரமுரைக்க
நல்லதென்று தானுகந்து நம்மனையி லிப்பொழுது
சொல்லியிட்டுத் தானழைக்கப் போசனம்நீர்
செய்யவென்றே
தந்தையரும் தாயாருந் தயவுடனே தான்பார்த்து
அந்தமுள்ள கேசரியாள்க் கானதொரு பர்த்தாவும்
இந்த மகாபுருட னென்றே யவர்கருதி
வந்ததொரு சீவகர்க்கு வாகுடனே தானுரைப்பார்
எங்களிட கேசரியார் என்மகளா ரின்றளவும்
அங்கமதில் நாணமின்றி அம்மணமாய்த் தானிருந்த
வருத்த முடனழைக்க வணிகனுட தன்வசனம்
திருந்தியிட வேணுமென்றே சீவகனார் தானுகந்து
வந்தார் வணிகனிட மாளிகையி லம்மானை!

செந்தா மரைமுகத்தாள் செய்யதிருக் கேசரியார்
சீவகனார் தன்முகத்தை சேயிழையார் கண்டவளும்
பாவனையாய் நாணமுற்று பதறியே தானோடி
சேலையுடுத் தேயவளும் செல்வியொரு மூலையிலே
மாலை முடியாளும் மறைந்திருந்தா ரம்மானை!

இன்றளவும் உம்முடைய இந்துமுகங் காணலுமே
பொன்னவளும் நாணமுற்றே புடவையது தானுடுத்தாள்
என்றே யெடுத்துரைத்து இலக்கணமாய்ச் சீவகரை
நன்றாக வேதுதித்து நம்முடைய பெண்பிள்ளையைத்
தந்திடுவோ மிப்பொழுதே தாரரசே யுந்தனுக்கு
அந்தமுட னென்றுசொல்லி அந்தபிதா சம்மதித்து
சுத்தசுப லக்கினத்தில் தேன்மொழியாள் கேசரியைப்
பத்தியுடன் சீவகர்க்கே பாரிலுள்ளோர் தாமறிய
கல்யாணம் பண்ணினர்காண் காதலுட னம்மானை!

மல்லுத் திரள்தோளான் வாள்கேசரி தன்னுடனே
செந்தா மரைமுகத்தாள் செய்யதிருக் கேசரியார்
கூடி யவர்சிலநாள் குலாவியே தானிருந்தார்
ஏடவிழுங் கேசரியார் இலம்பமுற்று மம்மானை!

அர்மானை அம்மானை ஆடியசீர் அம்மானை!
ஆரை யினிப்பாடி யாடுவோ மம்மானை!!

**6-வது**
**கே(ம)சரியாரிலம்பகம்**
**முற்றும்.**

# 7—வது
# கனகமாலையாரிலம்பகம்

## கதைச் சுருக்கம்

சீவகன் கேமசரியை விட்டுச் சென்றதால் கேமசரியாள் கவலையுற்றிருந்ததைக்கண்ட தாய் தந்தையர் ஏவலர்களை ஏவினர். அவர்களில் ஒருவன் மாறுவேடத்துடனுள்ள சீவகனைக்கண்டு, 'உம்மைப்போலொருவரைக் கண்டதுண்டோ?' என்றுகேட்க அதற்குச் சீவகன், 'கண்டேன்' அவன் அறுபது நாட்களில் வருவதாகக்கூறி மறைந்தான், என்று கூறக்கேட்டு, அதனைக் கேமசரியின் பெற்றோர்களிடம் கூற, அவர்கள் ஆற்றியிருந்தனர். (இடையில் விடுபட்டு உளது)

சீவகனுடைய ஊரும் பேரும் கேட்டு, 'இவன் குலமுடையவனே எனக்கருதித் தன்மக்கள் நால்வருக்கு வித்தை கற்பிக்க ஏற்பாடு செய்தான். சீவகன் எல்லா வித்தைகளையும் கற்பித்தான். மகிழ்ந்த மன்னன், தன்மகள் கனகமாலையை, அவனுக்குத் திருமணம் புரிவித்தான். சீவகன் கனகமாலையுடன் இனிது மகிழ்ந்திருந்தான்.

**7-வது**

**கனகமாலையாரிலம்பகக் கதைச் சுருக்கம் முற்றும்.**

## 7—வது

## கனகமாலையா ரிலம்பகம்

அம்மானை ரம்மானை ஆடியசீர் அம்மானை!
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை!!

மணமருவுஞ் சீவகனார் வாழ்கனக மாலையைத்தான்
மணமிசைந்த வாழ்க்கைநலம் வாழ்த்திமிகப் பாடிடுவோம்.
போனார்காண் சீவகரும் பெண்கே சரியைவிட்டு
மானனைன் நொந்துமிக வாட்ட முடன் தானிருக்க
தாயாருந் தந்தையருந் தன்மகளைத் தான்தேற்றி
போயோடித் தேடியேதான் புண்ணியனார் சீவகரை
அழைத்தோடி வாருமென்றே ஆளனுப்ப மற்றவரும்
உழைத்துழையார் நாலுதிக்கும் ஓடிநர்கா ணம்மானை!

கண்டா ரொருது தன் காதலுடன் சீவகரை
உண்டான தன்னுருவை ஒளித்துமவ வேடமுடன்
போகையினார் சீவகரைப் போனதொரு தூதனுந்தான்
வாருடனே உம்முடைய வடிவும்போ லோர்புருடன்
இங்குவரக் கண்ட துண்டோ என்றுமவன் கேட்கலுமே
அங்கவரைக் கண்டேநாம் அறுபதுநா ளானபின்பு
வந்திடுவே னென்றுரைத்து மறைந்தனர்கா
ணென்றுசொல்ல
அந்த வயணமெல்லாம் அன்புடனே கேட்டுவந்து
செட்டியார் தன்னருகே செப்பிடவே கேட்டவரும்
நட்டணைசேர் கேசரிக்கே நன்மையுட னேயுரைத்து
தந்தையுடன் தாயாரும் தன்மகளார் கேசரியும்
அந்தமுடன் சந்தோட மாயிருந்தா ரம்மானை!

போனதொரு சேவகரும் புண்ணியனா ரப்பொழுது
காணும் மலைவாவி கடந்தே நெடுந்தூரம்

## 75-வது ஏடு இல்லை.

அஞ்சலுடன் வாருமென்றே அழைத்துவந்தே
ளென்றுசொல்ல
இன்சொலினுர் கேட்டவனும் ராசாவுந் தானுரைப்பான்
அவருடைய ஊர்பேரும் அன்புடனே தான்கேட்டு
குவலயத்தி லேபெரிய குலமுடையா ரென்றுகந்து
தம்முடைய மக்களென்னும் தருக்குடைய நால்வரையும்
செம்மையுள்ள வித்தையெல்லாஞ் செப்பியிடும்
என்றுசொல்லி
ஒப்புடைய சீவகர்க்கே ஒப்பித்தா ரம்மானுர் !

செப்பமுடன் சீவகரும் சிறுவரவர் நால்வருக்கும்
அம்புடன்வாள் வித்தையதும் ஆயுதமாம் வித்தையுடன்
செம்பொன்தேர் சாதனையுஞ் செய்யா யுதபரீட்சை
ஆனை குதிரையின்மேல் அன்புடனே நாட்டமுடன்
சேனைவித்தை நூற்றெட்டும் திருந்தவே தானுரைத்து
காவலர்க்குக் காட்டிடவே கனக்கப் பிரியமுடன்
ஆவலுட னேகனக மாலையெனும் ஆயிழையார்
தன்மகளை சீவகர்க்கே சந்தோட மாகியேதான்
நன்மையுடன் நல்லசுப லக்கினத்தில் கலியாணம்
பண்ணினு ரப்பொழுதே பாங்குடனே யம்மானுர் !

புண்ணியனுர் சீவகரும் புகழ்கனக மாலையுடன்
கூடியித முமுர் தமுண்டு குலாவிமிகத் தானிருந்தார்
ஏடவிழுங் கனகமாலை இலம்பமுற்று மம்மானுர் !

அம்மானு ரம்மானுர் ஆடியசீ ரம்மானுர் !

ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானுர் !!

**7-வது**

**கனகமாலையாரிலம்பகம்**

**முற்றும்.**

## 8-வது
# விமலையாரிலம்பகம்

### கதைச் சுருக்கம்

காந்தருவதத்தையிடம் [1]நந்தாட்டியன் சென்று, 'காட்டாங்கன் சீவகனைக் கொன்றுவிட்டான்' என்றான். அவள் அதனைப் பொருட்படுத்தாதிருக்கக் கண்டு, மீண்டும், 'நீர் மகிழ்ச்சியாயிருப்பதென்ன?' என்று வினவ, அதற்கு அவள் நடந்ததைச் சொல்லி, மேலும் அடுத்து நிகழ்ந்த திருமணங்களையும் கூறினள்.

'அப்படியானால் அண்ணனை நான் உடனே காண வேண்டும்' என்றான். அவள், அவன் கரத்தில் ஒரு யந்திரமெழுதி, அதனைப் பார்க்கச் சொன்னாள். சீவகன் கனகமாலையுடன் மகிழ்ச்சியாயிருக்கக் கண்டு மகிழ்ந்தான். உடனே சீவகனிடம் செல்லவேண்டுமென்று கேட்டான். 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி, வேறு ஒரு கட்டிலின்மேல் ஏறி, நித்திரை கொள்ளச் செய்து, தன் தந்தையை நினைத்தாள். தந்தையின் ஏவலர் ஓடிவந்து, கட்டிலுடன் கொண்டுபோய் சீவகன் பக்கல் விடுத்தனர். சீவகன் அவனை மன்னனிடம் அழைத்துப்போய் மகிழ்ந்திருந்தான். சில நாட்கள் சென்றன.

இராசமாபுரத்தில் வீற்றிருந்த தோழன் நபுலன், விபுலன், மற்றும் ஐந்நூறு தோழர்களும், காந்தருவதத்தையிடம் வந்து, 'இத்தனை நாட்களாக நந்தாட்டியனைக் காணவில்லையே! என்ன செய்தி?' என்று கேட்க, அவள்

---

1 இவன் சீவகனின் தம்பி. இவன் சிந்தாமணியில் 'நந்தபட்டன்' எனப் பேசப்படுகிறான்.

செய்தியுரைக்க, அவர்கள், 'நாங்களும் சீவகரைக் காண வேண்டும்' என்றுசொல்ல, அவள், 'நீங்கள் எல்லோரும், 'மத்திய தேசம்' என்னும் பட்டணத்திற்கு வியாபாரிகளைப் போலச் செல்லுங்கள்' என்று கூற, அவ்வாறே புறப்பட்டார்கள். அவர்கள் தாபதர் பள்ளியை அடைந்தனர். அங்கு விசயை இருந்தாள். ஒருவன் சென்று விசயையைக் கண்டு விசாரித்தான். விசயையும் விசாரித்தாள்.

அப்போது, அவன் விசயையிடம், 'சச்சந்தன் மகன் சீவகன்' என்றும், 'அவன் பின்பிறந்தார் மூவரும் மற்றும் ஐந்நூற்றுவரும்' என்றும், 'காட்டாங்கன் சீவகனைக் கொல்ல நினைந்தான்' என்றும் சொல்லலுமே, விசயை மயங்கி விழுந்தாள் எழுந்து அழுதாள். 'நான் சச்சேந்திரன் மனைவி. உன்னை இடுகாட்டில் பெற்றேன். கந்தோர்க்க செட்டிவந்து உன்னைப் பெற்றுக்கொண்டு, என்னை இத்தாபசர் பள்ளியில் சேர்த்தான். நானே உன் தாய். நீயே என் மகன்' என்று புலம்பினாள். அது கேட்ட தோழன், 'சீவகருக்கு ஆபத்தில்லை. உயிருடன் இருக்கின்றார். நாங்கள் அவரைத்தான் காணச் செல்கின்றோம்' என்று சொல்லவும். மகிழ்ந்தாள்

மற்ற தோழர்களிடம் அவன் வந்து சொல்ல, அவர்களும் விசயையிடம் சென்று வணங்க, அவள் வாழ்த்தினாள். "நீங்கள் இச்செய்தியை யாருக்கும் சொல்லாமல், சீவகரை உடனே அழைத்து வாருங்கள்" என்று சொன்னாள். அப்படியே வருகிறோமென்று கூறி, விடைபெற்று, மத்திய பட்டணத்தின் காததூரத்தில் தங்கி, ஒருவரை ஒற்றறிய விடுத்தனர்.

அவன் செல்லும்போது, அப்பட்டணத்துப் பட்டத்து யானை மதம்பிடித்து வீதியில் தொல்லைதர, அந்நகரத்து மக்கள் வெளிவராது, வீட்டினுள்ளே அடங்கிக் கிடந்ததைக் கண்டான். அப்போது சீவகன் அங்கு வந்து ஒருபுறம் ஒதுங்கி, ஒரு இராகம் பாடவே யானை மதம் தெளிந்தது. அதனை ஒற்றன் மறைந்திருந்து அறிந்தான்.

அந்த யானையின்மேல் சீவகன் ஏறி அரசனிடம் சென்றான். அரசன் மகிழ்ந்தான். சன்மானமளித்தான். நகரத்தார் வாழ்த்தினர்.

இதனைக் கண்ட தூதன், மற்ற நண்பர்கட்குத் தெரிவித்தான். மகிழ்ந்தனர். அவ்வூர் மாடுகளையெல்லாம் வளைத்து 'நிரைகவர்தல்' செய்தால் சீவகனை விடுவிப்பான். அப்போது அவருடன் பேசிடலாம், எனக் கருதி, அவ்வாறே செய்தனர். மன்னன் படைகளை அனுப்பினான். அவைகள் நிரைகவரமாட்டாமல் திரும்பின. சீவகனை அனுப்பினான் சீவகன் அவர்களைக்கண்டு மகிழ்ந்து உரையாடினான். செய்தியனைத்தும் அறிவித்தான். தோழர்கள் விசயையைக் கண்டதைக் கூறினார்கள்.

சீவகன் வருந்தியிருக்கும் போது, அரசன் மகன் வந்து அனைவரையும் அழைத்துக் கொண்டு மன்னனிடம் சென்றான். மன்னன் செய்தியறிந்து மகிழ்ந்தான். கனகமாலையின் வீடடைந்து உணவுண்டான். பின்பு கனகமாலை, "மாடு திருட வந்த மைத்துனர்கள்" என்று அவர்களைப் பரிகசித்தாள். சீவகன் மன்னனிடம் விடைபெற்று, தோழர்களுடன் விசயை இருக்கும் தாபசப்பள்ளியை நோக்கிப் புறப்பட்டான்

தாபசப்பள்ளியில் ஒருத்தி, சீவகன் தன் தோழர்களுடன் விசயை பக்கல்வந்து அமர்ந்ததாகக் கனாக் கண்டதை விசயையிடம் கூறிக்கொண்டிருந்தாள். அதுபோது சீவகன் சென்றான். வணங்கினான். 'நீர் எனது உண்மைத் தாயாகில் என்மீது பால் சொரிதல் வேண்டும்' என, உடனே பால் சொரிந்தது. எல்லோரும் வியந்து மகிழ்ந்தனர். உணவு உண்டபின் விசயையும் சீவகனும் தனித்திருந்தனர். உரையாடினர். அப்போது விசயை, 'என் தமையன் விசயமகா நகர மன்னன் கோவிந்தன். அவரைச்சென்று காண்பாயாக!' என்று கூறினள். சீவகன் கேட்டு, தாயை அங்கு அனுப்பவேண்டும் என எண்ணி,

அவ்வாறே முன்னதாகத் தன் தாயை அனுப்பித் தானும் தன் தோழர்களுடன் பின்னே நடந்தான்.

வழியில் இராசமாபுரம் வந்து சோலையில் தங்கினர். மறுநாள் தனித்து, ஒரு வீதி வழியே சீவகன் நகர்வளங் காணச் சென்றனன். அந்நகர் இராஜநகாந்தன் (சாகர தத்தன்) என்னும் வணிகன் மகள் 'விமலை' என்பாள். அவள் பிறந்தநாள் முதலாக, அவள் தந்தையின் கடைச் சரக்குகள் விலையாகாமலிருந்தன. சோதிடரைக் கேட்டான். அவர்கள் 'உன் மகளுக்குரிய கணவன் உன் கடைக்கு வரும்போது, சரக்குகள் விலையாகும்' என்றனர். விமலை பருவமடைந் தாள். பெற்றோர்கள் கவலையுடன் இருந்தனர்.

அப்போது சீவகன் தெருவழியே வர, விமலை மாளிகை யில் அடித்த பந்து சீவகர் முன்னே விழ, அதன் காரணமாக அவனும் நோக்கினன்; அவளும் நோக்கினள். கண்டதாற் கொண்ட காதலால் தடுமாறினள். அவள் தந்தை சாகர தத்தன் கடைக்குச் சென்றான். சென்றவுடன் சரக்குகளெல் லாம் விலையாகிவிட்டன. மகிழ்ந்த வணிகன் சீவகனைத் தன் மனைக்கழைத்து வந்து,விமலையை மணம்புரிவித்தான். இரவு இன்ப லீலையில் திளைத்திருந்தான். பொழுது விடிந்ததும், மாமனாரிடம் விடைபெற்று,மணக் கோலத்துடன் சோலையை அடைந்தான்.

**8-வது விமலையாரிலம்பகக்**
**கதைச் சுருக்கம்**
**முற்றும்.**

## 8—வது

## விமலையாரிலம்பகம்

அம்மானை ரம்மானை ஆடியசீர் அம்மானை !
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை !!

வணிகனிட தன்மகளார் வாழ்விமலை யார்தனையே
மணமிசைந்த சீவகனார் வளம்பாடி யாடிடுவோம்.
முன்னாளிற் சீவகரை மூடனவன் காட்டாங்கன்
கொன்றா னெனப்படுஞ்சொல் கோதையரும் காந்தருவ
தத்தையுட சந்நிதியில் சார்ந்துமவன் நந்தாட்டியன்
உற்று மவள்முகத்தை ஓங்கியவன் பார்க்கலுமே
மற்றுத் துயரமின்றி மாதரவள் தானிருக்க
இனிதுடனே நந்தாட்டியன் இயல்புறவே தான்கண்டு
தன்னுடைய தோழருடன் சார்ந்துமவன் வீற்றிருக்க
இன்ன படியேதா னிருந்துவெகு நாளளவும்
காந்தருவ தத்தையிடம் காதலுடன் நந்தாட்டியன்
சேர்ந்துமவள் தன்னருகே சென்றனன்கா ணம்மானை !

மதனியரைத் தான்தொழுது வண்மையுடன் நந்தாட்டியன்
இதமுடனே கூறிடுவான் எழிலுடைய சீவகரை
காட்டாங்கன் கொன்றிருக்கக் காரிகையே நீருமிப்போ
தாட்டீக மாகியேதான் சந்தோட மாயிருக்க
ஏற்குமோ நங்குலத்துக் கேதலுடன் செப்புமென்ன
ஆற்கமுடன் காந்தருவ தத்தையவள் கூறிடுவாள்
உங்களுடை யதமயன் ஓங்கியதோர் சீவகரும்
சங்கைசற்று மில்லாமல் தாமிருந்து வாரதுவும்
பொன்னுலக மேவியவர் பொங்கமுடன் வந்துபின்னும்
மன்னன்பெரு மாளுடைய வதுவைவய ணங்களெல்லாம்
நன்றாகச் சொல்லியிட்டாள் நாயகியு மம்மானை !

பன்றாகி யேயவரும் பட்டணத்தில் வீற்றிருந்தார்
அந்த வயணமெல்லாம் யானறிந்த தன்னாலே

சிந்தை துயரமின்றி சென்றிருப்பே னென்றவளும்
ஒருவருடன் சொல்லாமல் ஓசையுடன் நானிருப்பேன்
பிரியமுடன் கேளுமென்றே பெண்பெருமாள் தானுரைக்க
கேட்டுமந்த நந்தாட்டியன் கேதமின்றி யேகருத்தில்
நாட்டியதோர் சந்தோடம் நல்கினன்கா ணம்மானை!

எந்தமயன் தன்னை யேநான் இயல்புடனே காணுகைக்கு
அந்தமுடன் நந்தாட்டியன் அன்புடனே வேணுமென்ன
கந்தருவ தத்தையரும் காதலுட னப்பொழுது
போந்துமந்த நந்தாட்டியன் புண்டரீக மாங்கரத்தில்
எந்திரத்தை யிட்டவளும் ஏதலுடன் பாருமென்ன
அந்தமுடன் நந்தாட்டியன் அப்பொழுதே பார்ப்பளவில்
சீவகரும் பெண்கனக மாலையெனுந் தேன்மொழியும்
ஆவலுடன் கட்டிலின்மேல் ஆனவரைத் தான்கண்டு
சந்தோட மாகியேதான் தார்குழலைத் தானேக்கி
செந்தா மரைத்திருவே செய்யபதி விரதையே
எந்தமைய னார்பக்கல் இன்பமுடன் செல்லுகைக்கு
அந்தமுடன் வேணுமென்று அன்புடனே கேட்டிடவே
அப்படியே யாகுதென்றாள் ஆணழகி யம்மானை!
மைப்படியுங் கூந்தல்நல்லாள் வாஞ்சை யுடனிரவு
வாருமிங்கே என்றழைத்து வந்திடுநந் தாட்டியரை
வேறுமொரு கட்டிலின்மேல் மேவிநித்திரை செய்யுமென்று
தத்தையருந் தன்னுடைய தந்தையரைத் தான்நினைக்க
சித்திரம்போல் தந்தையிட சேவகனு ரோடிவந்து
இந்திரசா லத்துடனே இலங்கியநந் தாட்டியரை
அந்தரத்தில் கட்டிலுடன் அன்புடனே கொண்டுசென்றே
சீவகனு ரப்பொழுது சேருமத்திய தேசமதில்
ஆவலுடன் கொண்டுசென்றே அவர்படுக்கை வீட்டருகே
ஒருகெருட கூடமதில் தூங்கியேதான் கொண்டுவைத்து
பரிவுடனே போனார்காண் பட்சமுட னம்மானை!

கெருடதேவி யைப்பூசை கீர்த்தியுடன் பண்ணவந்த
மருவியதோர் தாதியவள் வாகுடனே தான்கண்டு
சீவகரா கக்கருதி சென்றவளுஞ் சீவகனார்

ஆவ லுடன்படுக்கை அம்மனையில் கண்டவரை
என்னவிது ஆச்சரியம் என்றே யவளுரைக்க
அன்னணமே சீவகனுர் அன்புடனே தான்வந்து
தம்பியெனும் நந்தாட்டியன் தன்னருகே சென்றவரும்
இன்பமுடன் தம்பியரை ஏதலுட னேயணைத்துக்
கொண்டுபோய் சீவகருங் கோமா னிடஞ்செல்ல
கண்டந்த ராசாவுங் கனக்க பிரியமுடன்
மனமகிழ்ந்து வீற்றிருந்தான் வாஞ்சையுட னம்மானுர்!

அனுதினமும் நந்தாட்டியன் அன்புடைய சீவகரும்
இன்பமுட னேசிலநாள் இனிதுடனே வீற்றிருந்தார்
அன்புடனே ராசபுர மாகியதோர் பட்டணத்தில்
வீற்றிருந்த தோழனுமே விபுலன் நபுலனுடன்
தோற்றியிடும் ஐந்நூறு தோழருமே கூடியவர்
காந்தருவ தத்தையிடம் கடுகியே வந்தவர்கள்
சேர்ந்து நமஸ்கரித்தார் செம்மையுட னம்மானுர்!

நந்தாட்டிய ரிங்குவந்த னள்முதலாய்க் காணேமென்று
கேட்டவுடன் தத்தையரும் கீர்த்தியுட னேயுரைப்பாள்
பாட்டிலுயர் மத்தியதேச மென்னுமொரு பட்டணத்தில்
தமையனுர் தன்னுடனே சார்ந்திருந்தா ரென்றுசொல்ல
உகமைதனைத் தத்தையரும் உரைத்தபடி தான்கேட்டு
எந்தோ ரிடத்திலவர் இருக்கிருர் சொல்லுமென்று
அன்னணமுடன் நாங்கள்சென்றே அன்புடனே பார்ப்பதற்கு
நண்ணியிட வேணுமென்ருர் நாயகரு மம்மானுர்!

அப்பொழுதே காந்தருவ தத்தையரும் அன்புடனே
செப்பிடுவாள் நீங்களெல்லாம் சென்றிடுவீர் வியாபாரம்
பண்ணுமவர் தங்களைப்போல் பட்சமுட னேகுமென்ன
நண்ணியவ ரைஞ்ஞூறு தோழருமே நன்மையுடன்
கூடிப்புறப் பட்டார்கள் கொற்றவர்கள் எல்லோரும்
நாடியிட்டே போயவர்கள் தாபசர்சேர் பள்ளியினில்
போயவர்கள் அங்குமொரு பூஞ்சோலை தன்னிடத்தில்
நேயமுட னேயிரங்கி நிலவரமாய் வீற்றிருந்தார்
அங்கொருவன் தாபசர்சேர் பள்ளியினில் போயவனும்

பொங்கமுடன் விசயமகா தேவிமடம் போயணுகி
இலட்சுமி கடாட்சமுள்ள ஏலங் கருங்குழலாள்
விலைட்சயமாய் அவ்வனத்து வைட்சமத்தைப் பார்த்தவனும்
யாவரிவ ரென்றறிய வேண்டியவ னப்பொழுது
மேவி விசாரித்தான் விசயமகா தேவியரை
அம்மானைந் நூறுபேரும் ஆனகுல முள்ளதெல்லாம்
செம்மையுட னேயறியச் செப்புமென்று ரம்மானை!

விசயமகா தேவியரும் வீறுடனே தானுரைப்பாள்
இசையுடனே பின்புசொல்வேன் இப்பொழுது நும்முடைய
ஊருங் குலப்பேரும் உண்மையுடன் சொல்லுமென்ன
வீரியமாய் செப்பிடுவான் விளங்கியிடுஞ் சீவகனார்
தன்தோழன் நானுமென்ன சதிருடைய ராசாவும்
எந்தாகப் பட்டணமாம் எழில்நகரந் தன்னிலேயோர்
கந்தோர்க்க செட்டியெனும் கனவணிக னார்தமக்கே
வந்தா னொருகுமரன் வாகுடனே யம்மானை!

சச்சேந்திர மன்னவனார் தானிறந்த நாளையிலே
நிச்சயமா கிப்பிறந்தான் நேமமுட னப்பொழுது
சிறுவன் திருநாமம் சீவகனார் தான்காணும்
பிறகு மொருமூவர் பிறந்தனர்கா ணம்மானை!

அவர்பிறந்த லக்கினத்தில் ஆனதொரு பட்டணத்தில்
நலமுடனே ஐந்நூறு நாயகர்கள் தான்பிறந்தார்
தங்கமுட னைந்நூறு தோழருடன் சீவகரும்
அங்கங்கு பூந்திருக்கும் ஆனதொரு நாளையிலே
பட்டணத்தில் வீரரசன் பாங்குடைய காட்டாங்கன்
நட்டணைசேர் சீவகர்மேல் நல்கியிடுங் கோபமதால்
கொல்ல நினைந்தனன்காண் கோமானு மென்றுரைக்க
நல்ல விசயமதாய் நாயகியுந் தான்கேட்டே
மயங்கியவள் மூர்ச்சையுடன் மண்ணின்மேல்
தான்விழுந்தாள்
தயங்கி களைதெளிந்தே தேறியவள் தானெழுந்து
சீவகருஞ் செத்தாரென் றெண்ணியே சிந்தையதாய்
ஆவென்றே தானமுதாள் ஆணழகி யம்மானை!

சச்சேந்திர மன்னவனும் தகப்பனு ரானதுவும்
உச்சிதமாய் யானும் உனக்குத்தாய் ஆனதுவும்
சீவகனுர் [1] தந்தனேயே சென்றுமயா னந்தனிலே
காவலரைப் பெற்றதுவும் கந்தோர்க்க செட்டிவந்து
கொண்டுவுமை சென்றவருங் கோலமுட னேயிவனே
அண்டியே தாபசருள் அருந்தபசு பண்ணினதும்
என்னுயிரே என்மகனே என்கண்ணே எப்பெருமாள்
மன்னவனே சீவகனே மாதாவும் நானல்லவோ
என்னேவிட்டு நீபிரிய ஏற்குமோ என்குமரா
உன்னேவிட்டு நானிருக்க ஒண்ணு தெனவழுது
மண்ணில் விழுந்திடுவாள் மதிமுகத்தை மோதிடுவாள்
[2] கன்றி எழுந்திருந்து கையாற் [3] புடைத்திடுவாள்
ஆருயிரே சீவகரே ஐயாவே என்றழுவாள்
சீருடைய நின்முகத்தைத் திருந்தவே காட்டாயோ !
ஐயோ மகனேநான் ஆருமற்ற ளானேனென்று
கையோ டவள்வயிற்றைக் கனக்கவே தான்பிசைவாள்
மற்றுமவள் தானழுத வக்கணேயை யின்னதென்றே
[4] அத்தியிட வொண்ணுது அழுதனள்கா ணம்மானுர் !

விசயமகா தேவியரும் வெகுண்டே யழுகிறதும்
இசையிலா சீவகரை என்குமார னென்கிறதும்
கேட்டிருந்த தோழனுந்தான் கிட்டியே தானுரைப்பான்
வாட்டமிலே சீவகர்க்கே மாதாவே யஞ்சாதே !
சீவகனுர் பூருவோத்திரந் திருந்தவே செப்பியிட்டு
ஆவலுட னேயடியேன் அங்குநான் போறேனென்ன
தேவி விசயருந்தான் சேதியெல்லாந் தான்கேட்டு
ஆவிவந்தாற் போலவளும் ஆலித்தா ளம்மானுர் !

சோலேயுடன் போயவனுந் தோழமார் தங்களுடன்
மாலே முடியானும் வக்கணேயெல் லாமுரைக்க
கேட்டந்த தோழரெல்லாம் கிலேசமினி தில்லாமல்
நாட்டமுடன் சந்தோஷம் நல்கினர்கா ணம்மானுர் !

---

1 தன்னேயே போலும். 2 கண்றி என்றுளது. 3 படைத்திடுவாள் என்றுளது 4 அறுதியிட எனினும் அமையும்.

எல்லோருங் கூடியேதான் இசைந்துடனே தானவர்கள்
நில்லாம லேவிசயை நேரிழையாள் பக்கல்வந்து
தெண்டன் [1]அடிபணிந்தார் சேயிழையார் கைதொழுதார்.
அண்டையிலே நின்றவரை அன்புடனே தான்பார்த்து
சீவகனுர் தந்தனக்கு செம்மையுள்ள தோழருந்தான்
ஆவலுட னெந்தனுக்கும் அன்புடைய பிள்ளைகள்தான்
என்றவரை வாழ்த்தியிட்டே ஏதலுட னேயுரைப்பாள்
பண்ணின் மொழிவிசயை பாங்குடனே யம்மானுர் !

இந்த விசேடமதை எங்கும்வெளிப் பண்ணுமல்
மைந்தரெனுஞ் சீவகர்க்கே வாகுடனே தானுரைத்து
என்னிடத்தில் சீவகரை ஏதலுட னிப்பொழுது
நன்னயமாய் நீரழைத்தே நன்மையுடன் வாருமென்றே
சொன்னுள்கா ணப்பொழுது தோழருட னம்மானுர் !

அந்நாளிற் தோழரெல்லாம் அப்படியே சம்மதித்து
தேவிவிசயை யாருடைய சீர்பாதந் தெண்டனிட்டு
காவலனுர் தோழரெல்லாம் கடுகிவிடை பெற்றவரும்
போனுர்கள் மத்யமெனும் பொங்கமுள்ள நாட்டருகில்
வானேரு லகிணையாம் வாகுபெறு பட்டணமும்
காத மரைவழியிற் காவலர்க்கே சேர்ந்தவரும்
ஏதலுடன் தோழரெல்லாம் இனிதிருந்தா ரம்மானுர் !

அங்கிருந்து தோழரெல்லாம் ஆலோசனை நினைப்பார்
பொங்கமுட னெல்லோரும் போம்பொழுது பட்டணத்தில்
ஆரெவரோ வென்றே அதிசயிப்பார் காணுமவர்
சேரவொண்ணு தென்றவர்கள் சேர்ந்துணர்ந்து கூறிடுவார்
ஒற்று ளொருவனைவிட் டோங்கியதோர் சீவகரும்
வித்தார மாயிருக்கும் விசேட மறிவமென்றே
போகவிட்டா ரப்பொழுது போதவொரு தூதனையே
வேகமுடன் தூதனுந்தான் மேவியவன் போம்பொழுது
அந்நகரில் அந்தரசன் ஆனைமதம் பட்டதுவும்
மன்னிவெளிப் பட்டதுதான் மாநகரில் வீதியெல்லாம்
சென்றுமத யானையதும் திரண்டசன மத்தனையும்

1 அடிபணிந்தே என்றுளது.

[1]பன்னியிடும் லூாட்டியெல்லாம் பண்டுமோ பாடுகைக்கு
மதயானை யின்பொருட்டால் மாநகரிற் சேனையெல்லாம்
சிதையாமல் வீட்டினுள்ளே சென்றிருந்தா ரம்மானை!

அந்த வயணமெல்லாம் அத்தூதன் தான்கேட்டே
சிந்தனைசெய் தோரிடத்தே சென்றிருந்த வேளையிலே
சீவகனா ரப்பொழுது தெருவீதி யுள்நடந்தே
காவலனு மோர்மறைவில் காதலுட னேயிருந்து
பாடினர்காண் ராகமொன்று பண்புடனே யம்மானை!

பாடியிடும் பாட்டையுந்தான் பண்புடனே கேட்டுமந்த
ஆனைமதந் தானிழந்தே அசைந்ததுவும் நிற்கையிலே
ஆனையின்மேற் சீவகரு [2]மார்க்கமுடன் தானேறி
இராசாவின் பக்கல் நடத்தினர்கா ணம்மானை!

தேசாதி பன்கண்டே சீவகரைக் கொண்டாடி
நாலு நகைதானும் நலமுடனே தான்கொடுக்கச்
சால வெகுமானம் தான்பெற்றா ரம்மானை!

அரசன்விடை பெற்றவரும் மார்க்கமுடன் தான்வரவே
புரசினங்க ளத்தனையும் புகழ்ந்தனர்கா ணம்மானை!

சீவகனா ரிப்படியே சென்றுவரும் வேளையிலே
சீவகரைத் தூதனுந்தான் தீர்க்கமுடன் தான்கண்டே
சோலை யிடங்குறுகித் தோழருடன் கூறலுமே
மாலை முடியானின் வீரமதைக் கேட்டவரும்
ஈரங் குளிர்ந்தே இருதோளும் பூரித்து
வீரமுள்ள சீவகர்மேல் வெகுபிரியங் கொண்டிருந்து
ஆலோசனை நினைந்தார் அனைவோரு மம்மானை!

மாலாகி இந்நகரில் மாட்டையெல்லாந் தான்வளைத்து
கள்ளரைப்போ லோட்டையிலே காவலனுந் தான்கடிந்து
வள்ளலெங்கள் சீவகரை வரவிடுவா ரப்பொழுது
கண்டே யவருடனே காதலுடன் பேசிடுவோம்

---

1 பன்றியிடும் லுட்டியெல்லாம் என்றுளது. லூாட்டி—துன்பம் தருவது. 2 ஆர்க்கம்—பெறுபேறு.

என்றே யவர்கருதி ஏதலுடன் அந்நகரில்
மாடுகளை சாய்க்கலுற்றார் வண்மையுட னம்மானை !

சூழமுடி மன்னவனும் துரந்தரனும் தான்கேட்டே
சதுரங்க சேனையெல்லாம் தானனுப்பப் போயவர்கள்
வாதுசெய்ய மாட்டாமல் வாடியவ ரோடியவர்
சீவகனார் கண்டே திடுக்கெனவே தானெழுந்து
காவலனுந் தேரின்மிசை கடுகியவர் ஏறிவந்தார்
வந்தவரைத் தோழரெல்லாம் வாகுடனே தான்கண்டு
சந்ததமுஞ் சீவகனார் தாமென்றே தாங்கருதி
எதிரோடி வந்தவர்கள் [1]ஏற்கவெள்ளை வீசியிட்டார்
சதிருடைய சீவகனார் தாங்கண்டே யம்மானை !

நம்முடைய தோழரென்றே நன்மையுடனேயறிந்து
செம்மையுடன் சென்றிடவே சீவகனார் முன்பாக
வந்தவர்கள் தோழரெல்லாம் வாகுடனே தெண்டனிட்டார்
சந்ததமுஞ் சீவகனார் சந்தோசமாய்ப்பார்த்து
சுகமோதா னுங்களுக்கு தோழர்மாரே என்றுரைத்து
உகமையுடன் தானுமிங்கே உற்றதுவும் மங்கையரை
வதுவைமணம் செய்ததுவும் வாகுடனே தானுரைத்தார்
புதுமையுள்ள தோழர்கள்போய் விசயையைக் கண்டதுவும்
இவ்வயண மெல்லாம் எடுத்துரைக்கச் சீவகனார்
[2]கவ்வை யறியாதார் கனக்கக் கிலேசமுற்றே
இருந்தந்த வேளையிலே இறைவன்மகன் தானும்வந்து
திருந்தியதோர் பட்டணத்தே சேரழைத்துப்
போம்பொழுது
மன்னவனார் தான்கண்டே வரிசையுடன் கேட்கலுற்றார்
இன்னபடி சொல்லுமென்றார் யார்காண் இவர்களுந்தான் ?
கேட்டவுடன் சீவகரும் கீர்த்தியுடன் தானுரைப்பார்
நாட்டமுடன் நம்முடைய நற்றோழ ரென்றுசொல்ல
சந்தோச மாயரசன் தானுகந்தா ரம்மானை !

வந்தார்காண் சீவகரும் வாகுடைய தோழருடன்
செங்கமல மாமென்னும் திருக்கனக மாலையிட

---

1 சமாதானக்கொடி (வெள்ளை) காட்டுதல். 2 காரியம்.

சிங்கார மாமனையில் செந்திருவார் சேதியெல்லாம்
எந்தோழ மாரிவர்கள் என்றே யியம்பியிட்டே
சந்தோச மாயவர்க்கே சமையல் விருந்துசெய்தே
போசனம்நெய் பாலுடனே பொருந்தவேதான் செய்தபின்பு
மதனியெனுங் கனகமாலை மனமகிழ்ந்து தான்சொல்வாள்
[1]மாடு திருட வந்த மைத்துனரோ வென்றுசொல்லி
யேசி மனமகிழ்ந்து எல்லோருந் தானிருப்ப
வாச மருளியேதான் மகிழ்ந்திருந்தா ரம்மானை!

அவ்வளவிற் சீவகனார் இராசனிடம் சென்றவரும்
செவ்வையுடன் தன்பிறப்பைத் தீர்க்கமாய் ஓதியிட்டு
வேந்தனிட பக்கலிலே விடைபெற்றே சீவகரும்
சேர்ந்துபுறப் பட்டார்காண் திருத்தோழர் மாருடனே
மன்னவனு ரப்பொழுதே மார்க்கமுடன் தான்போகி
இன்னபடி மாதா எழில்விசயை பக்கலுக்கே
நாடிப் புறப்பட்டார் நன்மையுட னம்மானை!

ஓடமலர்க் கண்ணுளாம் ஒண்டொடியாள் தன்னிடத்தில்
தாபசப் பள்ளியிலே தானொருத்தி தையலவள்
சோபனமாய் ஓரிரவில் துய்யகனைக் கண்டவளும்
விசயமகா தேவியுடன் விளம்பிடுவா ளந்நேரம்
இசையுடைய சீவகரும் எழிற்றோழ மாருடனே
கூடியவ [2]ரிங்குவந்து கோலமுட னுன்னருகில்
நாடிமிகச் சீவகனார் நன்மையுட னேமகிழ்ந்து
வந்திருக்கக் கண்டேனென்று வாணுதலாள் ஓதலுமே
சிந்தை யகமகிழ்ந்து தேவியருந் தானிருக்க
அந்தத் தருவாயில் அன்புடைய சீவகரும்
வந்தார்காண் தோழருடன் வாகுடனே யம்மானை!

பதுமுகனை முன்னனுப்பப் பாங்குடனே சென்றவனும்
மதிமுகத்தி னுள்விசயை மகாதேவி பக்கல்வந்து
வணங்கியவர் சீர்பாதம் வாகுடனே தெண்டனிட்டு

---

1 இதன் எதுகை ஒரு வரி விடுபட்டுளது போலும். 2 ரிங்கு வந்த என்றுளது.

மணங்கமழுஞ் சீவகனுர் வந்தனர்கா ணென்றுசொல்ல
எங்கேவந்தா ரென்றவளும் எழுந்திருந்து பார்ப்பளவில்
துங்கமுடன் சீவகனுர் துணுக்கெனவே ஓடிவந்து
தோழர்மார் தங்களுடன் சூழ்ந்துவரு மப்பொழுது
வாழும்மா தாவினிட மலர்ப்பா தந் தெண்டனிட்டார்
தெண்டனிட்ட சீவகரை செங்கையுற வேதழுவி
கண்டுமொழிச் சீவகரைக் காதலுட னேயணைத்தாள்
அன்பான சீவகரும் அப்பொழுதே தானுரைப்பார்
இன்பமுட னெந்தனைநீர் ஈன்றதாய் ஆமாகில்
சந்தேகந் தீரவென்மேல் தாங்கிமுலைப் பால்சொரிய
அந்தாத ரத்துடனே ஆகவென்று ரம்மானை !

அப்பொழுது தான்விசயை அன்னையுட மாமுலைகள்
செப்பமுட னேசுரந்து சீவகர்மீ தேசொரிந்தே
ஆருய் வழிந்ததனை அங்கிருந்த தோழருந்தான்
வீருன சீவகரும் விந்தையுட னேபார்த்து
கண்டு மதிசயத்தைக் கவலையெல்லாம் நீங்கியவர்
கொண்டனர்காண் சந்தோசம் கொற்றவர்கள் எல்லோரும்
நாட்டியிடும் எல்லோர்க்கும் நல்விருந்து தான்சமைத்து
கூடி யினிதிருந்தார் கோலமுட னம்மானை !
விசயமகா தேவியரும் விருப்பமுடன் போசனங்கள்
பசிதீரப் பண்ணுவித்தார் பாங்குடனே யம்மானை !

ஆவலுடன் சீவகனுர் அன்புளதா யாகியதோர்
தேவிவிச யாருடனே சென்றிருந்தே யேகாந்தம்
முன்னுள் நடந்ததெல்லாம் முருகுழலாள் தன்மகற்குச்
சொன்னுள்காண் மற்றுமந்த தோகையருந் தானுரைப்பாள்
என்னுடைய கோத்திரனும் என்தமைய னுர்பேரும்
வனனெடுங் கோவிந்த மகராசன் காணுமிவன்
விசய மகாநகரம் என்னுமவன் பட்டணம்போய்
இசையிலா தும்முடைய எழில்திறமை கண்டளவில்
[1]பார்க்கரனைக் கண்டதொரு பங்கயம்போ லேமலர்ந்து
ஆர்க்கமுட னேபிரிய மாயிடுவா ரென்றசொல்லை

1 பாஸ்கரன்--சூரியன்.

சீவகருங் கேட்டவுடன் திறமையுட னப்பொழுது
ஆவலுட னன்னையரை அங்கனுப்ப வேணுமென்றே
மாமனெனுங் கோவிந்த மகராசன் பக்கலிலே
தாமதமில் லாமலேதான் தாயாரைத் தானனுப்பி
தம்முடைய தோழருடன் தானுமொன்றாய்க் கூடியேதான்
[1]தெம்புடனே தானடந்தார் தோதயமா யம்மானை!

காடு மலைக்குன்றும் கடியவ னந்திரமும்
நீடியிடு மாறுகளும் [2]நீண்டதட வாவிகளும்
கடுகியவர் தானடந்து காதலுட னப்பொழுது
முடுகிநடந் திட்டார்காண் மோகமுட னம்மானை!

இராச மகாபுரமாம் லட்சணஞ்சேர் பட்டணத்து
ஆசையுடன் வந்துமவர் அந்நகரின் நற்புறத்தே
[3]மேயவழி வந்தவர்கள் வேகமுட னேயிறங்கி
அறுசுவையி னல்வகையாம் அமுதுசமைத் தேயவர்கள்
திறமையுள்ள தோழருடன் சீவகரும் அங்கிருந்தே
போசனங்கள் செய்துமவர் புண்ணியனார் வீற்றிருந்து
நேசமுடன் உற்சாகம் நீடிய தோர்களிப்பு
சந்தோஷ மாயவர்கள் தானிருந்தா ரம்மானை!

செந்தா மரைமுகத்தார் செய்யதொரு வீணைமுதல்
[4]செய்யதொரு வீணைமுதல் தேகம் புளகிதமாய்
சரமண் டலமுடனே தானெடுத்து சம்பிரமுடன்
பரிவுடனே சங்கீதம் பாடியவர் தாமிருக்க
பார்க்கரனு மத்தகிரிப் பருவதம்போய்ச் சேர்ந்தபின்பு
ஆரமுடன் காரிருளும் ஆனதுகா ணம்மானை!

அன்றிரவு மக்காவில் அன்புடனே எல்லோரும்
நன்றியிடும் பஞ்சணைமேல் நாயகருங் கண்துயில
சூரியனு முதயகிரி தோன்றியிட்ட பிற்பாடு
வீரியமாய் எல்லோரும் விழித்தே எழுந்திருந்து

---

1 சொம்புடனே என்றுளது. 2 நீண்டநட என்றுளது. 3 இங்கு வரிவிடுபட்டுளது போலும். 4 வரி விடுபட்டுளது போலும்.

தந்தசுத்தி பண்ணியவர் திருமுகங்கள் தான் துலக்கி
சிந்தை யகமகிழ்ந்து சினரடியைத் தான்தொழுது
தோழமார் தங்களையும் சோலையிடத் தேயிருத்தி
வாழும்நல்ல ராசபுரம் வண்மையெல்லாங் காணுகைக்கு
ஏகாந்த மாகியேதான் எழில்மருவுஞ் சீவகனார்
வாகாகி வந்தனர்காண் வாஞ்சையுட னம்மானை!

இராசபுர பட்டணஞ்சேர் நாகரீக வீதியிலே
ஆசையுடன் சீவகரும் அங்குவரும் போதளவில்
அந்நகரில் வீறியதோர் [1]ராசநக ரந்தனென்னும்
பன்னியிடும் நாமமதால் பார்வணிக னொருவனுண்டு
அந்த[2]சத்தி ரந்தனுக்கோர் ஆணழகி தான்கமலை
இந்த இருவருக்கோர் இலங்கியிடும் பெண்விமலை
பெண்பிறந்த நாள்முதலாய் பெருஞ்சரக்கு உள்ளதெல்லாம்
நண்பில்விலை யாகாமல் நியாயமின்றி யேயிருக்க
என்னவிது காரணமோ வென்றிருந்து செட்டியரும்
நன்னெறிசேர் சோதிடரை நன்மையுடன் கேட்கலுமே
சோதிடருஞ் சாத்திரத்தால் சொல்லலுற்று ரம்மானை!

மாதரெனும் உன்மகளார் வாழ்விமலை யார்தமக்கே
மணவாள னுன்கடையில் வந்திருந்தா ராமாகில்
குணமுடனே உன்சரக்குங் கொண்டிடுவா ரென்றுசொல்ல
அந்த வசனமொழி அன்புடனே தான்கேட்டு
சிந்தை கவலையுடன் செட்டியருந் தானிருக்க
விமலையரும் பக்குவமாய் மெல்லியரும் வீற்றிருக்க
கமலமுக நாயகர்கள் கடைதனிலே வந்தாலும்
சரக்குவிலை போகாமல் தானிருந்த தன்மையினால்
மருக்குழலி மங்கைநல்லாள் வாழ்விமலை யாருமிப்போ
குமரியான தன்மையினால் கோல[3]சக்கு ரந்தனுக்கு
அமரவொண்ணா வியாகூலம் அடைந்ததுகா ணம்மானை!

இந்தப் படியாகி இருக்குமந்த நாளையிலே
அந்தமுடன் சீவகரும் அத்தெருவே வந்தனர்காண்

1, & 2 சாகரதத்தன்.

பந்துமுலை யாள்விமலை பைங்கொடியுந் தோழியுடன்
செந்திருவும் உப்பரிகை சென்றேறிப் பந்தடித்தாள்
விமலையார் தோழியுடன் விளையாடிப் பந்தடிக்க
ரமணீய மாய்ப்பந்தும் நழுவியது மேலெழும்பி
சீவகர்முன் போய்விழவே தீர்க்கமுடன் தான்கண்டு
ஆவலுடன் பார்த்திடுவார் ஆணழக ரம்மானை!

பந்தடைஞ்சு போகையிலே பைங்கொடியுந் தானேடி
இந்துநுத லாளுமப்போ எட்டியே பார்ப்பளவில்
கண்டந்த சீவகனர் காரிழையார் தன்முகத்தை
கொண்டுமவர் மாமோகங் கோதையர்மே லாசையுடன்
சந்ததமு மப்புறம்போய்ச் சேராமற் சீவகரும்
அந்தசக்க ரந்தனுட [1]அங்காடியில் வந்திருந்தார்.
வந்திருந்த மாத்திரத்தில் [2]வன்சரக்கு உள்ளதெல்லாம்
பந்தமுட னங்காடியில் பலசரக்கு மப்பொழுது
தேசாந் திரியொருவன் செட்டிமகன் வந்துகண்டு
கூசாமற் கைதட்டிக் கொண்டனன்கா ணம்மானை!

வெகுசரக்கு மந்நேரம் விலைப்பட்ட காரணத்தால்
வெகுதனங்கள் செட்டியர்க்கும் வேணும்படி தான்குவிய
கண்டந்த செட்டியரும் காதலுடன் சீவகனர்
புண்டரிக மாமுகத்தைப் போதவே தான்பார்த்து
இந்த மகாபுருசன் எழுந்தருளி என்கடையில்
வந்திருந்த தன்மையினல் வான்சரக்கும் விற்றதென்றே
சந்தோச மாகியேதான் சாலமன மேமகிழ்ந்து
பந்து முலைமடவார் பாவைமக ளார்விமலை
கன்னியெனு மங்கையர்க்கே காதல்மண வாளனிவன்
தன்னவனே தப்பாது தான்மருக னென்றுகந்து
சீவகரைத் தன்மனைக்கே சேரழைத்துப் போயவரும்
ஆவலுட னுதனத்தில் அமைத்தனர்கா ணம்மானை!

---

1 அங்கடியில் என்றுளது. அங்கடி என்பது தெலுங்குச் சொல். கடை, அங்காடி—தமிழ். 2 வான் சரக்கு எனல் பொருந்தும்.

அந்தமக ளார்விமலே யாரையு மலங்கரித்தே
சந்ததமுஞ் சீவகர்க்கே சாருஞ்சுப லக்கினத்தில்
[1]தேற்றமுட னேவதுவை செய்தனர்கா ணம்மானுர் !

முத்துமுலே யார்விமலே மோககமுள்ள வஞ்சியுடன்
சித்திரம்போற் சீவகரும் சேர்ந்தனர்கா ணம்மானுர் !

மேகக் குழல்புரள மேகலைக ளோசையிட
போகக் கலவியினல் புளகமுலே பொங்கியிட
நூபுரங்கள் ஆர்ப்பொலிப்ப நுண்ணிடை துவண்டாட
கோபமுடன் கண்சிவப்பக் [2]கூர்நகங்கள் பட்டுருவ
சிந்தூரப் பொட்டிலங்க செங்கைவளே தானெலிப்ப
மந்தாரத் தோட்டையும் வல்லியுட பொற்கொடிபோல்
மருவியவர் தேனூறல் வரிசையுட ணுண்டுபின்னும்
பெருகியதோர் பந்தனங்கள் பேதமுடன் தான்கூடி
காமனூல் மாருமல் காரிழையார் போகமெல்லாம்
சாமியெனும் சீவகனுர் சம்பிரமுடன் தான்கூடி
இருந்துவிளே யாடியிட்டார் ஏதலுட னம்மானுர் !

பரிந்திருக்கும் வேளேயிலே பார்க்கரனுந் தானுதித்தான்
சீவகரும் மாமனுக்கே தேறவே தாமுரைப்பார்
ஆவலுடன் என்தோழர் அக்காவில் விற்றிருப்பார்
கண்டவர்கள் தன்னுடனே காதலித்து வாரேனென்று
கொண்டமனக் கோலமுடன் கோமானுங் காவில்வந்தான்
பூந்திருவாள் செங்கமலப் பொற்கொடியார் பூங்கிளியாம்
ஏந்திழை யார்விமலே இலம்பமுற்று மம்மானுர் !

அம்மானு ரம்மானுர் ஆடியசீ ரம்மானுர் !
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானுர் !!

## 8-வது விமலேயாரிலம்பகம் முற்றும்.

---

1 வரி விடுபட்டுளது போலும்.　　2 கூர நீங்கள் என்றுளது.

## 9—வது

# சுரமஞ்சரியார் இலம்பகம்

### கதைச் சுருக்கம்

சீவகன் மணக்கோலத்துடன் வரக்கண்ட மற்றவர்கள் விமலையை மணமுடித்த செய்தியை யறிந்து மகிழ்ந்தனர். அவர்கள் சீவகனை நோக்கி, "நீயிர் விமலையை மணமுடித்தது பெரிதல்ல; இவ்வூர் வணிகன் குபேரதத்தன் மகள் சுரமஞ்சரி என்பாள், ஆண் ஒருவன் தன் வீட்டிற்கு வந்தாலும், வந்ததைக் கேட்டாலும் உயிர்விடும் உறுதிகொண்டு கன்னிமாடத்திருக்கின்றாள். அவளை நீர் மணமுடித்தால், உனக்கு **'மதன திலகன்'** என்று பெயரிடுவோம்" என்று உறுதி கூறினர்.

சீவகனும் அவ்வாறே, அவளைக் காமதேவன் கோயிலில் மணமுடிப்பதாகச் சூளுரைத்தான். புத்திசேனனைக் காமதேவன் பின் கரந்திருக்கச்செய்து, தான் கிழவேதியர் உருக் கொண்டு, சுரமஞ்சரியின் இல்லத்தை அடைந்தான். காவற் பெண்டுகள் தடுத்தனர். அவர்களிடம் வாய்குழறப் பாலடிசில் கேட்டான். பழிக்கஞ்சிய பெண்கள் உள்ளே விடுத்தனர்.

இரண்டாம் வாசலின் பெண்கள் சுரமஞ்சரியிடம்கூற, அவள் வந்து வேதியரை வினவ, வேதியர், "நான் குமரியாடச் செல்கின்றேன். உன் கையில் பாலன்னம் உண்டால் நான் முதுமை நீங்கி இளமையாவேன்" என்றதும், யாவரும் நகைத்து, உணவிட்டனர். உண்டபின் தலைநோகுதென்று, தனித்துறக்கங்கொண்டான். தோழியர் அவரைவிட்டுச் சென்றனர். இரவு வந்தது. சுரமஞ்சரி முதலானோர் வீணை வாசித்தனர். வேதியன் அதற்குத்தக பாடினான்.

அதிசயித்த எல்லோரும் ஓடிவந்து வேதியனைக்காண அவன் குறட்டை விட்டுத் தூங்கினன்போலிருந்தான். பின், சென்று மறுபடியும் வீணையிசைத்தனர். மறுபடியும் பாடினன். ஓடிவந்து பாடியது இவனேயென்றறிந்து, மீண்டும் பாடவேண்டினர். "நான் காமகோட்டத்தில்தான் பாடுவேன்" என்றுகூற தோழி முதலானோருடன் சுரமஞ்சரி வீணையை எடுத்துக்கொண்டு காமகோட்டம் அடைந்தாள்.

எல்லோரும் கோயில்முன்னே நிற்க சுரமஞ்சரி காமதேவன் முன்னே சென்று நின்று, "சூழுரைத்தபடி சீவகனார் என்காலில் விழுந்து என்னை மணப்பாரோ?" என்று கேட்க, மறைந்திருந்த புத்திசேனன், பல்லி சொல்வதைப்போல் (ஒலி) கூறினன். கேட்டு மகிழ்ந்த சுரமஞ்சரி அங்கிருப்ப, சீவகன் தன் உருவோடு அங்கு வரவும், அவள் ஓடி, நாணி, ஒரு மூலையில் நிற்க, அவன் அவள் காலைப்பிடித்து அவள் சபதத்தை நிறைவேற்றினன். ஒரு திரைகட்டி சுகம் கிட்டினர்.

தோழியர்கள் பெற்றோருக்குரைக்க, நல்ல நாளில் திருமணம் நிறைவுற்றது. சீவகனும் சுரமஞ்சரியும் இன்புற்றிருந்தனர்.

**9-வது**

**சுரமஞ்சரியா ரிலம்பகக் கதைச் சுருக்கம்**

**முற்றும்.**

# 9—வது
# சுரமஞ்சரியா ரிலம்பகம்

அம்மானை யம்மானை ஆடியசீ ரம்மானை!
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை!!

திருமருவுஞ் சீவகனார் செய்யசுர மஞ்சரியை
மருவியவர் மாலையிட்ட வளர்பாடி யாடிடுவோம்.
வந்ததொரு சீவகர்க்கே வாகுடைய தோழரெல்லாம்
வந்தனைசெய் தேத்தியவர் வாஞ்சையுடன் கேட்கலுற்றார்.
தேவரீர் தானுமிப்போ திருவதுவை யானவர்போல்
ஆவலுட னெங்களுக்கே அறியவுரை செய்யுமென்ன
ஏதலுடன் சீவகனார் எடுத்துரைப்பா ரம்மானை!

மாதுடைய நாமமதும் வாழ்விமலை யார்காணும்
வீடுபெற்ற மாபுருசர் விமலையிடை சீர்வடிவை
நாடியவர் காண்டலுமே ராகமுட னேமயங்கி
போவார்கள் வீழ்ந்திடுவார் போதரவா யம்மானை!

வேயிருக்குந் தோளியவள் விமலையென்றே சொல்லலுமே
கேட்டவுடன் தோழருந்தான் கீர்த்தியுட னேயுரைப்பார்.
தேட்டமுட னெங்களைசேர் தேர்மன்னன் ஆகையினல்
புக்க விடந்தோறும் புணர்ந்திட்டே கன்னியரை
சிக்கெனவே கலியாணம் செய்துவந்தீர் காணுமிது
ஆச்சரியந் தானுமல்ல ஆணழகா கேட்டருளீர்
கூச்சமில்லாத் தாய்தகப்பன் குமரிப்பெண் ணனவரை
பத்துவய தானவன்றே பாவையரைக் கொண்டுசென்றே
குற்றமுடன் ரூபமில்லாக் குரங்கனையா ரானவர்க்கே
பெற்றவர்க ளீந்திடுவார் பெண்தகைமை காணுமிது
மெத்த வதிசயமோ வென்றுமவர் தானுரைப்பார்
இந்தநகர் தன்னிலேயோர் ஏற்றவணி கன்னொருவன்
சந்தத மாயவன்பேர் தானுரைப்பா னம்மானை!

குபேர தத்தனென்னுங் கூர்வணிகன் தன்மனையாள்
சுபாசனங்கள் போற்றியிடும் சாரும்விசு மதியென்பாள்
பெற்றெடுத்த பொன்கொடியார் பேருஞ்சுர மஞ்சரியார்
மத்த கெசமானோர் மதிக்கிணையா மாமுகத்தாள்
கன்னிகா மாடமதிற் காரிழையார் விற்றிருந்து
நன்னயமாய்த் தன்மனையில் நாடியே ஓர்புருடர்
வந்தாலும் நாமமதை வாக்குரைக்கக் கேட்டிடினும்
சந்தேக மில்லாமல் சாகவே நின்றவளும்
பொல்லாப் பிரதிக்ஞையுடன் பொருந்திசுர மஞ்சரியும்
உல்லாச மாயிருந்த ஒண்டொடியை நீருமிப்போ
கல்யாணம் பண்ணியவள் கனசபதம் நீர்விடுத்தால்
எல்லோருங் கூடியுமக் கேற்கவொரு பேரிடுவோம்
[1]மதன திலதனென்றே வாஞ்சையுட னேயழைக்க
இதமாய்க் கடவோமென்றே ஏதலுடன் புத்திசேனன்
தோழன்பிர திக்ஞையுடன் சொல்லிய தவ்வசனம்
வாருஞ்சீ வகனும் வாஞ்சையுடன் கேட்டவரும்
சொல்லுவார் தாமுமொரு சூட்சியுட னேபிரதிக்ஞை
மல்லுத் திரள்தோளாய் வாஞ்சையில்லாப் பெண்கொடியை
பின்புறத்தி லோர்கூந்தல் பிறந்தமுடி யிட்டவனும்
அன்புறவே நேராகச் சென்றவளைச் சேர்வேனென்று
காமரசன் சந்நிதியில் காதலியைச் சேர்வேனென்று
நேமமுடன் சொல்லியவர் நிச்சயித்தே தோழனையும்
தாம முடியானுந் தானழைத்துக் கொண்டுவந்து
காமரசன் பின்புறத்தே காதலுடன் தானிருத்தி
சீவகரு மோர்வடிவுச் செய்தனர்கா ணம்மானை !

ஆவலுட னேவிருத்த ஆரியனு யப்பொழுது
முன்னூல் பவித்திரமும் மோதமுழ வேட்டியுடன்
மன்னியொரு கைதனிலே வாகுடனே தண்டூன்றி
நடக்கையிலே தள்ளாடி நற்செவிடர் போல்நடந்து
இடக்கையிலோர் பஞ்சாங்கம் இன்பமுடன் தான்பிடித்து
[2]வெண்ணரையின் மேனியனாய் விற்கூனு மாய்வளைந்து

---

1 'காமதிலகன்' என்று சீவகசிந்தாமணியில் உள்ளது.

2 வென்றரையின் என்றுளது.

கண்ணொளியில் லாதவர்போல் கனக்கவே தான்மயங்கி
நொந்ததொரு வேதியனும் நூன்மறையுந் தான்வசனம்
சந்ததமும் வாய்தவறி தம்புரைகள் தான்குளறி
சுரமுஞ் சரியிடத்தே துன்னியதோர் மோகமதால்
அருமந்த சீவகனார் அப்பொழுதே பேயுருவாய்
சீவகனா ரிவ்வடிவாய் சென்றனர்கா ணம்மானை !

தானே தலைவாசல் காக்குமந்த தையலர்கள்
பார்த்துமந்தப் பார்ப்பானை பைங்கொடியார்
செப்பலுற்றார்.

ஏற்றமுட [1]னெங்குவந்தீர் ஏராதீர் இப்பொழுது
அப்புறம்போ மென்றவர்கள் ஆரிழையார் சொல்லலுமே
செப்பமுள்ள சீவகனார் செம்மையுட னேயுரைப்பார்.
பாலடிசில் வேணுமென்றே பட்சமுடன் கேட்கலுமே
கோலமுடன் கேட்டுமந்த கொம்பனையார் கூறிடுவார்.
ஒருவர்க் கொருவர்முகம் ஓங்கியவர் தான்பார்த்து
வருமவரைத் தள்ளிவிட்டால் வந்திடுந்தான் தோசமென்றே
உரக்க ஒருவசனம் உற்றுரைத்தோ மாமாகில்
இவருடைய மேனியெல்லாம் எழில்திரைஞ்சு போனதுவும்
அங்கம் நடுக்குதலும் அவர்நயனம் மத்திமமும்
இங்கேயொன்றை நாமுரைத்தால் இவருமொன்றே
செப்புதலும்

தண்டின்மே லாதரவாய் செழுமறையோன் நிற்பதுவும்
மண்டையின்மேல் பஞ்சாங்கம் வைத்திருந்த தன்வடிவம்
மேலிளைப்பும் வேட்டியுட வேடிக்கை யும்முருவும்
இறக்கு மிவருயிர்தா னென்றே யவர்கருதி
இவருடைய வெண்ணரையும் இவரங்கப் புள்ளியதும்
கால்நடுக்கும் வேதியனார் அகன்றதடு மாற்றமுடன்
சொல்தவறிப் போவதுவும் சோர்ந்தநடை மேல்மூச்சும்
குற்றமுள்ள கூன்முதுகும் குவளைவிழிப் பூளையதும்
இவ்வடிவாய் நொந்துமிக இங்குவந்த வேதியனை
செவ்வையுடன் தள்ளிவிட்டால் சீமைக்கும் பழிநமக்கே
இன்னமொரு வாசலிலே ஏந்திழையார் தான்தகைந்தால்

---

1 னிங்குவந்தீர் என்றுளது.

அன்னணமே நாம்தகைவோ மென்றேயவர் சம்மதித்து
போமென்றே வேதியரை பொற்கொடியார் தாம்விடுத்தார்
ஆமென்றே சம்மதித்தார் அன்புடனே யம்மானை!

அவ்வாசல் தான்கடந்தே அப்புறம் போம்பொழுது
செவ்வாய் குழறியடி தெற்றியிட்டே நின்றெழுந்து
அவத்தை மிகவாகி ஆறுநா ழிகையளவும்
கவுத்துகமாம் புனீசுவரனும் கண்டுரெண்டாம் வாசலிலே
ஆசூசூ வென்றே அடைந்தனர்கா ணம்மானை!

கூசாமல் வாசல் காக்குமந்த தோகையர்கள்
ஆயுதத் தோடவர்கள் அம்மாத ரோடிவந்து
சீயமென்றே யார்ப்பரித்துச் சென்றிடுவோ மாமாகில்
கனக்கப் பழிசுமக்கும் என்றே கனங்குழையார்
தனக்குள்ளே யஞ்சிநின்றார் தார்குழலா ரம்மானை!

விருத்தப் பிராமணனும் வீறியகைத் தண்டதன்மேல்
நிறுத்திப் பிராணமதை நின்றபடி தான்கண்டே
ஆதரவாய்க் கூறிடுவார் வாக்குடனே யப்பொழுது
ஆதரவொன் றில்லாத அகதிபர தேசியனும்
தீண்டியிட்டால் நந்தமக்கே சேரும்பழி பாவமென்றே
ஆண்டிபர தேசியைப்போ லாவியில்லாப் பூசுரனை
கடினமுட னேயுரைத்தால் கனதோச மாகுமென்றே
துடியிடைசேர் மங்கைநல்லாள் சொல்லினர்கா ணம்மானை!

நம்முடைய நாயகியார் நங்கைசுர மஞ்சரிக்கே
செம்மையுட னிவ்வசனம் செப்பிடுவோ மென்றவர்கள்
காவல்பெரி தேயுடைய காரிளழயா ரப்பொழுது
ஆவலுடன் வந்தவர்கள் அந்தசுர மஞ்சரிக்கே
சொல்லுவா ரப்பொழுதே தோகையரு மம்மானை!

பல்லினிது ஒன்றில்லா பழுத்தகிழ மோர்பார்ப்பான்
பாலடிசில் வேணுமென்றே பட்சமுடன் கேட்டவனும்
கோலமுடன் கன்னியா குமரிதீர்த்த மாடவென்று
தாகமிக வாகியேதான் சந்ததமும் வந்தேனென்று

மேகமுடன் பூசுரனும் மொழிந்தமொழி தான்கேட்டே
வேண்டியதெல் லாந்தருவோம் என்றாலும் போகாமல்
நீண்டிஞற் சாவேனென்று தேன்மொழியே நிற்கலுற்றார்.
இந்த வயணமெல்லாம் எந்தம்பெரு மாட்டியரே
உந்தனுக்கே நானுரைக்க உற்றேமெனக்கேட்டே
சுரமஞ் சரிதானும் துணுக்கெனவே தானெழுந்து
மருவியதோர் வாசலுக்கே வந்தனள்கா ணம்மானை!

வேதியனைக் கண்டவளும் வேண்டியது முந்தனுக்கு
ஏதென்றே கேட்கலுற்றாள் ஏலங் கருங்குழலாள்
மறையோ னுரைத்திடுவான் மங்கைசுர மஞ்சரிக்கே
குறையில்லாக் கன்னியா குமரியாட நான்வந்தேன்
பாலடிசி லும்முடைய [1]பங்கயக்கை யாலெமக்கு
சாலவே நீயளிக்கத் தையலரே நானுமிப்போ
உண்ணப் பிரியமுண்டு ஒண்டொடியே கேட்டருளீர்
வண்ணமுட னும்முடைகை வாசியன்னம் நானுமுண்டால்
என்னுடைய மூப்புமிந்த இளைப்பெல்லாந் தீருமென்றே
சொன்னதொரு பூசுரனைச் சுரமஞ்சரி தான்பார்த்து
கைத்தலத் தைக்கொட்டி கலகலென்றே தானகைக்க
அத்தனைபே ரும்நகைத்தார் ஆர்க்கமுட னப்போது
சுரமஞ் சரியுரைப்பாள் தோழியுட னம்மானை!

அருமந்த வேதியரும் அரும்பசியாற் பித்தமுடன்
வயணமொன்று மில்லாமல் வருத்தமுடன் பேத்துகிறார்
நயமுடனே யிவர்பசியை நன்மையுட னாற்றுதற்கு
போசனமும் பாலடிசில் போட்டிவரைப் போகனுப்பி
வாசமலர்க் கொம்பனையார் மறுவசனஞ் சொல்லுமென்றே
சுரமஞ் சரியாரும் சொன்னாள்கா ணம்மானை!

மருவியிடும் வேதியரை மங்கையர்கள் தானழைத்து
வந்தவரும் மாளிகையில் மஞ்சள்நீ ராட்டிவைத்து
சந்ததமும் பட்டாடை தானவர்க்கே நல்கியிட்டு
கந்தமொடு குங்குமமும் கிளிமொழியார் தான்கொடுத்து

---

1 பைங்கையக்கையால் என்றுளது.

அந்தமுடன் ஆசனத்தில் அருமறையோர் தனையிருத்தி
[1]பொத்தளிகைக் கிண்ணமெல்லாம் போதவே தான்பரப்பி
மெத்தருசி பாலடிசில் வேண்டியபகச் சாயமுடன்
சர்க்கரையும் முப்பழமும் சகலபதார்த் தங்களுடன்
பொற்கொடியாள் தந்திடவே பூசுரனு முண்டபின்பு
போசனங்கள் செய்தவனும் பொடியதனுற் கைதுமிறி
வாச யிலைச்சுருளும் வண்ணமுள்ள நற்பிளவும்
வேதியற்குத் தான் [2]வேலனை யகண்டமட வார்கொடுத்தார்
ஆதரவி னுல்மறையோர் அங்கிருந்தா ரம்மானுர் !

தோகையர்கள் எல்லோரும் சூழ்ந்துகொண்டு வேதியனை
பாகனைய சொல்மடவார் பாங்கியர்கள் கேட்கலுற்ருர்.
உம்மாலே வல்லதுநீர் உரையுமென்றே கேட்டவர்க்கு
நம்மா லறிந்தவகை நால்வேத மல்லாமல்
பின்னையொரு வேறுகவி பேரறியே னென்றுசொல்லி
என்னையிவ ரிப்பொழுது ஏகுமென்பா ரென்றென்றே
வேதியனும் பார்த்தவரை விஷமங்கள் பேசியேதான்
ஏதலுட னேதலைதான் எந்தனுக்கே நோகுதென்று
நித்திரை பண்ணுவார்போல் நேசமுடன் கண்மூடி
மெத்தையின்மேல் சாய்ந்தவரும் மேலுறக்கங் கொண்டனர்காண்
அவ்விடத்தை விட்டகன்ருர் ஆரிழையா ரம்மானுர் !

செவ்வையுடன் பார்க்கரன்தான் சேர்ந்தனர்கா ணத்தமனம்
அப்பொழுது பாங்கியர்கள் அரண்மனைக் கேகலுமே
செப்பமுட னேற்றிவைத்தார் திருவிளக்குந் தேன்மொழியார்
எங்கும்விளக் கேற்றியிட்டே ஏந்திழைமா ரெல்லோரும்
துங்கமுடன் கூடியவர் சோபனமாய்த் தானிருந்து
வீணையவர் பாடினர்காண் வேகமுட னம்மானுர் !

ஆணழகி யானசுர மஞ்சரியார் கேட்பதற்கு
பாடியிடும் வீணையிசை பார்ப்பா னதுகேட்டு

---

1 பொன்தளிகைக்கிண்ணம்—பொற்கலம் 2 – ?.

நாடியதோர் தங்கருமம் நாம்முடிக்க வேணுமென்று
பாடினர்காண் சீவகனார் பண்ணெடுத்தே யம்மானை!

நீடியிடும் ராகமதை நேரிழையார் தான்கேட்டு
நம்முடைய பக்கலிந்த ராகம்வரக் காரியமேன்
எம்மிடத்தி லில்லையென்றே ஏதலுட னேயெழுந்து
நித்திரை யஞ்சுரன்பால் நேரிழையா ரோடிவந்து
பத்தியுடன் பார்ப்பளவில் பார்ப்பானு மப்பொழுது
குரட்டையுடன் தூங்கிடுவான் கோலமுட னம்மானை!

[1]சித்தரையவர் கண்டுவந்தே சேயிழையா ரெல்லோரும்
கூடி யிருந்தார்கள் கோலமுட னப்பொழுது
பாடியிட்டான் மற்றுமொரு பண்ணெடுத் தேயவரும்
கீதத்தி னோசைதனைக் கேட்டுசுர மஞ்சரியும்
தாதியர்கள் கைச்சூழத் தையலரு மோடிவந்து
விருத்த கிழவனிவன் விதித்தபடி கீதமென்றே
குறித்து மவனிடத்தே கோலமுடன் வந்தவரை
இன்னொருகாற் சொல்லுமென்றே எங்கள்சுர மஞ்சரியார்
அன்னநடை யாளவரை ஆதரவாய்க் கேட்கலுமே
சொல்லுவா ரப்பொழுது தோகையர்க்கே யம்மானை!

நல்லதொரு சீவகரும் நாணயமாய்ப் பார்த்தவரை
எந்தனுக்கு வித்தைதந்தார் எழிலுடைய காமரசன்
அந்தரசன் கோயிலிலே அவருடைய சந்நிதியில்
ஏகியே நானுரைப்பேன் என்றவருஞ் செப்பலுமே
பாகனைய சொல்மடவார் பாங்கிசுர மஞ்சரியும்
எந்தடவு மிவ்வீணை ஏதலுடன் கற்கவென்றே
சந்ததமுங் காமரசன் சந்நிதிக்கு வாரோமென்று
சம்மதியாஞ் சீவகரும் தான்தோழி மாருடனே
செம்மைசுர மஞ்சரியார் சேயிழையு மப்பொழுது
எல்லோருங் கூடியேதான் எழிலுடைய காமரசன்
வில்லாளன் கோவில்வந்து விட்டனர்கா ணம்மானை!

---

1 திற்றறை என்றுளது.

காமரசன் கோயில்முன்னே காளையெனுஞ் சீவகரும்
தாமுமங்கே நிற்கலுமே தையல்சுர மஞ்சரியும்
கோயிலுள் ளேபுகுந்து கோதையருஞ் செப்பிடுவார்
ஆவலுட னேசபத மானபடி சீவகரென்
காலில்விழுந் தென்னையவர் கல்யாணம் செய்துமணம்
மாலையிடு வாரோவென்று வருந்தியவள் கேட்கலுமே
அவ்வளவிற் காமரசன் அண்டைமறை வானவனும்
செவ்வையுடன் [1]கெவுளியைப்போல் செப்பிட்டா
ரம்மானை!

அந்தக் கெவுளிசொல்லை அன்புடனே கேட்டவளும்
சந்ததமும் அன்புடனே சந்தோஷ மாகியேதான்
காமரசன் தன்னையவள் கைதொழுது தானிருப்பாள்
கோமளமாய் சீவகரும் கொண்டுநின்றார் தன்சொரூபம்
கண்டந்த சீவகரைக் காதலுடன் நாணமுற்றே
ஒண்டியொரு மூலையிலே ஓடினள்கா ணம்மானை!

அவ்வளவிற் சீவகரும் அவள்காலைத் தான்பிடித்து
செவ்வையுடன் நின்சபதம் சென்றதுகா ணென்றுசொல்லி
[2]நலங்கனிந்து நின்றவளை நாடியவர் தானணைத்து
திரைகட்டி யவ்விடத்தே சீவகரு மப்பொழுது
சுரமஞ் சரியுடனே சுகமனுப வித்தனர்காண்
அந்த வயணமெல்லாம் ஆணழகி தோழியர்கள்
சந்ததமு மேயறிந்து தானிட்டார் காவணமும்
மாதுசுர மஞ்சரியார் வாட்கண்ணார் தன்சபதம்
நீதமுட னிப்பொழுது நிறைவேறிற் றென்றவள்தான்
அன்னைபிதா தன்னுடனே ஆணழகி செப்பிடவே
மன்னவனார் சீவகரும் வந்துபுத்தி சேனருடன்
கூடியவர் தம்மிடத்தே கோலமுடன் சேர்ந்தவர்கள்
நீடியதோர் கந்தோர்க்க செட்டியர்க்கே நேசமுடன்
சொன்னார்கா ணப்பொழுது துங்கமுட னம்மானை!

---

1 பல்லி சொல்லுதல். 2 எதுகை வரியில்லாததால் இங்கு வரி விடுபட்டுளது போலும்.

அன்னாளி லிங்கொருவர் ஆருமறி யாதவண்ணம்
நல்லசுப லக்கினத்தில் நாரிசுர மஞ்சரிக்கே
வல்லபனார் சீவகரும் மாலையிட்டா ரம்மானார் !

அன்றிரவு மந்தசுர மஞ்சரியார் தன்னுடனே
ஒன்றியேதான் சீவகரும் ஒண்மையுடன் தானிருந்தார்
காம சுகமெல்லாம் கரைகண்டே மற்றவரும்
கோமளமாய் வாழ்ந்து குலாவியே தாமிருந்தார்
இந்த விதமாக இனியிருந்த பிற்பாடு
அந்தசுர மஞ்சரியா ரிலம்பமுற்று மம்மானார் !

அம்மானா ரம்மானார் ஆடியசீ ரம்மானார் !
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானார் !!

**9-வது**
**சுரமஞ்சரியார் இலம்பகம்**
**முற்றும்.**

# 10—வது
# இலக்கணையாரிலம்பகம்

## கதைச் சுருக்கம்

சீவகன், பின்பு மாமனைக்காணப் புறப்பட்டுச்சென்று தோழர்களுடன் விசயநாடடைந்து ஒரு சோலையில் தங்கித் தனது வரவைத் தன் மாமன் கோவிந்தனுக்கு, ஆளனுப்பித் தெரிவித்தான். அவன் எல்லா மரியாதைகளுடனும் எதிர் கொண்டழைத்துச்சென்று அரண்மனையில் இருத்தி நலன் விசாரித்திருந்தான்.

அப்போது கட்டியங்காரன் விடுத்த ஓலையினைப் புலவரிடம் காட்ட, அவர் அதனை வாசித்தார். அதில், "அரசன் யானை மதங்கொண்டு நூற்றுவரை வீதியில் மிதித்து அழித்தது. அப்போது அரசன் சச்சந்தன் வரவே அது அரசனையும் மிதித்து அழித்தது. அதனாலிங்கு அரசர் இல்லை. நீர்வந்து அரசை ஏற்றுக்கொள்ளும்" என்று இருந்தது. கோபங்கொண்ட கோவிந்தன், 'அரசனைக் கொன்றதுமல்லாமல் நம்மையும் கொல்ல அழைத்திருக்கின்றான்' என்று கூறினான்.

அதுகேட்டுச் சினங்கொண்ட சீவகன் துடித்தான். அப்போது, 'ஒரு தந்திரம் செய்யவேண்டும்' என்றுகூறி, 'தன் மகள் இலக்கணையுடன் இராசமாபுரம் செல்ல வேண்டும்' என்றுகூறி, அவ்வாறே, சேனையுடன் சென்று, இராசமாபுரத்தின் ஒரு யோசனை தூரத்தில் தங்கி, ஒரு சூக்கும சூத்திரம் அமைத்து, "அதிலுள்ள மூன்று சூத்திரங் களையும் அம்பெய்து வீழ்த்துவானுக்கு என்மகள் இலக்கணையை மணம்புரிவிப்பேன்" என்று முரசறைந்தான்.

எல்லா மன்னர்களும் வந்தனர். காட்டாங்கனும் வந்தான். இலக்கணைமீது மோகத்தால் எல்லா மன்னர்களும் தோற்றனர். ஆறு நாட்களளவும் எய்வாரில்லை. அப்போது சீவகன் எல்லோரும் காணும்படி அம்பெய்து அறுத்து வீழ்த்தினன். மக்கள் ஆர்ப்பரித்தனர். கோவிந்தன் "சிங்கம்போன்ற காட்டாங்கக் கழுதையினை வீழ்த்தக் காவலனும் சீவகன் தோன்றினன்" என முரசறைந்தான்.

கோபங்கொண்ட காட்டாங்கன், நம் கையிலகப்பட்ட சீவகனைத் தப்பவிட்டதென்னே? என்று தன் மைத்துனனைக் கோபித்துக்கொண்டான். சதுரங்க சேனைகளுடன் போர் செய்தான். (காட்டாங்கன் போரில் மாண்டான்) கோவிந்தன் தன் மகள் இலக்கணையைச் சீவகனுக்குத் திரு மணம் செய்துவைத்தான்.

**10-வது இலக்கணையாரிலம்பகக்**
**கதைச் சுருக்கம்**
**முற்றும்.**



## 10-வது
## இலக்கணையாரிலம்பகம்

அம்மானை ரம்மானை ஆடியசீ ரம்மானை!
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை!!

இலக்கணையைச் சீவகனார் இலட்சணமாய் மாலையிட்ட
வக்கணையை நாம்பாடி வளமுடனே யாடிடுவோம்
கோவிந்த மாமனென்னும் கோமா னிருக்குமிடம்
ஆவலுடன் செல்வதற்கே ஆசையுற்று ரன்னணமே
பட்டணத்துக் கேகவென்றே பயணமிட்டா ரம்மானை!

நட்டணைசேர் மாமனையே நலமுடனே காணுகைக்கு
தோழருடன் சீவகரும் சோதரருங் கூடியேதான்
வாழுமே மாங்கபுரம் வட்டாரந் தாங்கடந்து
விசயமெனும் நாட்டையவர் மேவியே சேர்ந்தவர்கள்
இசையுமொரு பூங்காவில் எல்லோரு மாயிருந்து
கோவிந்த ராசனெனுங் கோமான் தனக்குமப்போ
ஆவலுடன் தன்வரவை அறிக்கையிட வேணுமென்று
ஒற்றனை ஏவலுற்றார் உண்மையுட னம்மானை!

வித்தார மாகியதோர் விசேட மதுகேட்டே
சந்தோச மாயரசன் தன்னுடைய நாட்டவர்க்குக்
குந்தாம லே[1] உலுப்பை கொண்டுவரச் சொல்லியவர்
நாட்டவரை யெல்லாம் நலமுடனே தானழைத்து
கூட்டியே பட்டணத்தைக் கோலமுடன் சிங்காரித்து
உலுப்பைதனைக் கொண்டவர்கள் ஏற்கவே தான்கூடி
கெலிப்புடனே கோவிந்த கீர்த்தியெனு மப்போது
மேளம் அடிபடவே வீணைபலர் வாசிக்க
தாளம் அடித்துடனே தையலர்க ளாடிவர

1 முதியோர், வறியோர், கீழ்ப்பட்டோர் முதலானவர்களுக்குக் கொடுக்கும் உணவு.

கவிவாணர் பாடிவர காவலர்க ளோடிவர
[1]நவநிதி நாட்டியமுடன் ராசேந்திரன் கொண்டுசெல்ல
சீவகரு மப்பொழுதே சென்றெதிரே ஓடிவந்து
ஆவலுடன் மாமனுட அடிதொழுதா ரம்மானை!

மாமன் மருமகனை வாரியெடுத் தேயணைத்து
காமனெனுஞ் சச்சேந்திர காவலனுஞ் சென்றெழுந்து
வாய்த்ததனை யெல்லாம் மனையிலுள்ளோ ரும்வினவி
வீரியதன் மாளிகையில் வேகமுட னேயழைத்து
வந்தே யவர்தனக்கும் மாலைமுடித் தோழருக்கும்
[2]முந்தா சனமுதவி மோகமுடன் தானிருந்து
விருந்துசமைப் பித்தனர்காண் வேகமுட னம்மானை!

பரிந்தபுகழ்ச் சீவகர்க்கும் பட்சமுள்ள தோழருக்கும்
போசனங்கள் பண்ணிவைத்து பொருந்தியதாம் பூலமுடன்
வாசனைசேர் கந்தமுடன் வகைவகையாய்த் தான்கொடுத்து
மன்னனுந்தான் கோவிந்த மாமனுந்தா னப்பொழுது
தன்னுடனே கொண்டிருந்தான் தாகமுட னம்மானை!

கோவிந்த ராசனெனும் கோமானு மப்பொழுது
காவலனுங் காட்டாங்கக் காரன்முன் னுள்நமக்கு
ஓலைவர விட்டனன்காண் என்றுமந்த ஓலைதனைக்
கோலமுடன் வாசியென்றே கொற்றவனுர் கேட்கலுமே
வாசித்தா ரோலைதனை [3]வக்கணையு மம்மானை!

மாசில்லாச் சச்சேந்திரன் மன்னவனுர் தன்னுடைய
அசனிவேக மென்பதொரு ஆனைமதப் பட்டதுதான்
நிசமுடனே பாகரொரு நூற்றுவரை யேநிலத்தில்
மிதித்தவரைக் கொன்றதுதான் வீதிவரும் போதரசன்
இதத்துடனே தானுமப்போ ஏகிவெளிப் பட்டவனும்
கண்டந்த யானையின்மேல் காவலனுஞ் சச்சேந்திரன்

---

1 நவநீதி என்றுளது. (ஏட்டிலே புள்ளியிடப்பட்டுள்ளது.)
2 முந்தசன்ம முதவி என்றுளது.
3 விற்பன்னர்—கற்றோர்-புலவர்.

அண்டி யெதிர்த்ததனுல் யானையது கொன்றிடவே
பட்டணத்தைக் காக்கவல்ல பார்த்திபரிங் காருமில்லை
சட்டமுடன் நீங்கள்வரத் தயவுபண்ண வேணுமென்று
ஓலையுள்ள வாசகத்தை ஓதினர்கா ணம்மானை!

கோலமுடன் கேட்டரசன் கோபித்தே கண்சிவந்து
கொற்றவனைக் காட்டாங்கன் கொன்றதுவு மல்லாமல்
நத்தியுமே நம்மையுந்தான் நாட்டமுடன் கொல்வதற்கு
வரவிட்டா னேலையென்றே மகாகோப மாயவரும்
தெரிவித்தான் சீவகர்க்குத் திறமுடனே யம்மானை!

கேட்டந்த சீவகர்க்குக் கெண்டைவிழி தான்சிவப்ப
மூட்டிவிடும் அக்கினிபோல் மூண்டெழுந்து கோபமுடன்
தனித்தனியே தானிருக்கும் தானுமந்த வேளையிலே
மன்னவனுங் கோவிந்த மாமனவன் கூறிடுவான்
இப்படிக் கொத்தவன்காண் இசைகேடன் காட்டாங்கன்
[1]சர்ப்பனைகள் செய்துவரும் [2]சாமி [3]துரோகிதனை
செயித்திட வேணுமென்று செப்பியபின் னம்மானை!

குயுக்தியுடன் ஓர்வசனம் கூறிடுவா னப்பொழுது
நம்முடைய புத்திரியெனும் இலக்கணையார் தம்முடனே
செம்மையுடன் ராசபுரம் சென்றிடுவோ மென்றுசொல்லி
[4]சதுரங்க சேனையெல்லாம் [5]சார்ந்துகூடக் கும்பொழுது
மாதுமகள் இலக்கணையார் வாஞ்சையுடன் போயரசன்
ராசபுர மென்னுமொரு லட்சணமாம் பட்டணத்தை
யோசனை தூ ரம்மெனவே ஓங்கியவர் தண்டுவிட்டு
கோவிந்த மகராசன் கோலமுடன் அந்திடத்தில்
தாம்வந்த சேதியெல்லாம் சதிருடன்காட் டாங்கனுக்கு
சொல்லி யனுப்பிவைத்தார் தூதருட னம்மானை!

---

1 வஞ்சனை. 2 சாமி—அருகன்; காமி எனல் பொருந்தும். 3 துரேகிதனை என்றுளது. 4 சாதுறங்க என்றுளது. 5 சாங்க முடநப்பொழுது என்றுளது.

வல்லவனும் காட்டாங்க மன்னவனுந் தான்கேட்டு
ஆனையைந்து தேருமொன்று ஐயிரண்டு மாவுடனே
தானேயவன் சிங்காரித்துத் தார்வேந்த னுக்கனுப்பக்
கோவிந்த மகராசன் குஞ்சரத்தோ டோர்குதிரை
மாவிந்தை [1]யாகிவரக் கண்டானே காட்டாங்கன்
[2]கட்டியேதான் தன்னடியில் கம்பமொன்று தானிறுத்தி
மன்னவனுக் கேயனுப்ப வாகுடனே யம்மானை !

நன்னயமாய்ப் பிரியமுடன் நயந்துமவர் தானிருக்கும்
வேளையினிற் கோவிந்த வேந்தனுமே யப்பொழுது
மேளமுடன் சூத்திரமோர் விந்தையுட னுண்டுபண்ணி
[3]அன்புடனே யோர்சூத்திரம் அதுவும்வலம் புரியாக
அதுநுனியில் ஓர்சூத்திரம் அதுவும்இடம் புரியாக
இதமுடனே தான்சுழலும் [4]ஏதலுடன் சூத்திரத்தை
' அடிச்சுழலின் மேலிருந்து அம்மூன்று சூத்திரமும்
முக்குடனே யெய்தவர்க்கு மோகமுட னிப்பொழுதென்
இலக்கணை யெனுமகளார் லாவண்ய சுந்தரியை
பக்குவமாய்க் கல்யாணம் பண்ணியே நானிடுவேன்'
என்றே முரசறைந்தான் எண்டிசையோர் தாமறியப்
பண்ணுகிக் கோவிந்த பார்த்திபனு மம்மானை !

நாட்டிலுள்ள ராசவர்க்கம் நலமுடனே தான்கேட்டு
போட்டியுட னவ்விடத்தே போந்திறங்கி மன்னரெல்லாம்
[5]ஏதலுடன் தண்டுவிட்டே இறங்கினமன் மன்னவனும்
காதலுடன் மற்றுமுள்ள கனவேந்தர் தன்னையெல்லாம்
வந்திடவென் றேமுரசு வாகுடனே [6]தானறைய
அந்தமுட னெண்திசையி லானநர பதிகளெல்லாம்
வாஞ்சையுட னிலக்கணையை மாலையிட வேணுமென்றே
சாஞ்சவர்கள் வந்திழிந்தார் சகலருமே யம்மானை !

வாத்தியங்கள் தான்முழங்க மதகரிக ளோலமிட
ஏற்றமுடன் சாகரத்தில் எழிலுடைய [7]கோஷணைபோல்

---

1 யாகியேதான் வாக்கடநே என்றுளது. 2 & 3 வரிகள் விடுபட்டுள்ளன போலும். 4 ஏதலுடம் என்றுளது. 5 ஏடலுந் என்றுளது. 6 தானறிய என்றுளது. 7 ஒலி.

சமுத்திரம் திரண்டதுபோல் தாரரச ரெல்லோரும்
சமத்தனுற் சூத்திரத்தைத் தானெய்தே யிலக்கணையை
மாலையிட வென்றவர்கள் மன்னரெல்லாம் வந்திறங்கி
சாலமகிழ்ந் தேயிருந்தார் சந்ததமு மம்மானை!

அப்பொழுது காட்டாங்கன் ஆனையின்மேல் தானேறி
செப்பமுட னேருமரர் சேரஒரு நூற்றுவரும்
ஆனைத் திரளுடனே அன்புடனே கூடியேதான்
சேனையுடன் மன்னவரும் சேர்ந்தே ஒருபுறத்தில்
வந்தே இறங்கியவன் வண்மையுடன் வீற்றிருக்க
சந்ததமு மப்பொழுது தாரரச ரெல்லோரும்
ஒருவ ரொருவருடன் ஓசையுடன் தான்வந்தே
மருவிநின்றே கம்பத்தை வாஞ்சையுட னம்மானை!

[1]முக்கயிறை யெய்திடவே முடுகியதோர் சூத்திரத்தை
ஒக்கப் படாமலேதான் ஓடியவர் தோற்றனர்காண்
வந்திருந்த மன்னரெல்லாம் வகைவகையாய் எய்தலுமே
அந்தமுடன் தோற்றுநின்றார் அனைவோரு மம்மானை!

ஆறுதின மட்டாளவும் அரசர்கள் மெய்திடமே
தாறுமா றாகிடவே சகலருமே தோற்றுநின்றார்
இப்படி யாகியேதான் யெய்யுமவ ரில்லாமல்
துப்புடைய மன்னரெல்லாம் தோற்றிருந்த வேளையிலே
காட்டாங்கக் காரனொடு காவலனும் பார்த்திருக்க
தாட்டீகச் சீவகரும் தன்தோழ மாருடனே
வந்துமே சூத்திரத்தின் மாமுகத்தின் முன்னில்நின்றே
விந்தையுடன் [2]முக்கயிறின் மிசைநோக்கி யோரம்பால்
[3]அதனை விழும்படிக்கே அவருமெய்தா ரம்மானை!

வித்தாரச் சீவகனார் விற்பிடித்த கைவிசையும்
அம்புபிடித் தெய்யுமந்த ஆண்மையுள்ள சூட்சமமும்
[4]இம்பமுட னெய்தபடி எவருங்கா ணதிருக்க

---

1 மூக்கவரை என்றுளது. 2 மூக்கவரின் என்றுளது. 3 அவனை என்றுளது. 4 இன்பமுடன்.

[1]முக்கயிறுங் கீழ்விழவே மோதிசமத் காரமுடன்
சிக்கெனவே யெய்துநின்றார் சீவகரு மம்மானை!

அற்று விழுந்ததுகாண் அம்மூன்று [2]தன்கயிறும்
அப்போது மகாசனங்கள் உகமையுடன் பார்த்திருக்க
கோவிந்த மகராசன் கோமானுஞ் சீவகரை
மாவிந்தை யாய்நோக்கி வாக்குரைப்பா ரம்மானை!

சச்சேந்திர மன்னவனார் தன்குமரன் சீவகரும்
உச்சிதமாய்ச் சிங்கமிணை ஒப்புடைய காட்டாங்கக்
[3]கழுதையினை விழவெய்ய காவலனுஞ் சீவகரும்
பழுதில் நிலாதபடி பார்த்திபனுந் தோற்றியிட்டான்
என்றே முரசறைந்தார் ஏதலுட னம்மானை!

பன்றாகிக் கேட்டவனும் பாங்குடைய காட்டாங்கன்
கூறுவா னப்பொழுது குரோதமுடனேமதத்து
சீறியவ னம்முடகைச் சிக்கினதோர் சீவகரைத்
தட்டிவிட்ட தென்னவென்றே தன்னுடைய மச்சினன்மேல்
நிப்பரமாய்ச் சீறியவன் நிட்டூரக் கோபமுடன்
தன்னுடைய சேனையென்னும் சதுரங்க மாபெலத்தை
பின்னிடவே [4]வாங்கிவரச் சொல்லியவன் பேதமுடன்
கூடியவன் சேனையெல்லாம் குலாவிநின்றா ரம்மானை!

நீடி யணிவகுத்தே நீண்டியவன் போருஞ்செய்ய
சம்பிரமுற்றே காட்டாங்கன் சமர்செயவே நின்றிடுவான்
செம்மையுடன் தேர்புரவி சேனைமன்ன னானையுடன்
அணியணி யாய்நின்றே அலங்கரித்தா ரப்பொழுது
மணிமுடியார் கோவிந்த மகராச மன்னவனும்
இலக்கணையார் தன்மகளை லாவண்ணிய நாயகியை
அக்கணமே சீவகர்க்கு அன்புடனே தான்கொடுத்து
கலியாணம் செய்தனர்காண் காவலரு மம்மானை!

---

1 மூக்கவருங் என்றுளது. 2 தன்கவரும் என்றுளது. 3 கழுத்தையினை என்றுளது. 4 வாங்கியவர் என்றுளது.

மன்னுந் திரள்தோளான் வாட்கண்ணு ளென்னுமந்த
நல்லதொரு லக்கிணையா ரிலம்பமுற்று மம்மானர் !!

அம்மானு ரம்மானர் ஆடியசீ ரம்மானர் !
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானர் !!

**10-வது**
**இலக்கணையார் இலம்பகம்**
**முற்றும்.**

## 11—வது
# காட்டாங்கனை வெற்றிகொண்டது
## ( மண்மக ளிலம்பகம் )

### கதைச் சுருக்கம்

கோபமடைந்த காட்டாங்கன் சதுரங்க சேனைகளுடன் சண்டைசெய்ய ஆயத்தமானான். சீவகன் தன் மாமன் கோவிந்தனுடைய சதுரங்க சேனைகளுடன் போருக்கு எழுந்தான். அதுபோது கோவிந்தன் மற்ற (தோற்ற) அரசர்களை நோக்கி, "காட்டாங்கனுடன் போருக்கெழும் மன்னர்கள் அங்கு செல்லுங்கள். சீவகனுடன் சேரும் மன்னர்கள் இங்கு வாருங்கள்" என்று முரசறைய, எல்லா மன்னர்களும் சீவகன் பக்கல் சேர்ந்தனர்.

போர் மூண்டது. இருவர் படையும் மோதின. சீவகனுடைய அம்பு, ஒளிந்தவர்களையெல்லாம் கொன்றது. காட்டாங்கனும் சீவகனும் நேருக்குநேர் போரிட்டு நின்றனர். காட்டாங்கன் இறந்தான். சீவகன் வெற்றி வாகை சூடினான்.

**10—வது**

**காட்டாங்கனை வெற்றிகொண்ட**

**மண்மக ளிலம்பகக் கதைச் சுருக்கம்**

**முற்றும்.**

## 11—வது
# காட்டாங்கனை வெற்றிகொண்டது
( மண்மக ளிலம்பகம் )
(வெற்றிலம்பகம்)

அம்மானை ரம்மானை ஆடியசீ ரம்மானை !
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை !!

தாட்டீக சீவகனார் சம்பிரமுட னப்பொழுது
காட்டாங்கன் தன்னைவென்ற கதைபாடி யாடிடுவோம்
கல்லனைய நெஞ்சகத்தார் காட்டாங்கக் காரனெனும்
மல்லுத் திரள்தோளான் மகுடமுடி மன்னருடன்
ஆனையுடன் மாபுரவி அன்புடன்தே ருள்ளதெல்லாம்
சேனையுடன் கூடியவர் திரண்டே யொருமுகமாய்
அணிவகுத்தே கொக்கரித்து ஆர்ப்பரித்தா ரப்பொழுது
துணிவறிய கோவிந்த மகராசன் சொல்லிடுவான்
[1]காட்டாங்கக் காரனுடன் காவலர்கள் கூடுமவர்
தங்குமரன் சீவேந்திரன் தன்னுடனே சேரும்மன்னர்
இங்குவந்து சேர்ந்திடுவீர் என்றே முரசறைந்தான்
அவ்வளவில் அட்ட திக்கில் அண்டியிடும் மன்னரெல்லாம்
செவ்வியிடும் சீவகர்பால் சேர்ந்தனர்கா ணம்மானை !

இருவர் படைத்திரளும் ஏகமாய்க் கூடியேதான்
மருவியவர் இட்டசண்டை வளமுமென்றன்
தன்மையென்றால்
இனிதுடனே சக்கரவர்த்தி இசைந்ததொரு யுத்தமது
இராமருடன் ராவணன்மல் லாடியிட்ட போரதுவும்
இந்நால் வகைப்போரும் ஏதலுட னன்றியேதான்
நாணயமாய்ப் பார்ப்பளவில் நாடியவர்க் கிணையுமின்றி

---

1 வரி விடுபட்டுளது போலும்.

இவ்வகையி னுலிவர்கள் எழுச்சிமகா யுத்தமதால்
செவ்வியதா யாறதுபோல் சேர்ந்துதிர மோடியிட
யானைக ளும்புரவி யங்குரத்தச் சேற்றில்விழும்
[1] தீனமுடன் வீரலிடும் எண்திசையு மோசையிட
தேர்புரவி யற்றுவிழ சீவகனுர் தம்முடைய
அருள்விசையி னுலரசர் கோலமுடி யிற்றுவிழ
மண்டலீகர் மாமகுடம் மண்ணின்மிசை யேபுரள
கொண்டைவிரித் [2] தேகவந்தம் கோலமுட னுடியிட
குடைகள் அறுந்துவிழக் குடைக்காம்பு இற்றுவிழ
அடைவாகு முங்காயம் ஆகாசம் போயுலவும்
யுத்தகளம் போர்செய்து இருந்தனர்கா ணம்மானுர் !

சந்ததமும் சீவகனுர் தன்னுடைய அம்புவளம்
ஆகாசம் போனவரை அண்டியது தைத்துவரும்
சாகாம லேயொளித்துச் சந்தேக மானவரை
பாதாளம் போயொளித்த பார்மன்னர் தங்களையும்
தூக்கியே மலேயேற்றி, தூரமொளிப் போரையுந்தான்
எங்கெங்கே போனுலும் எத்தூரஞ் சென்றுலும்
துங்கமுடன் சீவகனுர் நற்றேழ மார்களுடன்
அம்பதனுல் மாண்டவர்கள் அப்போ கணிதமில்லை
செம்பொன்முடிச் சீவகனுர் செங்கையினு லப்பொழுது
காட்டாங்கன் தன்குமரன் காளையொரு நூற்றுவரும்
தாட்டீக மில்லாமல் சகலரும் போய்விழுந்தார்
அப்பொழுது சீவகனுர் அம்பொன்மணித் தேர்முடிக்கி
செப்பமுட வைரியின்மேல் சென்றனர்கா ணம்மானுர் !

காட்டாங்கன் ஆனையுடன் கால்கடுகி யோடிவந்து
தாட்டீக மாகவேதான் துங்கையில்வாள் தோளில்வைத்து
சீவகரை வெட்டவென்றே சிக்கனவே நோக்கலுமே
காவலனுர் சீவகரும் கடினமுடன் தானுரைப்பான்
நம்முடைய வில்லதனுல் நாசமுற்றே யுன்சேனை
செம்மையுடன் மாண்டிருக்க திடத்துடனே நீயுமிப்போ
வெட்டிடவே நம்மையும்நீ வீரவாளை [3] யோங்கிநின்ருய்

1 திநமுடன்லிரலிடுமாம். 2 றேகமந்தங் என்றுளது. கவந்தம் —(தலையிழந்த முண்டம்) உடற்குறை. 3 ஞேக்கி நின்ருய் என்றுளது

திட்டமுட னென்றுசொல்லி தேரையவ ருஞ்செலுத்தி
காட்டாங்கன் முன்புசொல்வார் காவலரு மம்மானை !

"தாட்டீகமா யானையின்மேல் சதிருடனே நின்றிடவும்
வல்லவனோ [1]சாமதுரோகி [2]மர்க்கடமு மல்லவோநீ
மல்லபடை யின்முகத்தில் நானுமை லென்னெதிரே
நின்றே படைபொருது நிற்கவும்நீ வல்லையோதான்?"
(என்றே) யவன்தனையும் இகழ்ச்சிபல வேயுரைத்து
அவனருகில் நின்றகசம் அத்தனையும் தேர்புரவி
பரவியிட்ட கால்பலங்கள் பலிசுடனே யத்தனையும்
மடியும் படிபொருது மாய்த்துவிட்டா ரப்பொழுது,
கடுகியதோர் காட்டாங்கன் கண்டுமவன் கண்சிவந்து
சீவகர்மேல் வந்தெதிர்த்தான் சீர்கேட னப்பொழுது
கோவிந்த மகராசன் கோபமுடனுந் தனை
நாட்டமுடன் சீவகனார் அங்குவந்து சேரலுமே
[3]பகையுமுடன் காட்டாங்கப் பாவியவன் பட்டுவிழ
கூரம்பா லெய்துகொன்றார் கோமானுஞ் சீவகனார்
ஆருமில்லாக் காட்டாங்கன் அழிந்துவிட்டா னம்மானை !

பாவிபர தேசியைப்போல் பாழ்நரகில் வீழ்ந்துவிட்டான்
அம்மானை ரம்மானை ஆடியசீ ரம்மானை !
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை !!

## 11—வது
## காட்டாங்கனை வெற்றிகொண்டது முற்றும்.

---

1 முன்பு சாமிதுரோகி என வந்துளது. 2 மக்கடமு என்றுளது. மர்க்கடம்—குரங்கு. 3 வரி விடுபட்டுளது போலும்.

## 12—வது
# சீவகனூர் ஆட்சிவளம்

## ( பூமகளிலம்பகம் )

### கதைச் சுருக்கம்

காட்டாங்கன் இறந்தபின்னர் மன்னர்கள் எல்லோரும் கூடி, 'சச்சேந்திரருக்கும் விசயமகாதேவிக்கும் நீரே திருக்குமாரன் என்று அறிந்தோம். உமக்கே மகுடம் சூட்டுவோம்' என்றுகூற, முரசறைந்தனர். கோவிந்த மன்னன், மற்றுமுள்ள மன்னர்களையெல்லாம் அழைத்து, மங்கலம் முழங்க, சீவகரை அரசுகட்டிலிலேற்றி, வீற்றிருந்தான்.

சில நாட்கள் கழிந்தன. மன்னர்கள் தங்கள் தங்கள் நாடடைந்தனர். கோவிந்த மன்னன், விசயையை அனுப்புவதாகக் கூறிச்சென்றான். தன் மனைவியர் எண்மரையும் சீவகன் சேர அழைத்துவந்து மகிழ்ந்திருந்தான். எண்டிசையும் படையெடுத்துச் செயித்துச் சக்கரவர்த்தியானான். மக்களைப்பெற்று மகிழ்ந்தான். மகளை நல்ல மணாளனுக்குக் கொடுத்து சீர்வரிசைகள்செய்தான். மகனுக்கு நல்ல மாதரசியைத் தேடி மணமுடித்தான். பேரப்பிள்ளைகளைப் பெற்றெடுத்தான். அறங்கள் பலபுரிந்தான். சினதேவனை வணங்கினான். தான தருமங்களைச்செய்து பல்லாண்டுகள் ஆண்டான்.

சீவகன் ஒருநாள் நிலைக்கண்ணாடியின் முன்நின்று பார்க்க, ஒரு நரையைக் கண்டான். உடனே யாவும்

வெறுத்தான். அப்போது ஒரு முனிவர் வந்தார். அவரிடம் பல உண்மைகளைக் கேட்டுத் தெளிந்தான். பின்னர், மன்னர்களுக்கு வீடுபேறுண்டோ?' என வினவ 'தவம் செய்த மன்னர்கள் வீடு பெற்றார்கள்' என்று விளக்கிக் கூறவே, சீவகன் தன் மகன் மகிபாலனுக்குப் பட்டம் கட்டிவிட்டுத் துறவு பூண்டான்.

முனிவரிடம் தீக்கையின் மார்க்கமெல்லாம் கேட்டறிந்து, தனக்கும் தீக்கை வேண்டிப் பெற்றான்.

## 12—வது
## சீவகனுராட்சிவளக் கதைச்சுருக்கம்
## முற்றும்.

12—வது

## சீவகனார் ஆட்சிவளம்

(பூமகளிலம்பகம்)

அம்மானை ரம்மானை ஆடியசீ ரம்மானை!
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை!!

சீவகரும் சத்துருவை செயித்தே இராசபுரம்
ஆவலுடன் ஆண்டவளம் அதுபாடி யாடிடுவோம்
காட்டாங்கன் பட்டபின்பு காதலுட னப்பொழுது
தாட்டீக மன்னவனும் சதிருடைய சீவகனார்
மகராச மன்னவனும் மற்றுமுள்ள மன்னரெல்லாம்
[1]இகலாகிக் கூடியவர் ஏதுசெய்தா ரம்மானை!

"சச்சேந்திர மன்னவர்க்கும் தார்விசய மாதினுக்கும்
நிச்சயமாய் சீவகரே! நீர்குமரன்" என்றுசொல்லி
ஆனந்த [2]பேரியை அறைவித்தா ரம்மானை!

ஆனந்த மாகியேதான் சகலருமே ராசபுர
பட்டணத்தில் வந்தனர்காண் பாங்குடனே யம்மானை!

நட்டணைசேர் ராசவர்க்கம் நல்லதுரை மக்களுடன்
காட்டாங்கக் காரனெனும் கருணையில்லாச் சத்துருவை
தாட்டீக மாகியவர் தான்செயித்த சம்பிரமத்தால்
சீவகர்க்கே பட்டமிப்போ தீர்க்கமாய் ஆச்சுதென்று
ஏவலுட னந்நகரில் எண்திசையுந் தானியம்ப
பேரியறை வித்தனர்காண் பெருக்கமுட னம்மானை!

(சீரியதோர்) லக்கினத்தில் சிங்கா தனத்தின்மிசை
காவலருஞ் சீவகரைக் காதலுட னேயழைத்து
கோவிந்த மகராசன் கோமானும் மற்றுமுள்ள
மன்னவனும் மண்டலீகர் மந்திரிசே னைபதிகள்

---

1 இகலேகிக் எனல் பொருந்தும். 2 பேரிகை.

பன்னுங்கலை வாணருடன் படைமன்ன ரத்தனையும்
புரோகிதர் பாடுநர்கள் புகழ்நடன மாடுவர்கள்
விரோதியரை வெல்லவல்ல வீரர்படைமற்றுமுள்ள
சகலருமே வந்தொழ தாசியர்கள் நடனமிட
மொகுமொ கெனச்சங்கம் முழங்கியிடக் காளமுடன்
மும்முரசு நின்றே முழக்கமுட னேமுழங்க
செம்மையுள்ள நாககரம் திருச்சின்ன மும்மூத
மேளம் முழங்கியிட விசையையுட புத்திரர்க்கு
தாள மடிபடவே சங்கீதம் மிஞ்சியிட
வெண்கவரி மங்கையர்கள் வீசியிடக் கோலமுடன்
துங்கமுடன் பட்டருந்தான் தொழுது'பராக்'கென்றிடவே
தவளக் குடைநிழற்றச் சச்சேந்திரன் பாலனுக்கு
குவலயத்துள் வீரரெல்லாம் கொலுமுகமாய்ச் சேவிக்க
[1](இன்ன) புதுமையுடன் எங்கள்சீ வேந்திரரும்
மன்னவனு ரோலக்க மாயிருந்தா ரம்மானை!

இந்த வளமாக [2]இருந்துசில நாள்வரைமேல்
சந்ததமுஞ் சீவகனுர் தன்கைவிடை பெற்றவர்கள்
தங்கள் தங்கள் மாநகரில் சார்ந்தனர்கா ணம்மானை!

மங்களமாங் கோவிந்த மகராச மாமனுந்தான்
மருமகனுஞ் சீவகர்க்கே மதிபலவும் புத்திசொல்லி
அன்னையெனும் விசயமகா தேவியெனும் காரிழையை
அனுப்பிடுவே னென்றுசொல்லி அவர்போன பிற்பாடு
தேவியரை மன்னவனும் சேரவழைப் [3]பித்தவனும்
கனிக்கிணைசொற் கிள்ளையெனும் காதலியர் எண்மரொடும்
ஆவியுடன் காயமும்போல் ஆகியேதா னம்மானை!

காமசுக போகமதாற் காரிழையார் தங்களுடன்
சாமியெனுஞ் சீவேந்திரர் தானனுபவித்திடுவார்
பஞ்சுமலர் மெத்தையின்மேல் பாங்குசப்பிர கூடமதில்
மிஞ்சியதோர் பள்ளியறை மேலணைமேல் சீவகரும்

1 வரிகள் விடுபட்டுளது போலும். 2 இருந்துசிலை என்றுளது.
3 பித்தவரோ என்றுளது.

காதலியார் தன்னுடனே காதலுட னேயிருந்து
ஆதரவி னலணைந்தே அஞ்சொலினல் கொஞ்சிடவே
சுதம்பமெனும் சுத்தூரி செந்தபொடி குங்குமமும்
இதமுடனே கொங்கையின்மேல் விசித்திரமுடன் தான்பூசி
தாம்பூலம் கைகொடுத்தே சரச(முடன் தான்குலவி)
பூம்பாளை நல்லாளைப் புகழ்ந்துமுகத் தோடணைத்து
கொஞ்சுவார் பூங்கிளிபோற் கூடுவார் மாமயில்போல்
அஞ்சொலினற் பாடியேதான் ஆடினர்கா ணம்மானை!

காமனெனுஞ் சீவகனர் காரிழையார் தங்களுடன்
காமசுக முற்றவண்ணம் காணுகைக்கு மார்தரங்காண்
அவரனுப வித்தவிதம் அவரறிவ தல்லாமல்
புவனிதனில் மற்றெருருவர் போந்தறிய வொண்ணுதே!
காமனுட லீலையெல்லாம் காமனுக்கே யல்லாமல்
பூமிதனி லேயறிவோர் போந்தொருவ ருண்டோதான்
அப்படித்தான் காமசுகம் ஆரிழையார் தங்களுடன்
செப்பமுட னனுபவித்தார் சீவகரு மம்மானை!

இந்தவிதஞ் சீவகர்க்கு இருந்துசில நாள்வரைமேல்
சந்ததமும் ராச்சியத்தைத் தன்வசமே தான்படுத்தி
ஆனையுடன் தேர்புரவி ஆனசது ரங்கபலம்
(சேனைமிக வாய்ப்படைத்தே) சீவகரு மப்பொழுது
தண்டெடுத்தா ரெண்டிசையுந் தாடாள னம்மானை!

சண்டையுட னேசெயித்து சார்ங்கமுடன் ராச்சியத்தை
கட்டிவெகு வேந்தரையே [1]கைத்திறத்தி னற்செயித்தே
சட்டமுட னெண்திசையுந் தாடாளன் கீர்த்திபெற்று
சக்கர வர்த்தியைப்போல் [2]தனுமனுந் தாதியைப்போல்
வக்கிரமுடன் வாழ்ந்தவனும் விசயசெய முண்டாகி
சகலசன ரட்சகனும் சார்வபௌம னும்மாகி
உகமையுடன் வாழ்ந்துமவர் சுயபுத்திர புத்திரிகளை
அநேகமவர் பெற்றெடுத்து அன்புடனே தான்வளர்த்து
மனேகர மாய்வளர்ந்தே மகிழ்ந்திருந்தா ரம்மானை!

---

1 கைற்றிற்றநாற் செயிற்றே என்றுளது. 2 மன்மதனும் ரதியும்போல் எனல் பொருந்தும்.

கொடுக்குந் துறையறிந்தே குமாரியரைத் தான்கொடுத்து
(படுக்கை) நல்ல மெத்தையுடன் பாங்குடைய நாடுகளும்
அடுக்களையில் வேலைசெய்யும் மணக்கிமார் தங்களையும்
கொடுத்தனர்காண் சீதனமாய்க் கொற்றவனு மம்மானை!

கொள்ளுந் துறையறிந்தே குமாரருக்கெல் லாமரசன்
தெள்ளுமொழி மங்கையரை சிக்கெனவே [1] தான்தேடி
வதுவைதனை செய்துவைத்தார் வாள்வேந்த னப்பொழுது
இதமுடனே புத்திரரும் எழில்பேர மாருடனே
[2] கடல்போல செல்வம் கதிருடனே தான்பெருத்து
திடமுடனே நாளுஞ் சினவரனைப் பூசைசெய்து
மாதவர்க்கே யாகாரம் தான்மகிழ்ந் தேயளித்து
காதலுடன் நோன்புகளை காட்சியுடன் நோற்றுயர்ந்து
உத்தியா பனைவிதியும் உகமையுட னேமுடித்து
நித்தியா னந்தமுடன் நின்றனர்கா ணம்மானை!

பாடும் புலவருக்கும் பாரகலை வாணருக்கும்
நீடும் இரவலர்க்கும் [3] நிதம்நிதா னங்கொடுத்து
வீர முரசுடனே வெற்றிமுர சும்பெரிய
ஈரமுடன் தியாகமெனும் திருமுரசுந் தான்கூடி
மும்முரசு வாரியைப்போல் முழக்கமுட னேமுழங்க
செம்மையுட னேவெகுநாள் சீவகரும் வாழ்ந்திருந்து
கடல்போலச் செல்வம் கருணையுட னேபெருத்து
அடவுடனே வாழ்ந்தும் அவரிருக்கும் நாளையிலே
சீவகரும் கண்ணாடி செம்மையுடன் பார்க்கலுமே
மேவியிடும் ஓர்நரையை [4] வித்தமுடன் பார்த்தவரும்
மங்கையர்கள் தன்னிடத்தில் வைராக்கிய முந்தரசன்
சங்கையுடன் சம்சாரம் தான்வெறுத் திருக்கையிலே
(வந்தா) ரொருமுனிவர் வாகுடனே யம்மானை!

முந்தா தரவுடனே முயர்த்திய புராணகதை
அந்தமுட வியாக்கியானம் அப்பொருளைச் செப்பிடவே

1 தந்தேடி என்றுளது. 2 காலைபோல் என்றுளது. 3 நிதாநிதா என்றுளது. 4 விந்தையுடன் எனல் பொருந்தும்.

சந்ததமுங் கேட்டரசன் சாரணரை யேதொழுது
முன்னுளில் ராச்சியத்தை முயற்றியிட்ட மன்னவர்க்கு
நன்ருகச் சொர்க்கமுண்டோ நன்மையுடன் சொல்லுமென
முனிவரனுஞ் செப்பிடுவான் மோகமுட னப்பொழுது
என்னிதுதா னற்பசுகம் இறையவனே கேட்டருளீர்
முன்னுளில் மன்னவர்கள் மோகமுட னேதவசு
நன்ருகச் செய்தவர்கள் நல்கியிட்டார் மோட்சசுகம்
பெற்றவர்கள் தங்கதையைப் பேசியிட்டா ரம்மானை!

உற்றபடி கேட்டரசன் நோக்கிவை ராக்கியமுடன்
சிற்றின்ப மத்தனையும் தெளிந்துநரை கண்டோமிப்பால்
முற்றியபே ரின்பவளம் முடிவறிய வேணுமென்றே
மனந்தனிலே நிச்சயித்து வண்மையுட னப்பொழுது
கனங்குழையாள் காந்தருவ தத்தையெனும் காரிழையார்
மைந்தன்மகி பாலனெனும் மன்னனுக்கே ராசரீகம்
அந்தமுடன் பட்டமுந்தான் அவர்கட்டி யாளுமென்றே
சீவகரு மப்பொழுதே சேர்ந்துமொரு கோவிலிலே
[1] சாவகவே டத்தனுமாய்த் தாங்கிநெடு நோன்புகளை
நோற்றுமுற்று யர்பனையை நூல்விதி யால்முடித்தே
வீற்றிருக்கும் நாள்தனிலே வேதமுனி சாரணனும்
வந்தவத ரித்தவரை வாஞ்சையுட(ன்) மன்னனுந்தான்
சிந்தையுற வேவணங்கி செழித்தாறு நாளளவும்
வைத்திருந்து தீட்சையுடன் மார்க்கமெல்லாம்
கேட்டவராய்

நற்றவஞ்சேர் மாமுனியை நன்மையுட னேதொழுது
அடியே னெனக்கருளும் அன்புடனே தீட்சையென்று
திடமுடனே கேட்கலுற்ருர் சீவகரு மம்மானை!

அம்மானை ரம்மானை ஆடியசி ரம்மானை!
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை!!

## 12—வது
## சீவகனார் ஆட்சிவளம் முற்றும்.

---

1 சிராவகவேடத்தனுமாய் என்றுளது.

## 13—வது

# தீட்சா கலியாணம்

## ( முத்தியிலம்பகம் )

### கதைச் சுருக்கம்

தீக்கை வேண்டிய சீவகர்க்குச் சாரண முனிவன் நல்லதொரு நாளில் தீக்கை யருளினர். அப்போது, சீவகன் தேவியரும், மற்றும் பலரும் அவரிடம் தீக்கை பெற்றனர். சிலர் ஆண்டி, பரதேசிகளாயினர். தீக்கை பெற்ற சீவகன் நீண்டகாலம் கடுந்தவமியற்றிப் பன்னிரண்டு திங்கள் சென்ற பின்பு, தவம் முடிந்து, எட்டுத்திக் பாலர்களுடன், யக்ஞோபதேசம் பெற்று, சரீரபரித்தியாகம் செய்து, முத்தணுகி, முத்தியெனும் சித்தியைப்பெற்று, இன்ப நலனில் நீங்காதிருந்தான். முத்தியுலகத்தோர் கூடி அருகதேவனைப் பூசித்தனர்.

**13—வது**

**தீட்சா கலியாணக் கதைச்சுருக்கம்**

**முற்றும்.**

## 13—வது

# தீட்சா கலியாணம்

## ( முத்தியிலம்பகம் )

அம்மானை ரம்மானை ஆடியசீ ரம்மானை !
ஆரை யினிப்பாடி ஆடுவோ மம்மானை !!

சீவேந் திரப்பெருமாள் தீட்சாகல் யாணமதை
ஆவலுடன் பாடியேதா னாடுவோ மம்மானை !

நல்லதென்றே மாமுனிவன் நல்லசுப லக்கினத்தில்
செல்லமுடிச் சீவகனார் தீட்சைகொள்ளும் வேளையிலே
சீவகனார் தன்னுடைய [1]சிறியருந்தா னந்நகரில்
காவலரு மற்றுமுள்ள காந்தையருங் கூடியேதான்
சீவகனார் தன்னுடனே சேர்ந்தவர்க ளெல்லோரும்
ஆவலுடன் மாமுனிவன் பொன்னடித் தாமரையில்
வீரியதோர் தீட்சைபெற்றார் வேகமுட னம்மானை !

மாறியவர் தாஞ்சிலபேர் மாவிரத மாற்றுமல்
ஆண்டிகளுந் தாபசரும் ஆகினர்கா ணம்மானை !

பூண்டதொரு தீட்சையினார் பொற்புடைய சீவகரும்
உக்ரோக்கிர மானதவம் ஓங்கியவர் தானருளி
நிக்ராக்கிர மத்தனுமாய் நெடுநாள் தவசிருந்து

---

1 ஸ்ரீயர்—தனவந்தர்கள்—பெண்கள்.

பங்குனிவை காசியுடன் பரவு சித்திரை யானியவர்
திங்களொரு நான்கிலிவர் சேர்ந்துமலை யுச்சியிலே
யோகமுடன் தாங்கியபின் ஓராடி யாவணியில்
ஆகும்புரட் டாசியுடன் அற்பசி நால்மாதம்
சோலை யருகிருந்தே தொல்யோகம் தாங்கியவர்
கோலமுட னேதவசு கொண்டிருந்த பிற்பாடு
கார்த்திகை மார்கழிதை காதலுடன் மாசியுந்தான்
பார்த்திபனும் மாமுனிவன் பாங்குடனே சாகரத்தின்
[1] தீரமதில் யோகமவர் செப்பமுட னேயிருந்து
பாரமுனி வன்தவமே பண்ணலுற்று ரம்மானை!

இவ்வகையி னல்தவசு ஏற்றமுட னேமுடித்து
செவ்வையுட னேமுடிவில் சேருமத்திய காலமதில்
இந்திரனோ டக்கினியும் யமநிருதி யாம்வருணன்
சந்ததமும் வாயுடனே தங்கியகு பேரனுடன்
ஈசானன் தன்னுடனே எண்வகைதிக் பாலகரும்
யக்ஞோப தேசமவர் தானுகந்து சொல்லலுமே
சல்லேக னைவிதியாய் சரீரபரித் தியாகஞ்செய்தே
ஆசார மாகியவர் அன்புடனே வந்தணுகி
கர்ம மகற்றியேதான் காந்தியுட னம்மானை!

உல்லாச மாகியேதான் ஓங்கியவ ரப்பொழுது
நாற்கதி யாம்பகையை நன்றாக நீக்கியிட்டே
தீர்க்கமுடன் மோட்சகதி சென்றனர்கா ணம்மானை!

முத்தனுமாய் சித்தியுடன் மோகமுடன் தான்சேர்ந்து
சத்தந்த போகசுகம் தொட்டிருந்தா ரம்மானை!

---

1 திரமதில் என்றுளது.

அப்பொழுதே கற்பகத் தமரர்குழாம் வந்தணையும்
செப்பமுடன் [1]விரைந்தார்கள் செல்வரெனுஞ்
சோதிடர்கள்
கவணருடன் நால்வகையோர் பாங்காகத் தான்கூடி
தவளசங் கம்மொலிப்ப சகலகர துந்துபியும்
[2]புட்பருவ சங்களுடன் பொருந்தியவ ரோடிவந்து
அப்பனரு கன்பதத்தை அருச்சனைகள் தான்செய்து
தோத்திரங்கள் செய்தும் தொழுதே யடிவணங்கி
போற்றிசெய்தே கேவலமாம் பூசைசெய்தா ரம்மானார்!

அம்மானை ரம்மானார் ஆடியசீ ரம்மானார்!
ஆரை யிணிப்பாடி ஆடுவோ மம்மானார்!

## 13—வது

## தீட்சா கல்யாணம் முற்றும்.

## சீவகசிந்தாமணி அம்மானை முற்றும்.

---

குரோதி நாம சம்வத்சரம் ஐப்பசி-மீ' ம்வ மங்கள வாரம் பரணி நட்சத்திரம். இது கூடிய சுபதினத்தில் பொன்னூரிலிருக்கும் சந்திரநாத நயினார் குமாரன் சோமப் பிரப நயினார் அம்மானார் புத்தகம் எழுதி நிறைந்தது.

யாராவது எடுத்துக்கொண்டு வாசித்தபோதிலேயும், [3]சஞ்சீவி உருவாமல், புத்தகத்துடன் வாசித்துக் கட்டி வைக்கவும். அதற்குச் சம்மதப்பட்டவர்கள் புத்தகத்தைத் தொடவேண்டியது.

---

1 வரயந்தரர்கள் என்றுளது. 2 பூமாரி பொழிதல். 3 ஏடு.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ !

—திருவாசகம்.